2
குண்டூசி
ஏப்ரல் எட்டு அணா
ஜெமினியின்
சந்திரலேகா
என்றும் குறையாத இன்பமளிக்கும் அற்புதச் சித்திரம்...
மீண்டும் ஏப்ரல் 13 முதல் தென்னாடெங்கும்...
KCP

கிராம வாழ்க்கையின் சுக துக்கங்களைத் தத்ரூபமாகச் சித்தரிக்கும் உயரிய படம் . . .

விஜயாவின்...

சௌகார்

(தெலுங்கு)

டாக்டர் ஜி. வி. சுப்பராவ், என். டி. ராம ராவ், சிவராம், என். வி. ரங்கராவ், ஸ்ரீ வத்ஸவா, ரேலங்கி, ஜோக ராவ், வங்கரா சாந்தகுமாரி, ஜானகி, கனகம், ஸீதா

ஆகியோர் நடிப்பது

क्रियासिद्धिः सत्वे भवति

VIJAYA PRODUCTIONS L.

தயாரிப்பு - நாகிரெட்டி * சக்ரபாணி

கொலம்பியா
ரிகார்டுகளில் கேளுங்கள்
ஏ வி எம் புரொடக்ஷன்ஸ்
வாழ்க்கை
டாக்கிப் பாட்டுகள்
GE. 6685
உழவன் நாட்டியம்
பாகங்கள் 1&2
GE. 6686
உழவன் நாட்டியம் பாகம் 3
எண்ணி எண்ணி
GE. 6687
அன்னையே
ஏது ஏழைக்கு இன்பம்
GE. 6688
மனமேவும்-டடடா
ஆசை கொள்ளும்
GE. 6689
மனமேவும்-டடடா
செந்தமிழும் சுவையும்
GE. 6690
கோபாலனோடு
(மார்வாரி நாட்டியப்பாட்டு)
2 பாகங்கள்
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதராஸ் 2

மாதர் விரும்பும்....

கல்யாண
காலத்துக்கேற்ற
சகலவிதமான பட்டு,
நூல், ஸில்க் & இங்கிலீஷ்
ஜவுளி ரகங்களும்

கிடைக்குமிடம்:

C.N. எத்திராஜ் & கோ

17. கிடங்குத் தெரு, சென்னை. 1.

134123

ஸ்தாபிதம் 1920

தந்தி: நஸ்யம்
மதருஸ்

P.V. RAJAN'S SUPERIOR MADRAS SNUFF

TRADE MARK

உலகமெங்கும்
புகழ் பெற்றது.
பல எக்ஸிபிஷன்
களில் மெடல்கள்
பரிசு பெற்றது.

நெ. 1 எக்ஸ்ட்ரு
ஸ்பெஷல்
பட்டணம் பொடி
ஒரு தோலா டின்க
ளிலும் கிடைக்கும்.

பி. வி. ராஜன் & கம்பெனி

உயர்ந்த பட்டணம் பொடி
& *R. S.* சுகந்த மூக்குத்தூள் பாக்டரி
அரக்கோணம் & மதருஸ்.

(மற்ற பொடி தினுசுகளுக்கும், விவரங்களுக்கும் எழுதவும்.)

பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல. டாக்டரும் அல்ல. எனக்கு வைத்திய மும் தெரியாது. நானே உங்களைப்போல் ஓர் குடித்தனப்பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப்பின் துர்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் எனக்கு ஏற்பட்டு விட்டது. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொர்ப்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளிவருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக்கொண்டே வந்தது. முகம் வெளுத்துவிட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறு கிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டுவிட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒருநாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சைபோட வெளியில் வந்ததும், அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சுபோன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவ ரைக் கூப்பிட்டு, ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங் கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்துவிட்டது. ஆண்ட வன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்க ளுக்கு நன்மை செய்து வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக் காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2-14-0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு]. தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழு துங்கள். என் கையாலேயே மருந்து தயாரித்து, வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத் தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதவேண்டாம்.

BIBI CHARAN PIARI

SANT NAGAR (G.M.), JULLUNDUR CITY.

ஓர் புதிய செய்தி

- அதிர்ஷ்ட முறையில் சேமிப்பு
- மெம்பராக சேர்ந்துவிட்டீர்களா?
- இல்லையேல் இன்றே சேருங்கள்

ஒவ்வொரு ஆங்கில மாதமும் 15உக்குள் நீங்கள் ரூ. 10 கட்டவேண்டும். இப்படி 30 மாதங்களுக்கு கட்டவேண்டும். பிரதி மாதம் 25உ எல்லா மெம்பர்களின் பெயர்களும் குலுக்கிப் போடப்படும். யார் பெயருக்கு சீட்டு விழுகிறதோ அவருக்கு உடனே அவர் அதுவரையிலும் நிதிக்கு செலுத்தி யிருக்கும் தொகைகளையும், போனஸாக ரூ. 100ம் சேர்த்துக் கொடுக்கப்படும். அதற்குப் பிறகு அவர் டிரஸ்டுக்கு ஒன்றும் செலுத்தவேண்டியதில்லை. மொத்த மெம்பர்கள் 300. சீட்டு விழாத அங்கத்தினருக்கு 31வது மாதத்தில் சீட்டு ஒன்றுக்கு ரூ. 300ம் அதற்கு 2 சத விகித வட்டியும் சேர்த்துக் கொடுக்கப்படும்.

இதில் சூது ஒன்றும் இல்லை. பத்து ரூபாய் கட்டினால் அதிர்ஷ்டமிருந்தால் உங்களுக்கு பெருந் தொகை கிடைக்கும். இல்லாவிட்டால் உங்களை அறியாமலே சிறுகச் சிறுக பணம் சேர்ந்துகொண்டே போகிறது. லாபமும் அடைகிறீர்கள்.

மெம்பர் பாரம் முதலிய விபரங்களுக்கு பின்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

முதல் சீட்டு 25—5—50 முதல் ஆரம்பம். 15—5—50க்குள் ரூபாயும், அப்ளிகேஷன் பாரமும் ஆபீஸிற்கு வந்து சேரவேண்டும்.

தி மெட்ராஸ் டிரஸ்ட் லிமிடெட்,
(நீலகண்டா பில்டிங்ஸ்)
சுபேதார் சத்திரம் ரோடு,
பெங்களூர் ஸிட்டி.

1950-51ல் என்ன நேர இருக்கிறது?

புத்தாண்டாகிய 1950-51ற்குள் ஏற்படக் கூடிய நன்மை தீமைகளை முன் கூட்டி அறிய விரும்பினால், ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12 மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி, கலியாணம், அதைப்பற்றிய பேச்சுகள், நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. *1—4—0* (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபால் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களிலிருந்து இது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள உதவும். ஒரு முறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

SHREE SATNARAIN JYOTISH ASHRAM, (G.M.) Nakodar (Punjab).

குண்டூசி

ஏப்ரல் 1950

இந்த ஊசியில்

மொழி பெயர்ப்புப் படங்கள்
—தலையங்கம் 7

வில்லன் பாலய்யா
—வாழ்க்கை வர்ணனை ... 10

டி. எஸ். பாலய்யா
—மூவர்ணப் படம் 17

டி. ஆர். ராஜகுமாரி
—ஆர்ட் படம் 18

அழகும் ஆசையும் (சிறு கதை)
—"பரமன்" 19

நுனிப்புல்
—"வெட்டுக்கிளி" 23

குண்டூசியைக் கேளுங்கள் ... 27

செய்திப் படங்கள் 31

பொதுஜனம் பேசுகிறார்
—நேயர் கடிதங்கள் ... 44

புஸ்தகப் பொழுது 47

பி. எஸ். சரோஜா
—வர்ணப் படம் 51

"பாரிஜாதம்"
—ஆர்ட் படம் 52

இது செய்தி 57

காந்திஜி ஸ்தூபி நிதி ... 62

பிரம்மலோகம் 64

வருஷ சந்தா

இந்தியா, இலங்கை ... ... ரூ. 9
வெளிநாடுகள் ... ... ரூ. 6

தனிப் பிரதி

இந்தியா: 8 அணா. வெளிநாடு 12 அணா.
இலங்கை: 50 சதம்.

குறிப்பு :—"குண்டூசி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகள், விகடத்துணுக்குகள் முதலியவைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவை யாரையும் குறிப்பிடுபவை அல்ல.

உங்களுக்குத் தேவையான எல்லாவித ஜவுளி
களுக்கும் இன்றே விஜயம் செய்யுங்கள்

MEERANS

மீரான்ஸ்

பக்கிங்காப் கர்னாட்டிக் மில் ஜவுளிகள், மேட்டூர் மில்
ஜவுளிகள், பம்பாய், அஹமதாபாத் மில் ஜவுளிகள்

இவைகளுக்கு விநியோகஸ்தர்கள்

மற்றும் ட்வீட்கள், உல்லன், வெளி நாட்டு ஜவுளிகள்
முதலிய எல்லாம் கைவசமுள்ளன.

எஸ். மீரா சாகிப்

..... அண்ட் பிரதர்ஸ் ....

38, ஈவ்னிங் பஸார் ரோடு & 19, கிடங்கு தெரு, சென்னை. 1

ரூ. 1000 பரிசு!

அற்புத சக்தி வாய்ந்த

மாய மோதிரம்

இந்த மோதிரம் மந்திர சக்தி, வசிய சக்தி இவைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. இதன் சக்தி அற்புதமானது. இதை அணிபவர்களுக்கு கஷ்டமான காரியங்களும் சித்தியாகும். ஆபத்துகளிலிருந்தும், வியாதிகளிலிருந்தும் உங்களைக் காக்கும். கிரகங்களின் கெட்ட பலன்களை தடுக்கும். இதை அணிந்து கொண்டால், எப்பேற்பட்ட கல்நெஞ்சுடைய ஆண் பெண்களையும் உங்கள் சொல்படி நடக்கும்படிச் செய்துவிடலாம். காதல் விஷயங்களிலும், வழக்குகளிலும், உத்தியோகத் துறையிலும் நீங்கள் வெற்றிபெற்று தனவந்தராகலாம். சுருங்கச் சொல்ல வேண்டுமானால், இம்மோதிரம் உங்களுக்கு மெய்க் காப்பாளனாய் விளங்கும். இதை அணிந்த முதல் நாள் இரவே அதன் சக்தியைப் பரீக்ஷித்துப் பாருங்கள்.

விலை ரூ. 1-8-0. தபால் செலவு தனி. வெளிநாடு : 5 ஷில்லிங் B.P.O.
மூன்று மோதிரங்களுக்கு ரூ. 3-8-0தான்.
தபால் செலவு தனி. வெளிநாடு : 8 ஷில்லிங் B.P.O.

பலன் இல்லையென்று நிரூபித்தால் பணம் வாபீஸ்

Prop: BENGAL MESMERISM HOUSE, (*G.M.*) *Nakodar* (*Pb*).

குண்டூசி

பட்டை - 3 ஏப்ரல்

ஊசி - 7 ஆசிரியர்: பி. ஆர். எஸ். கோபால் 1950

நிகரற்ற விநியோகமுள்ள சினிமா மாத வெளியீடு

மொழிபெயர்ப்புப் படங்கள்

சமீப காலமாகப் பத்திரிகைகளில் வரும் பட விளம்பரங்களைப் பார்ப்பவர்களுக்கு சினிமா உலகில் ஒரு 'ஜுரம்' வேகமாய் பரவி வருகிறது என்பது தெரிந்திருக்கும். இந்த 'ஜுரம்' என்னவென்று கேட்கிறீர்களா? ஒரு பாஷையில் எடுத்த படத்தில், வேறு பாஷைப் பேச்சுகளையும் பாட்டுகளையும் பொருத்தும் 'டப்பிங்' முறைதான். முன்பே அபூர்வ சகோதரர்கள், ஆதித்தன் கனவு போன்ற சில தமிழ்ப் படங்கள் தெலுங்குப் படங்களாக மாற்றப்பட்டுள்ளன. மற்றும் சில புதிய படங்கள் தெலுங்குப் படங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. இந்த விஷயத்தில் தமிழர்களைப் போலவே தெலுங்கர்களும் முன்பே எடுத்துள்ள சில தெலுங்குப்படங்களை விரைவில் தமிழாக்கி வருகின்றனர். அவர்கள் புதிதாகத் தயாரிக்கப் போகும் படங்களையெல்லாம் தமிழ், தெலுங்கு ஆகிய இரு பாஷைகளிலும் தயாரிக்கத் திட்டமிட்டு வருகின்றனர். மொத்தத்தில், இந்த வருஷத்தில் வரப்போகும் படங்களெல்லாம் அநேகமாக இரு பாஷைப் படங்களாகவே வெளிவரும் என்று தோன்றுகிறது.

படங்களை ஒரு பாஷையிலெடுத்துவிட்டு, இன்னொரு பாஷைக்கு மாற்றுவதில் தவறு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் கோளாறுகளும், பிழைகளும் இல்லாமல் மொழி பெயர்க்கும்வேலைசெய்யப்பட வேண்டும். என்னதான் முயன்றாலும் அசல் படத்திற்குள்ள மதிப்பு மொழி பெயர்த்த படத்திற்கு ஏற்பட முடியாது. அப்படியிருக்க 'டப்பிங்' கிலும் கோளாறுகள் இருந்தால் படத்தின் வெற்றி பாதிக்கப்படவே செய்யும். ஆகவே இந்த முயற்சியில் ஈடுபடுபவர்கள், 'பாஷை மாற்றப்பட்ட படம்' என்ற எண்ணம் ஏற்படாதபடி மொழி பெயர்க்க வேண்டும். மொழி பெயர்க்கப்பட்ட சில தமிழ்ப் படங்களும், சில தெலுங்குப் படங்களும் பொது ஜனங்களால் முன்பே வரவேற்கப்பட்டுள்ளன. இனி வரக் கூடிய மொழி பெயர்க்கப்பட்ட படங்களுக்கும் அவர்கள் ஆதரவளிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

இதுபோலப் படங்களை மொழி பெயர்ப்பதால் நன்மையே ஏற்படக் கூடும். பிற பாஷைகளில் படங்களைப் பார்ப்பதைவிட தம் தாய் பாஷையில் படங்களைப் பார்ப்பதற்கு ஜனங்கள் விரும்புவது சகஜமே. எனவே, படங்

களுக்கு அதிக வசூல் ஏற்படுவதும் சாத்தியமே. சினிமா நக்ஷத்திரங்கள் என்னவோ தங்கள் சம்பளங்களைக் குறைத்துக்கொள்ள விரும்பவில்லை. படத் தயாரிப்புச் செலவுகளோ மிக உயர்ந்து போயிருக்கின்றன. இந்த நிலைமையில் மொழி பெயர்ப்புப் படங்கள் மூலம் செலவைச் சரிக்கட்டிக் கொள்ளுவது சாத்தியமா யிருக்கும். தமிழ், தெலுங்கு ஆகிய இரு பாஷைகளுக்கும் ஹிந்தியைப்போலன்றி நெருங்கிய ஒற்றுமை இருக்கிறது. அதனால் பாஷை மாற்றும் வேலையும் சுலபமா யிருக்கும்.

ஆந்திர நடிகைகளில் அநேகர் தமிழ்ப் படங்களில் நடித்து வருகின்றனர். மொழி பெயர்க்கும் எண்ணமுள்ள முதலாளி இத்தகைய இரு பாஷை நடிகர்களை ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். என்னைக் கேட்டால் ஒரே படத்தைப் பூராவாக எடுத்து விட்டு பிறகு மொழிபெயர்ப்பதைவிட, படத்தைத் தயாரிக்கும்போதே இரு பாஷைகளில் தயாரிப்பது நல்ல முறையாகும்.

முன்னர் ராம்ராஜ்யா ஹிந்திப் படம் தமிழாக்கப்பட்டு வெளி வந்திருக்கிறது. சமீபத்தில் சந்திரலேகா, **அபூர்வ சகோதரர்கள்** ஆகியவை ஹிந்திப் படங்களாக வெளிவந்து ஏராளமான ஆதரவைப் பெற்றுள்ளன. இனி வட இந்தியாவுக்குத் தமிழ் நாட்டிலிருந்து நிறையப் படங்கள் போகும் என்பதற்கான நல்ல சூசனைகளே இவை. மொத்தத்தில், 'டப்பிங்' முறை நம் பட முதலாளிகளின் மனதிலிருந்து மாஹாண மனப்பான்மையைப் போக்கி, அகில இந்திய மனப்பான்மையை ஏற்படுத்தி வருவது பாராட்டத்தக்க விஷயமாகும்.

அமெரிக்க,பிரிட்டிஷ் பட முதலாளிகள், உலகம் பூராவிலும் தங்கள் படங்களுக்கு, இப்பொழுதை விட, அதிக வசூல் ஏற்பட வேண்டும் என்பதற்காக, தங்கள் பிரபல படங்களை பல தேச பாஷைகளில் மொழி பெயர்த்து அனுப்ப முற்பட்டிருக்கின்றனர். ஜே.ஆர்தர் ராங்க் என்ற பிரபல பிரிட்டிஷ் பட முதலாளி தம்முடைய **ப்ளூ லாகூன்** என்ற ஆங்கிலப் படத்தைத் தமிழில் மொழி பெயர்த்து **நீலக்கடல்** என்ற பெயருடன் சீக்கிரமே வெளியிடப் போகிறார். இந்தப் படம் வெற்றி பெற்றால் அதைத் தொடர்ந்து அநேக ஆங்கிலப் படங்கள் தமிழ்ப் படங்களாக மாறக்கூடும். அதன் விளைவாக தமிழ்ப்பட மார்க்கெட்டில் போட்டி அதிகரிக்கும் என்பது நிச்சயம். இதைச் சமாளித்துக் கொள்ள வேண்டுமானால், நம் பட முதலாளிகள் தங்கள் படங்களைத் தமிழில் மட்டுமின்றி, இதர இந்திய பாஷைகளிலும் தயாரிக்க முற்பட வேண்டும். அப்பொழுதுதான் தென்னாட்டுப்படத் தொழில் நசித்துப் போகாமல் ஜீவித்திருக்க முடியும்.

இப்பொழுது விலைகள்
குறைக்கப்பட்டுள்ளன

(MADRAS) LTD.

உயர்தரமான, மணம்
மிகுந்த காப்பிப் பொடி

பவுண்டு—ரூ. 2-4-0

திடத்திலும்
தரத்திலும்
தேர்ந்தது

சங்கர்
I C
பிராண்ட்

சூலம் மார்க்
போர்ட்லண்ட் ஸிமெண்ட்

சர்க்கார் சோதனைச்சாலையின்
நற்சாட்சி பத்திரம் பெற்றது

Govt Test House .. Alipore
TEST CERTIFICATE
No. CT - PC - 1260 dated 1st & 6th Dec 1949

இந்தியா ஸிமெண்ட்ஸ் லிட்

தொழிற்சாலை: தாழையூத்து, திருநெல்வேலி ஜில்லா.
ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: 11/12, ஸெகெண்ட் லைன் பீச், மதராஸ்-1

எல்லா நகரங்களிலும்
இந்தியா ஸிமெண்ட்ஸ்
ஸ்டாக்கிஸ்டுகளுள்ளனர்

வில்லன்

வேலைக்காரி

ஒரு நாள் சாயந்திரம் நான் வெளியில் போக யத்தனித்துக் கொண்டிருந்த சமயத்தில், என் நண்பர் கண்ணன் உள்ளே நுழைந்தார். "சரி, பிரயாணத்தை ஒத்திப் போட்டு விட வேண்டியது தான்" என்று நான் மனதிற்குள் தீர்மானித்த படியே அவரை வரவேற்று, அமரச் சொன்னேன்.

அவர் உட்காராமலே, "ஏன், ஸார்! நீங்கள் வேலைக்காரி படத்தைப் பார்த்தீர்களா?" என்ற கேள்வியை முன் பின் சம்பந்த மில்லாமல் திடுமெனக் கேட்டு வைத்தார்.

நான் அதைக் கேட்டு ஆச்சரியம் அடையவில்லை. அவர் வழக்கமே அப்படித்தான். நான் நிதானமாக, "நேற்றுத்தான் பார்த்தேன், என்ன விசேஷம்?" என்று கேட்டேன்.

"பாலய்யாவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"அவருக்கென்ன மிக நன்றாக நடித்திருக்கிறார்."

"அதை வெறும் நடிப்பு என்றா சொல்கிறீர்? அவர் உண்மையிலேயே ஒரு நாஸ்திகர் என்றே தோன்றுகிறது. இல்லாவிட்டால் அவரால் இவ்வளவு தத்ரூபமாய் நடிக்க முடியுமா?"

"நீரே சொல்லி விட்டீரே, அவர் தத்ரூபமாய் நடித்திருக்கிறார் என்று! உண்மையில், அவரவ்வளவு கடவுள் பக்தி உமக்கு இருக்குமா என்று தான் நான் சந்தேகிக்கிறேன். வேலைக்காரி படத்தில் நடித்த போது ஒவ்வொரு காட்சியின் ஷூட்டிங் முடிந்த பின்னரும் அவர், "சோணையா! வயிற்றுப் பிழைப்புக்காக இப்படியெல்லாம் செய்யவேண்டியிருக்கிறது. அபசாரத்திற்காக என்னை மன்னித்து விடு" என்று கூறி, மடியிலிருந்து விபூதியை எடுத்து நெற்றியில் இட்டுக்கொண்டு, வாயிலும் போட்டுக் கொள்வாராம்!"

பாலய்யா வாழ்க்கை வர்ணனை

"என்ன, நிஜமாகவா! கடவுளிடம் அவருக்கு அவ்வளவு பக்தியா?''

"ஆம். சோணையன் அவரது இஷ்ட தெய்வம், மாறுமதுரையில் கோயில் கொண்டுள்ள இந்தத தெய்வம் அவரது இஷ்ட தெய்வம் ஆனதே ஒரு ஆச்சரியமான நிகழ்ச்சியாகும்.''

" அப்படியா!......நீங்கள் எங்கோ வெளியே போக புறப்பட்டுக்கொண்டிருக்கிறீர்கள். என்றல் அவைசியமான தடை; மன்னிக்கணும். இருந்தாலும் இதை மட்டும் சுருக்கமாகச் சொல்லிவிட்டுப் போங்களேன்'' என்று வேண்டினர்.

"உங்களைப் பார்த்தவுடனேயே வெளியேபோகும் எண்ணத்தை விட்டுவிட்டேன். உட்காருங்கள்; விபரமாகவே சொல்லுகிறேன்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னேன். நண்பர் அந்த ரஸமான விஷயத்தைக் கேட்க ஆயத்தமானர். நான் கூறத் தொடங்கினேன்:

"பாலய்யா திருநெல்வேலியைச் சேர்ந்தவர். ஐந்தாவது வயதில் அங்குள்ள மந்திர மூர்த்தி ஹைஸ்கூலில் அவர் சேர்க்கப்பட்டார். சிறு வயதில் விளையாட்டும், குறும்புத்தனங்களும் அவரிடம் பூரணமாய் குடிகொண்டிருந்ததால், படிப்புக்கு அவரிடம் இடமில்லாமற் போய்விட்டது. பள்ளிக்கூடத்திற்குப் போகும் பாவனையில் புஸ்தகங்களுடன் புறப்படுவார். இடையில் அந்த மாந்தோப்பு நிழலையும், சோம்பேறிப் பையன்கள் கோலி விளையாடிக் கொண்டிருப்பதையும் பார்த்தவுடன், பாலய்யாவுக்கு பள்ளிக்கூட நினைவு பறந்துவிடும். புஸ்தகங்களை தோப்புக் கிணற்றினுள் உள்ள பிறையில் ஒளித்து விட்டு, கோலி விளையாட்டில் தாமும் கலந்து கொள்வார்.

"இப்படி அவர் கோலி ஆடிக்கொண்டிருந்ததை அந்த ஊரில் இன்ஸ்பெக்டராக இருந்த பிரபல சாந்தப் பிள்ளை பார்த்து விட்டார். அந்தப் பையன்கள் அத்தனை பேருக்கும் தம் பிரம்பால் தானம் செய்தார். அத்துடன் இந்த விளையாட்டு முற்றுப் பெற்றது. ஆனல்

குண்டூசி

விளையாட்டுப் புத்தி என்னவோ பாலய்யாவை விட்டுப் போகவேயில்லை.

"எப்படியோ அரும்பாடுபட்டு பாலய்யா ஆறுவது வகுப்பை அடைந்து விட்டார். சிரம பரிகாரத்திற்காக அந்த வகுப்பிலேயே இன்னொரு வருஷம் இருக்கத் தீர்மானித்தார்! ஆனால் அது கைகூடவில்லை. அவர் மனதில் வேறு ஒரு புதிய எண்ணம் குடிகொண்டு விட்டது.

"இந்த சமயத்தில் பாலய்யா ஒரு சர்க்கஸ் காட்சியைப்பார்க்க நேர்ந்தது. அதுமுதல் தாமும் சர்க்கஸில் சேர்ந்து, அவர்களைப் போல பார் விளையாட வேண்டுமென்ற எண்ணம் அவருக்குத் திடமாக ஏற்பட்டு விட்டது. இதற்கேற்றாற்ப் போல அவரது நண்பனொருவன் அவரை 'சர்க்கஸில் நிச்சயமாய் சேர்த்து விடுவதாக' உறுதி கூறினான். அதன் பேரில், வீட்டிலிருந்து கொஞ்சம் பணத்தைத் திருடிக் கொண்டு, பாலய்யா அன்றிரவே வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டார். பல ஊர்களுக்குச் சென்றுவிட்டு இருவரும் மானாமதுரையை அடைந்தனர். பாலய்யாவிடம் இருந்த பணமெல்லாம் செலவழிந்த பிறகு நண்பனுக்கு அவரது சகவாசம் எதற்கு. அவரிடம் சொல்லிக் கொள்ளாமலே நழுவி விட்டான் அவன்! புதிய ஊரான மானாமதுரையில், கையில் காலணா கூட இல்லாமல் அனாதரவாய் விடப்பட்ட பாலய்யா என்ன செய்வதென்று தோன்றாமல்

தவித்தார். ஊரைச் சுற்றிச் சுற்றி வந்து, கடைசியில், ஒரு பிராமண ஸ்திரீ நடத்திவந்த ஹோட்டலை அடைந்தார். பாலய்யாவுக்கு சிறு வயதிலிருந்தே மலையாளம் பேசத் தெரிந்திருந்ததை அப்பொழுது பயன்படுத்திக் கொண்டர். தன் உண்மையான பூர்வோத்திரங்களைச் சொல்லுவதற்கு வெட்கப்பட்டுக் கொண்டு, தான் ஒரு மலையாளப் பையனென்றும், தன்னை ஆதரிப்பார் யாருமில்லை யென்றும் கூறினார் பாலைய்யா. அவர்மீது இரக்கங் கொண்ட அந்த ஸ்திரீ பாலய்யாவுக்குத் தங்க இடமும், உண்ண உணவும் அளித்து ஆதரித்தார். பாலய்யா பதிலுக்கு அந்த ஹோட்டலில் சிறிது காலம் வேலை செய்து வந்தார்.

“அந்த ஹோட்டலில் வேலை செய்து வந்த போது பாலய்யாவுக்கு நாடகங்களில் சேர்ந்து நடிக்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது. அந்த ஊரில் கசாப்புக் கடை வைத்திருந்த ஒருவன் ஒரு நாடகக் கம்பெனியை ஆரம்பிக்கப் போவதாகக் கேள்விப்படவே பாலய்யா அவனைப் போய்ப் பார்த்தார். அவன் பாலய்யாவை நடிகனாய் எடுத்துக் கொள்ளுவதாகவும், கம்பெனி ஆரம்பிக்கும் வரையில் தன் வீட்டிலேயே தங்கி யிருக்கும்படியும் சொன்னான். பாலய்யா அதற்கு இணங்கினார்.

“நாட்களும், மாதங்களும் பலவாகி விட்டன. ஆனால் கசாப்புக் கடைக்காரன் கம்பெனி ஆரம்பிக்கும் விஷயம் கை கூடி வரவில்லை. பாலய்யாவோ சலித்துப் போனார். எப்படியாவது தம் ஊர் போய்ச் சேர்ந்து விட்டாலே போதும் என்று தோன்றியது அவருக்கு. கையிலோ காசில்லை; கசாப்புக் கடைக்காரனோ, அனுமதி தரமாட்டான். அப்படியே சொல்லாமற் புறப்பட்டு, அவனிடம் அகப்பட்டுக் கொண்டு விட்டாலோ, அவன்



தினம் வெட்டி விற்பனை செய்யும் ஜந்துக்களில் ஒன்றாய்த் தம்மையும் ஆக்கி விடுவானோ என்ற பயம் வேறு பாலய்யாவுக்கு.

''கடைசியில் ஹோட்டல்கார அம்மாளிடம் சென்று, தம் உண்மை விருத்தாந்தங்களைத் தமிழில் சொல்லி, தமக்குப் பத்து ரூபாய் தரும்படி கேட்டார். அவர் ஒரு தமிழ்ப் பையன் என்பதைக் கேட்டதும், அந்த அம்மாள் ஆச்சரியமும் அநுதாபமும் அடைந்து, பாலய்யாவிடம் பத்து ரூபாய்களைக் கொடுத்தாராம். அதில் ஒரு ரூபாய்க்கு கர்ப்பூரத்தை வாங்கி அதை சோணையனுக்குக் கொளுத்தி விட்டு, அன்றிரவே கசாப்புக் கடைக்காரனின் வீட்டை விட்டு வெளியேறினார் பாலய்யா. பாலத்தின் வழியாகச் சென்றால அந்தப் படுபாதகனிடம் அகப்பட்டுக் கொள்ள வேண்டியிருக்குமே என்று பயந்த பாலய்யா ஆற்றை நீந்தியே கடந்து விடுவதென்று தீர்மானித்து, தைர்யமாக தண்ணீரில குதித்து விட்டார்.

''பாதி ஆற்றில் நீந்திக் கொண்டிருக்கையில் பாலய்யாவுக்கு கை சளைத்து விட்டதாம். 'சோணையா! நீயே கதி!' என்று கதறினாராம் பாலய்யா. அடுத்த நிமிஷமே, நீந்திக் கொண்டிருந்த அவரது கால்கள் தரைதட்டினவாம்; ஆற்றின் நடுவில் மேடிட்டிருந்த மணல் குன்றின்மீது தாம் நின்று கொண்டிருந்ததை அறிந்த பாலய்யா ஆச்சரியமடைந்தாராம்.

''சில நிமிஷ ஆசுவாசத்திற்குப் பிறகு அவர் மீண்டும் நீந்த ஆரம்பித்தார். கரை அடைவதற்கு மற்றும் இரண்டு மூன்று கஜ தூரம் இருந்ததாம். ஆனால் பாலய்யா ஒரு நீர்ச்சுழலில் அகப்பட்டுக்கொண்டு விட்டார். ''சோணையா! இத்தோடு நான் ஒழிந்தேன்!'' என்று அவர் சொல்லி முடிப்பதற்குள், சுழல் அவரை தண்ணீருக்குள் அழுத்தி விட்டது. யாரோ அவரது உள்ளங் கால்களைப் பிடித்துத் தள்ளுவது போல் தோன்றியதாம் அவருக்கு. அடுத்த நிமிஷம், பாலய்யா அக்கரையில் பத்திரமாக ஒதுக்கப்பட்டுக் கிடந்தார்.

''பாலய்யா எழுந்து நின்று, 'சோணையா, உன் கருணையே கருணை. உன்னால்தான் இன்று காப்பாற்றப்பட்டேன். பிற்காலத்தில், எனக்குப் பிறக்கும் பிள்ளைக்கு உன்

பெயரை வைதது. உன் சன்னிதானத்திற்கு அழைத் " வந்து முடியிறக்குகிறேன்' என்று வேண்டிக் கொண்டார். அதன்படியே தம் மூன்ருவது குழந்தைக்கு அவர் 'சோணையன்' என்று பெயரிட்டிருக்கிருர். மூன்று வருஷங்களுக்கு முன் இந்தப் பையனுக்கு சோணையனின் சன்னிதியில் பிரார்த்தனை செலுத்திவிட்டு வந்தார். இப்பொழுது சொல்லும், 'பாலையா நாஸ்திகரா' என்று."

இவ்வளவு விவரங்களையும் நான் கூறக் கேட்டுவந்த நண்பர்கண்ணன், "ஆச்சரியமாக வல்லவா இருக்கிறது எல்லாம்!" என்று கூறினுர்.

"பாலய்யாவே ஒரு ஆச்சரியகரமான மனிதர்தான்" என்றேன் நான் பதிலுக்கு.

"அப்படியானுல் அவருடைய வாழ்க்கை விவரஙகள் பூராவையுமே சொல்லுங்களேன்" என்று கண்ணன் வேண்டினுர். நான் சொல்லத் தொடங்கினேன்.

* * *

பாலய்யா மாறு மதுரையிலிருந்து ஊர் திரும்பிய சமயம், திருநெல்வேலியில் ஜகன்ருதைய்யர் கம்பெனி நாடகங்களை நடத்தி வந்தது. அந்தக் கம்பெனியில் எப்படியாவது சேர்ந்துவிட வேண்டுமென்று பாலய்யா துடியாய்த் துடித்தார். பெற்ருேர் இதற்கு ஆக்ஷேபனை கூறினர், ஆனுல், பாலய்யா தம் தயையனை எப்படியோ வசப்படுத்திக்கொண்டு, அவர் மூலம் நாடகக் கம்பெனியில் சேரமுயன்ருர். இவர் சேருவதற்குள்ளாகவே ஜகன்ருதைய்யர் கம்பெனி கலைக்கப்பட்டு விட்டது. அதில் சம்பந்தப்பட்டிருந்தவர்களை வைத்துக் கொண்டு நாகலிங்கம் செட்டியாா என்பவர் 'பால மோஹன சங்கீத சபா' என்ற கம்பெனியை ஸ்தாபித்தார். இந்தக் கம்பெனி மூலம்தான் பாலய்யா தம் 15வது வயதில் நாடக உலகில் பிரவேசித்தார். ஆரம்பத்தில் சம்பளமேயில்லாமல் சேர்த்துக் கொள்ளப்பட்ட பாலய்யாவுக்கு ஆறு மாதங்களுக்குப் பிறகு ஆறு ரூபாய் சம்பளம் போடப்

ஆர்யமாலா

பூலோகரம்பை

அம்பிகாபதி

பட்டது. முதன் முதலாய் அவர் 'சதி அநுசூயா' நாடகத்தில் மஹா விஷ்ணுவின் வேஷத்தை ஏற்று

நடித்தார். பாலய்யா சிறு வயதிலேயே குறும்புத்தனங்கள் மிக்கவராய் இருந்தார். அவரது வயது வளர வளர குறும்புத் தனங்களும் கூடவே வளர்ந்து வந்தன. நாடகக் கம்பெனியில் சேர்ந்த பின்னரோ அவரது சேஷ்டைகள் சகிக்க முடியாததாகி விட்டதாம். ஆகவே, அவரது கொட்டத்தை ஒடுக்க வேண்டும் என்பதற்காக, நாடக ஆசிரியர் டி. பி. பொன்னுசாமிப் பிள்ளை இரண்டு வருஷ காலம் வரையில் பாலய்யாவுக்கு எந்த வேஷத்தையுமே கொடுக்காமல் வைத்திருந்தாராம்.

இந்த சமயத்தில், எம். எஸ். முத்துகிருஷ்ணன் கம்பெனியில் பிரதான நடிகராகவும், கம்ஸன் வேஷத்தில் மிகப் புகழுடனும் விளங்கி வந்தார். பாலய்யாவுக்குக் குறிப்பிட்ட எந்த வேஷமும் அளிக்கப்படாததால் எல்லா வேஷதாரிகளையும் பார்த்து அவர்களைப் போலவே நடித்துப் பழகி வந்தார். ஒருநாள் தாம் நடித்து வந்த கம்ஸன் வேஷத்தை பாலய்யா ஒத்திகை செய்து வந்ததைப் பார்த்த முத்துகிருஷ்ணனுக்கு மிகுந்த சந்தோஷம் ஏற்பட்டதாம். பாலய்யாவுக்கு வேஷம் தரும்படி ஆசிரியரிடம் அவர் சிபாரிசு செய்தார். ஆனால், ஆசிரியரோ மறுத்து விட்டார். முத்துகிருஷ்ணனுக்கு இதனால் பிடிவாதம் ஏற்பட்டது. எல்லாப் பாத்திரங்களையும் நடிக்க பாலய்யாவுக்குத் தாமே பயிற்சி அளித்தார்.

இத்தக் கம்பெனி பல ஊர்களுக்குச் சென்று விட்டு, சேலத்தை அடைந்தது. 'ஸிம்பலின்' என்ற நாடகம் அரங்கேற்றப்பட்டது. பெஸானியோவின் வேஷத்தை முதலில் முத்து கிருஷ்ணன் நடிப்பதாக இருந்தது. ஆனால்;

[தொடர்ச்சி 53-ம் பக்கத்தில்)

"அழகும் ஆசையும்"

"பரமன்"

"எதற்காக நீ உன் மனைவியின் மூக்கைக் கடித்துக் கோரப்படுத்தினாய்?'' என்று கேட்டார் நீதிபதி. அதற்கு அவன் பதில் சொன்னான்:—

"என் மனைவி மிகவும் அழகு வாய்ந்தவள். அவளின் அழகு பலரின் உள்ளங்களைக் கவர்ந்துவிட்டது. என் வாழ்க்கைத் துணைவியான அவளைப் பார்த்து. பலர் பல்லிளிப்பது எனக்கு பிடிக்கவில்லை. அவளது அழகைக் கெடுத்து விகாரப்படுத்தி விட்டால் நலமென்று தோன்றியது எனக்கு. ஆகவே அவள் மூக்கைக் கடித்து விட்டேன்.''

இம்மாதிரி நிகழ்ச்சி ஒன்று மேல் நாட்டில் நடந்ததாக அன்றைய தினப் பத்திரிகையில் ஒரு குறிப்புக் காணப்பட்டது. அதையே இரண்டு மூன்று முறை விடாமல் படித்தான் சந்திரசேகரன். அவனது உள்ளம் சிந்தனை உலகில் சஞ்சரித்தது! எண்ணக் குவியல்களிடையே மனப் போராட்டம் நடந்தது. என்றோ ஒருநாள் யாரோ சொன்ன, "பார்யா ரூபவதி சத்துரு'' என்ற நினைப்பும், "அழகான மனைவியினால் அபாயம் நேரிடலாம்'' என்ற வாக்கும், "பூர்ண அழகு நச்சுக் கோப்பைக்குச் சமம்'' என்ற உண்மையும், எல்லாமே அவன் கண் முன்பு பிரதிபலித்தன!

"அள்ளிப்பருகும் அழகைப் பெற்ற ஒருத்தி அனைவரது உள்ளத்தையும் கவர்வாள். ரதி என்ற நினைப்புக் கொண்டு—கர்வத்தால் அவள் மனமும் கெட்டுவிடுகிறது. கட்டிய கணவனைக் கூட மறந்து விடுவாள்—அவள் அழகு அவள் வாழ்வையே குலைக்கும்!'' என்று எழுதியிருந்தது ஒரு நாவலில். சந்திரசேகரனுக்குத் தலை சுற்றுவதுபோலிருந்தது. இரு கைகளாலும் தன் தலையை கெட்டியாக அழுத்திப் பிடித்துக் கொண்டான்.

• • •

சந்திரசேகரன் ஒரு சினிமாக் கம்பெனியில் மானேஜர்; நல்ல புத்திசாலி என்று பெயர் பெற்றவன். மாதம் 150 ரூபாய் சம்பளம். அவனுக்கு சமீபத்தில்தான் கலியாணம் நடந்தது. வசுந்தராதான் அவன் மனைவி, உண்மையிலேயே பார்ப்போர் உள்ளத்தைக் கவரும் பேரெழில் பெற்றிருந்தாள் வசு! அவளின் சுழற் கண்களின் ஜால வித்தையும் மோகனப் புன்னகையும், கலகலக்கும் சிரிப்பொலியும், அப்பப்பா!...ரம்பை...ஊர்வசி... ரதி...!

ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து வளர்ந்த வசுந்தரா சாதாரண அழகைத்தான் பெற்றிருந்தாள். எப்படியோ சந்திரசேகரனுக்கும் வசுவுக்கும் கலியாணம் நிச்சயமாகி விட்டது. பெற்றோர்களை இழந்த சந்துரு தனிக்கட்டை ஆகையால் ஆடம்பரமற்று விவாகம் நடந்து விட்டது. அதன் பின்னர் ஆறு மாதத்திற்குள் சந்துரு வசுந்தராவுடன் தனிக்குடித்தனம் ஆரம்பித்து விட்டான்.

கலியாணம் நடந்த கனகுஷியில் வசு துருதுருவென வளர்ந்து, பெண்ணினத்தை பேதலிக்கச் செய்யும் வண்ணம் அழகு பெற்றுவிட்டாள். என்னேரமும் கலகலவென்ற சிரிப்புடனேயே அவர்களது வாழ்க்கை பறந்தது!

அந்த சமயத்தில் தான் ஆரம்பத்தில் சொன்ன விதம் அந்தப் பத்திரிகைச் செய்தி சந்துருவின் மனதைத் துளைத்து, அவன் வாழ்க்கையை கசப்புக்கொள்ளச் செய்தது.

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிஷமும் வசுந்தரா அழகை அள்ளிப்பருகி வந்தாள். அதே நேரத்தில் சந்துருவின் உள்ளம் துக்கத்தை அணைத்தது. அழகியை மணந்தோமே என்ற ஆனந்தமில்லை அவனுக்கு. அதற்குப் பதில். "அவள் அதிக அழகியாக இருக்கிறாளே! பூர்ண அழகு நச்சுக்கோப்பைக்குச் சமமாயிற்றே! இதனால் என் வாழ்வு குலையுமா?''—இப்படி எண்ணிற்று அவன் மனம். அவன் இருதயத்தை யாரோ கூர்மையான கத்தியால் சிதைப்பது போல் தோன்றியது அவனுக்கு.

அதே சமயம் அவன் சிந்தனையை கலைத்தாள் வசுந்தரா கலகலவென்ற சிரிப்புடன்.

சந்துரு கண் சிமிட்டாது வசுவைப் பார்த்தான். அவனது பார்வை வசுவுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது, "ஏன்னா!

என்ன பார்க்கிறீர்கள் என் முகத்தில்?'' என்று கேட்டாள் வசுந்தரா. சந்துரு பதில் பேசவில்லை; மௌனமாகவே இருந்தான். அவன் பார்வை மட்டும் சற்று குரூரமாகவே இருந்தது. மறுபடியும் வசு பேசினாள்.

"ஏன்னா! எனக்கு ரொம்ப நாளாய் ஒரு ஆசை மனதிலே இருந்திண்டே யிருக்கு. அதனாலே நமக்கு நல்ல புகழ், பேரு, பணம் எல்லாமே வரும்,...'' என்று மெதுவாகத் தன் உள்ள எழுச்சியை வெளிப்படுத்தினாள் வசு. சந்துரு திடுக்கிடவில்லை. ஏனெனில், இதெல்லாம் அவன் எதிர்பார்த்ததுதான். வசு மேலும் தொடர்ந்தாள்:

''மனோஹரா பில்ம்ஸார் ஏதோ படம் பிடிக்கப் போகிறார்களாமே. அந்தக் கம்பெனி முதலாளிதான் உங்களுக்கு ரொம்ப வேண்டியவராச்சே, அவரிடத்தில் பேசுங்கள். நான் ஹீரோயினாக நடிக்க சான்ஸ் கேளுங்கோ......''

வசுவின் வார்த்தைகள் சந்துருவின் உள்ளத்தைச் சிதறவடித்தன. இருப்பினும் சமாளித்துக் கொண்டான் சந்துரு.

''வசு! நீ சொல்வதுபோல் அவ்வளவு சுலபமான விஷயமல்லவே அது. நடிகையின் வாழ்வு எவ்வளவு தொல்லைகள் நிறைந்தது தெரியுமா?...''

''எனக்குத் தான் தெரியுமே, தெரிந்து தானே ரொம்ப நாளாய் மனசிலேயே அடக்கி வைத்திருந்த ஆசையைச் சொல்லுகிறேன். இதோ பாருங்கோ எனக்குப் பாடவும் தெரியும, நடிக்கவும் தெரியும்...என சின்ன வயசிலே பள்ளிக்கூட நாடகங்களில் நடித்துப் பரிசு பெற்றிருக்கிறேன். நான் எத்

தனே அழகாய் இருக்கிறேன்...என் அழகுடன் இப்ப இருக்கிற நடிகை யாராவது போட்டிபோட முடியுமா? பாலாமணி எப்படி இருந்தாள்? நீங்கதானே அவளுக்கு வேலை கொடுத்தீர்கள். இப்பப் பாருங்கோ; மோட்டார் என்ன! பங்களா என்ன! எவ்வளவு புகழ், பணம், கொட்டுதே! இன்னும் எங்கோ மூலையில் கிடந்த சரஸ்வதிக்கு இத்தனை புகழும் நட்சத்திரப் பதவியும் யாரால் வந்தது? உங்களால்தானே......'' என்று வசு முற்றுப்புள்ளி வைக்க இடமில்லாமல் ஒரே மூச்சாகப் பேசினாள்.

"வசு! உன் ஆசையெல்லாம் நட்சத்திர நடிகையாக — அவர்கள் வாழ்க்கை போல இருக்க ஆசைப்படுகிறது.......அதுதானே!...''

"அப்படி யில்லை யென்றாலும், நம் பிற்கால வாழ்க்கை சௌக்கியமாக இருப்பதற்கு முயல வேண்டாமா!''

"நடிகையின் வாழ்வு...''

"கலா சேவை...கலைக்காகச் செய்யும் தொண்டு...எப்படியாவது வைத்துக் கொள்ளுங்களேன்!''

"போதும், வசு! உன் ஆசையை சுட்டுப் பொசுக்கிவிடு. இந்தத் தொழில் மூலமாகவா கலைத் தொண்டு செய்வது? அவர்களைப் பற்றிய கேவல மனப்பான்மை எப்படியெல்லாம் உருப்பெருகிறது. எல்லாம் தெரிந்துமா சேற்றுக்

குட்டையில் கால் வைத்து விழுவது! வசு, நான் சொல்வதைக் கேள். அழகு இருக்கிறது என்று ஆபாச வழியில் செல்வதா? அழகு போன பிறகு அங்கே இடம் கிடைக்காது...”

“அதற்காகத்தானே நானும் சொல்வது. அழகு இருக்கும் போதே புகழும், பணமும், சம்பாதித்துக் கொண்டு விட்டால், பின்னர்...!”

“வசு! போதும் நிறுத்து உன் பேச்சை!” என்றான் கடுமையான குரலில். மேலும் பேசாமல் வசு எழுந்து உள்ளே போய்விட்டாள்.

சந்துருவின் நெஞ்சு படபடத்தது. பயங்கரததின் எதிரொலி எக்கலித்தது. ‘எவ்வளவு துணிச்சல் காரி’ என்று அவன் வாய் முணுமுணுத்தது. மேஜையின் மேல் கிடந்த காண்டேகரின் ‘கருகிய மொட்டு’ நாவலை எடுத்துப் பக்கங்களைப் புரட்டினான். ஒரு விஷயம் மட்டும் அவன் கண்களை ஊடுருவியது. படித்தான்—“எதை நாம் நினைவிலேயே நினைக்கக் கூடாது என்று தீர்க்கமாக எண்ணுகிறோமோ, அதே நினைப்பு, அடிக்கடி மனதிலே தோன்றி, புண்படுத்திக்கொண்டே யிருக்கும். அதிலும் பல ஹீனமான இருதயமானால் மனப்புயல் சிர்குலைத்துவிடும்! இதை அவன் பல முறை படித்தும் மனசசாந்தி இல்லை.

* * *

‘அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்’ என்பதைப் பொய்த்துவிடச் செய்தான் சந்துரு. தினசரி வசு மட்டும் தன் மனோபீஷ்டத்தைக் குத்திக்குத்திகிளறிக்கொணடேயிருந்தும், சந்துருமடடும நாளுக்கு நாள் வைராக்யம் மிகுந்தவனாய் அவளது எண்ணத்தை மாற்ற உபதேசித்து வந்தான்.

வசுவின் உள்ளம் பலமான மனக் கோட்டை கட்டிய நாள் போய்விட்டது, எப்படியாவது தன் கணவருக்குத் தெரியாமல் சினிமாவில் சேர்ந்து ஒப்பந்தம் செய்து,பிறகு சொல்லிவிட்டால் என்ன! எண்ணமபோல அவள் நிலையும் மாறியது.

இரகசியமான முறையில் ஒரு படக் கம்பெனி முதலாளியுடன் ஒப்பந்தம்பேசினாள் வசு. வசுவின் அழகைகக கண்டதும் எப்படியாவது அவளைத் தம் படத்துக்கு ‘புக்’ செயதுவிடவேண்டும் என்ற ஒரே எண்ணம்தான் அந்த முதலாளிக்கும். எனவே வசுந்தரா கட்டிய மனக் கோட்டை கெட்டியாகி விட்டது. “புவன மோஹினி” என்ற படத்தின் கதாநாயகியாக நடிகக—முபபதினாயிரம் ரூபாய் பேசி, ஒப்பந்தம் முடிவாகிவிட்டது, வசு கையெழுத்துப் போட்டு முன்பணமாகப்பத்தாயிரம்ரூபாய்க்குக்கத்தை நோட்டுகள் பெற்றுக் கொண்டு வீட்டுக்குத் திரும்பிவிட்டாள். இவ்வளவும் பரம இரகசியம்! காதுக்குக்காது வைத்தார்ப்போல நடந்து விட்டது.

ஒப்பந்தம் கையெழுத்திட்டு ஒரு மாதம் கடந்தது. அதுவரை வசு தன் கணவரிடம் இதைச் சொல்லத் துணியவில்லை. எனினும் சந்துருவுக்கு மட்டும் விஷயம் எப்படியோ எட்டிவிட்டது. சந்துருவின் மனதில் புயல் வீசிற்று. வசுவிடம் கேட்கவும் மனமில்லை; அவளாக விஷயத்தைச் சொல்லட்டும் என்ற நினைப்பு வேறு. ஏதோ நினைத்தவனாய் “வசு!” என்று கூப்பிடுவான். அடுத்த கணம் மனமாற்றமுற்று ஏதாவது சாக்குச் சொல்லிப் பேசசை மாற்றி விடுவான்.

* * *

சந்துரு கடற்கரையிலே தன்னந்தனியாக ஏதோ சிந்தித்தவனாய் உட்கார்ந்திருந்தான். அவன்தனிமையைக்கலைக்க அவன் நண்பன் ஒருவன் அங்கே வந்தான். சந்துருவின் முதுகில் ஒருஷொட்டு கொடுத்து, “ஏண்டா! உன் மனைவி ‘புவன மோஹினி’யில் நடிக்கிறதாக சொல்லவில்லையேடா?...இதோ பாருடா விளம்பரம்!...” என்று சொல்லி சந்துருவிடம் ஒரு பத்திரிகையை நீட்டினான் நண்பன். சந்துரு அவசர அவசரமாகப் பத்திரிகையைப் புரட்டி விளம்பரத்தைத் தேடினான். மூன்றாம் பக்கத்தில் முகப்புடன பிரகாசித்தது ‘புவன மோஹினி’ விளம்பரம். அத்துடன் புன்னகை பொங்கும் வசுவின் படமும் மிளிர்ந்தது. அந்தப் படத்தை வெறிக்க வெறிக்கப் பார்த்தான் சந்துரு. ஒரு கண நேரத்தில் அவனது முகக் கோணங்கள் பல தினுசுகளாக மாறிவிட்டன. அவனது நண்பனுக்கு ஒரே திக்பிரமையாகி விட்டது. “ஏண்டா சந்துரு, என்னடா...?’! என்று கேட்க நினைத்தவன், பேசாமலிருந்து விட்டான். அடுத்த கணம் சடாரென்று எழுந்து விறுவிறென்று நடக்க ஆரம்பித்தான சந்துரு. அவனைத் தடுத்து நிறுத்திவைக்க நணபன் துணியவில்லை.

கடலின் கொந்தளிப்பும் அலைகளும் போல சந்துருவின் மன அலைகள் கொந்தளித்துக் குமுறுகின்ற நேரத்தில், வீட்டை நெருங்கினான். அதே சமயத்தில் அவன் வீட்டின் முன்பு நின்றிருந்த ஒரு புத்தப் புதிய ‘மெர்க்குரி’ கார் விர்ரென்று பறந்து சென்றது. சந்துருவின் உள்ளம் ஏறகெனவே குமுறியிருந்தது. எனவே ஆயிரமாயிரம் எண்ணங்கள்

[தொடர்ச்சி 66-ம் பக்கத்தில்]

ஒரு காரியம் ஆகவேண்டும் என்ற எண்ணத்துடன் நாம் ஒரு அதிகாரியைப் பார்க்கப் போவதாக வைத்துக்கொள்வோம். அவருக்குக் கீழுள்ள சிப்பந்திகளை மனதில் கொண்டு, 'சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்க வேண்டுமே' என்ற பழமொழியை நினைத்துப் பார்த்து, நமது காரியம் வெற்றி பெறுமா என்று நாம் சஞ்சலப்படுவது வழக்கம். சாமி வரம் கொடுத்து, பூசாரியின் வரமும் கிடைத்தாலும் கிடைத்துவிடும்; ஆனால் அரிது, அரிது, ஒரு பட முதலாளியின் கிருபை கிடைத்தும், அந்தப் பட டைரெக்டரின் 'கிருபா கடாக்ஷம்' கிட்டுவது! நான் இதை எழுதக் காரணமாக இருப்பது, சமீப காலத்தில் நம் பட உலகில் நடைபெற்ற சில சம்பவங்களேயாகும்.

* * *

தமிழ் நாட்டின் பிரபல ஸ்டுடியோ ஒன்றிலிருந்து தயாராகி வெளி வந்த ஒரு சிறந்த படம். முதலாளி, அப்படத்தில் வில்லனின் காதலியாக நடிக்க ஒரு குறிப்பிட்ட நடிகையைப் பற்றி யோசிக்கும்படி படத்தின் டைரெக்டரிடம் கூறினார். அநேகமாக அந்த நடிகைக்கு அந்த அதிருஷ்டம் கிடைத்து விடும் போலத்தான் இருந்தது. ஆனால் கடைசியில் நடைபெற்றது என்ன? அந்த பாகத்தில் நடிக்க டைரெக்டரின் 'தயை' பூரணமாகக் கிடைக்கப் பெற்ற ஒரு நடிகை அமர்த்தப்பட்டு, படம் தயாராகித் திரையிடப் பட்டும் ஆயிற்று!

* * *

வருஷக் கணக்காகத் தயாராகி வருகிறது ஒரு புராணப் படம். அந்தப் படத்தில், தமது அபிமானமுள்ள ஒரு 'மாஜி' நாடக நடிகருக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கும்படி ஒரு பாடகியான நடிகை, முதலாளியை அணுகினார். முதலாளியும் அவரது வேண்டுகோளை மறுக்க முடியாதபடி, அந்த நடிகருக்கு ஒரு வேஷம் கொடுக்கும்படி டைரெக்டருக்கு அறிவித்தார். டைரெக்டரும், "படத்தில் ஒரு சிற்றரசனின் பாத்திரம் வருகிறது. அதை உங்களுக்கே தருகிறேன்" என்று கூறி அனுப்பி வைத்தார். நடிகரும், பாடகியும் அந்த நன்னாளை எதிர் நோக்கி இருந்தனர். ஆனால் அவருக்குக் கொடுப்பதாதக் கூறிய பாத்திரத்திற்கு வேறு ஒரு நடிகர் அமர்த்தப் பட்டுவிட்ட விஷயம் தெரிந்ததும், நடிகரும் பாடகியும் நான் மேலே குறிப்பிட்ட பழமொழியைச் சொல்லி, டைரெக்டரை சாபமிட்டிருப்பார்கள் என்பது நிச்சயம்!

* * *

டைரெக்டர்களைக் குறித்து எழுதும் போது சில உதவி டைரெக்டர்களின் சமீப கால விபரீதச் செயல்களையும் கூறாமல் மேலே போக முடியவில்லை. பிரபல ஸ்டுடியோ ஒன்றில் ஒருவர் உதவி டைரெக்டராக இருந்து வருகிறார். அவர் ரொம்பவும் சின்ன வேலையிலிருந்து இந்தப் பதவிக்கு உயர்ந்தவர். தம் திறமையினால்தான் தாம் முன்னுக்கு வந்ததாக அவர் கூறுவதைப் பலர் ஆக்ஷேபிக்கிறார்கள். அவருடைய மின்னல் வேக முன்னேற்றத்திற்குக் காரணம், 'காக்காய் பிடிக்கும்' கலையில் அவர் தேர்ச்சி பெற்றிருப்பதுதான் என்று அவர்கள் கூறுகிறார்கள். அது எப்படியாவது இருந்து விட்டுப் போகட்டும்.

அரைக் கிழமாகிவிட்ட (சுமார் 45 வயதுள்ள) இந்த உதவி டைரெக்டருக்குத் தலை நரைத்தும் ஆசை நரைத்ததாகக் காணோம். அவருடைய செய்கைகளை கவனிக்கும்போது அவருக்கு வாலிபம் திரும்புவதாகவே தோன்றுகிறது. தம் 'கட்டிய மனைவி'யை இழந்த இவர், தமக்கு மகள் முறையாக வேண்டிய—ஏற்கெனவே விவாஹமான—ஒரு மங்கையுடன் பகிரங்கமாக வாழ்க்கையை நடத்தத் தொடங்கினர். ஆத்திரங்கொண்ட அம் மங்கையின் கணவன் அவளையும், உதவி டைரெக்டரையும் கத்தியால் குத்திவிட்டு, தற்போது சிறையில் கடும் தண்டனையை அனுபவித்து வருகிறன். அத்துடனவது அவர் திருப்தி அடைந்தாரா? அதுதானே இல்லை!

* * *

ஒரு 'எக்ஸ்ட்ரா' நடிகையைத் தமது 'லைட் காரி'ல் ஏற்றிக் கொண்டு ஆனந்தமாகக் கழித்தார் கொஞ்ச காலம். பிறகு அவளையும் கை நழுவ விட்டு விட்டு, இப்பொழுது ஒரு 'கறுப்பி'யின் மையலில் மூழ்கிக் கிடக்கிருர். இப்பொழுதெல்லாம் ஸ்டுடியோவிலிருந்து வீட்டுக்குத் திரும்பும் அவருக்கு, 'சக்களத்திப் போராட்ட'த்திற்குப் பஞ்சாயத்துப் பண்ணவே பொழுது சரியாக இருக்கிறதாம். இந்தக் 'கறுப்பி'க்கு எப்பொழுது கிடைக்கப் போகிறதோ சீட்டு! 'இவருக்கு ஏன் புத்தி இப்படிப் போகிறது?' என்று பச்சாத்தாபப் படுகிருர்கள் விஷயம் தெரிந்தவர்கள்.

* * *

ஒரே டைரெக்டரிடம் பல வருஷ காலமாக உதவி டைரெக்டராக இருந்து வரும் மற்ருெருவர். இவர் சாதாரண நடிகராகத் திரை உலகில் கால் வைத்து இந்த ஸ்தானத்திற்கு உயர்ந்தவர். இவர் உதவியாக இருந்துவரும் டைரெக்டருக்கே இப்பொழுது பட உலகில் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்ருல் இவரைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? ஆகவே பிழைப்புக்காக இவர் 'தரகு' தொழிலில் பிரவேசித்திருக்கிருர். நாணயமாகச் செய்தால் எந்தத் தொழிலானல் என்ன? இவர் சமீபத்தில் தமது புதுத் தொழிலில் நாணயமில்லாமல் நடந்து கொண்டதுதான் வருந்தத் தக்கது. ஒரு கல்யாணத்திற்கு சங்கீதக் கச்சேரி ஒன்றை ஏற்பாடு செய்தார் இவர். கச்சேரி நடைபெற்றது. பாடகிக்கு, தன் 'தரகு கூலி' (கமிஷன்) போக மீதித் தொகையை அவர் கொடுத்திருக்க வேண்டும். ஆனல் அப்படிச் செய்யாமல் பூராப் பணத்தையுமே அவர் ஸ்வீகரித்துக் கொண்டு விட்டார்.

* * *

ஒரு பிரபல ஆங்கில தினசரி நடத்தும், ஆங்கில வாரப் பத்திரிகையின் சினிமா ஆசிரியர் தமது பத்திரிகையில் வெளியிடுவதற்காக, தமிழ்ப்பட ஹாஸ்ய நடிகர் ஒருவரை பேட்டி காணப் போனர். பேட்டியை முடித்துக்கொண்டு பேசாமல் திரும்பி வந்திருக்கக் கூடாதா அவர்! "என்ன பரத நாட்டியம், ஸார்!" என்று தொடங்கி, பரத நாட்டியத்தைப்பற்றி வசை புராணம் பாடி முடித்தாராம். அத்துடனவது நின்ருரா? அதுதானே இல்லை. மேனட்டு நடனங்களைப்பற்றி ஒரேயடியாக சிலாகித்து வேறு பேசினராம். ஹாஸ்ய நடிகர், நடுவில் ஏதும் பேசாமல், கடைசி வரை பொறுமையுடன் அந்தக் குட்டிப் பிரசங்கத்தைச் சகித்துக்கொண்டிருந்தாராம். அது எப்பொழுது முடியும் என்று காத்துக் கொண்டிருந்தவர்போலத் தமது அபிப்பிராயத்தையும் உடனே வெளியிட்டாராம். "ஆமாம், நீங்கள் சொல்வது உண்மை. மேனட்டு நடனமாடுகிறவர்கள் 'ஜாய் ஜாய்' (Joy) என்று சந்தோஷமாக ஆடுகிருர்கள். ஆனல் அடுத்த வருஷமே 'பாய் பாய்' (Boy) என்று திண்டாடுகிருர்கள். அதெல்லாம் நம்ம பரத நாட்டியத்தில் கிடையாது, ஸார்!" என்று அவர்

ரஸிகர்களின் தளராத அபிமானத்தைப் பெற்ற டி. ஆர். ராஜகுமாரி ஜுபிடரின் "விஜயகுமாரி"யில் நடன விருந்தளிக்கிறார்.

கூறுவேன். 'குண்டூசி' பத்திரிகைக்கு விரோதிகள் என்பதே கிடையாது. தொழிலிலுள்ள ஒவ்வொரு நபரையும் 'குண்டூசி' தன் நண்பராகவே மதிக்கிறது. இத்துறையில் ஈடுபட்டவர்களிடம் காணப்படும் குற்றங்குறைகளை 'குண்டூசி' உள்ளது உள்ளபடி எடுத்துக் கூறுவதற்காக அதை ஒரு 'அணுகுண்டு' என்றோ, 'ஹைட்ரோஜன் பாம்' என்றோ எண்ணி பீதி அடைகிறவர்களைக் கண்டு நகைப்பதைத் தவிர வேறு என்ன செய்வது?

* * *

இந்த நடிகர் 'குண்டூசி'யைத் தமது விரோதி என்று கூறுவதுடன் நின்றிருந்தாரானால் பாதகமில்லை. தாம் தற்பொழுது தயாரித்துவரும் படத்தின் வசன கர்த்தாவைக் கொண்டு, நம் பத்திரிகையில் தம்மைப் பற்றி வெளிவரும் விஷயங்களுக்கு மறுப்பு எழுதச் சொல்லி அதைப் பத்திரிகையில் பிரசுரிக்க விரும்புவதாக அவர் சொல்லும் போதுதான் என்னால் நகைக்காமல் இருக்க முடியவில்லை. விஷயம் தெரிந்த நமது நண்பர் ஒருவர் கூறிய அதே பதிலைத்தான் நடிகருக்கு நானும் கூற விரும்புகிறேன். "பேஷாக மறுப்பு எழுதுங்கள். படத்திற்கு விளம்பரம் கொடுப்பதுபோல அந்த மறுப்புகளையும் பத்திரிகையில் விளம்பரமாகப் போடுங்கள்." இன்னொரு யோசனைகூடக் கூறுகிறேன். உங்கள் மறுப்புகளை எந்தப் பத்திரிகையும் பிரசுரிக்கத் துணியாவிட்டால் நீங்கள் அதற்காக ஒரு பத்திரிகையையே ஆரம்பித்து விடுங்கள்.

* * *

இந்த நடிகர் 'குண்டூசி'யைப் பற்றி

கிண்டலாகக் கூறிய அந்த பதில், நிருபரின் மண்டையில் அடித்தது போலாகிவிட்டதாம். முகத்தில் அசடு வழிய நிருபர் திரும்பினாராம்.

* * *

"குண்டூசி பத்திரிகைதான் எனது முதல் விரோதி" என்று ஒருவர் சொல்லுகிறார் என்றால், உங்களுக்கு 'அந்த விசித்திரப் பிறவி யார்?' என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? 'அப்படிக் கூறுகிறவர் தமிழ் நாட்டின் முன்னணி நடிகர்களில் ஒருவர்' என்று நான் சொன்னால் உங்கள் ஆச்சரியம் இரு பங்காகப் பெருகுகிறது; அப்படித்தானே! ஆனால் இது முற்றிலும் உண்மை. 'ஆச்சரியம், ஆனால் உண்மை' ரகத்தைச் சேர்ந்தது இது. அந்த நடிகருடைய அபிப்பிராயம் எப்படியாவது இருந்து விட்டுப் போகட்டும். ஒரு விஷயம் மட்டும் நான் நிச்சயமாகக்

கோபப்படக் காரணம் என்ன தெரியுமா? அவர் மரக் கட்டைபோல் நின்ருலும், அழுதாலும், 'நடிப்பு அபாரம்; பாட்டு கர்ணமிருதம்' என்று 'குண்டூசி' எழுதவில்லை என்ற குறைதான். 'உள்ளதை உள்ளபடி' எழுதுவதற்காக, விரோதம் பாராட்டுவதானல், அத்தகைய எதிரிகள் எவ்வளவு பேர்கள் ஏற்பட்டாலும் 'குண்டூசி'க்குக் கவலையில்லை. 'பாராட்ட வேண்டிய அம்சங்களைப் பாராட்டுவதும், கண்டிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் கண்டிப்பதும்தான்' நம் பத்திரிகையின் கொள்கை. 'குண்டூசி' ஆரம்பம் முதல் நாளது வரை அதையேதான் கடைப் பிடித்து வருகிறது. பழைய இதழ்களை யெல்லாம் நடிகர் பொறுமையாகப் புரட்டிப் பார்த்தால், 'அடிக்கிற கைதான் அணைக்கும்' என்பது தம் விஷயத்தில் எவ்வளவு தூரம் பொருந்தியிருக்கிறதுஎன்பதை அவர் உணரமுடியும்.

ஆடப் பிறந்த லலிதா—பத்மினி சகோதரிகளில் ஒருவரான லலிதா 'விஜயகுமாரி'யில் இவ்விதம் நடனம் ஆடியிருக்கிருர்

எனவே நியாயவாதிகளை விரோதிகளாக எண்ணிக் கொண்டிருப்பதற்குப் பதில், தோல்வியடைந்து வரும் தம் படங்களை எண்ணிப் பார்த்துத் தம்மைத் திருத்திக்கொள்ள இவர் முயன்ருல் நன்ருயிருக்குமல்லவா?

• • •

'வலுவில் போனல் ஜாதிக்கு இளப்பம்' என்று சொல்லுகிருர்களே; அதென்னவோ நூற்றுக்கு நூறு உண்மையான பழமொழி. சமீபத்தில் நடந்த ஒரு சம்பவத்தைத் தெரிந்து கொண்டால் நீங்களும் இதை ஆமோதிப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

பல பாஷைகள் தெரிந்த, பல தமிழ்ப் படங்களிலும், சில தெலுங்குப் படங்களிலும் நடித்துள்ள ஒரு நடிகை. தற்சமயம்—திறமையில்லாமையினல் என்று சொல்ல முடியாது—துரதிருஷ்டவசமாக படங்களில் நடிக்க சந்தர்ப்பம் கிடைக்காது சிரமமான நிலையில் இருந்து வருகிருர். படத் தொழிலிலிருந்து சில காலம் விலகியிருந்த, டைரெக்டர்—படமுதலாளியான ஒருவர், தமிழ், தெலுங்கு ஆகிய இரு பாஷைகளிலும் ஒரு படம் பிடிக்கப் போவதை அறிந்த இந்த நடிகை அவரை அணுகி அவரது படங்களில் தமக்கு சந்தர்ப்பம் அளிக்கும்படி கேட்டார். அதற்கு அவர், மிகக் குறைவான ஒரு தொகையைக் குறிப்பிட்டு, அத்தொகையைப் பெற்றுக் கொண்டு, தமது இரு பாஷைப் படங்களிலும் நடிக்க சம்மதமா என்று கேட்டாராம். அவர் குறிப்பிட்ட தொகை நடிகை அதற்கு முன் வாங்கிய தொகைகளில் பத்தில் ஒன்று கூட இல்லையாம்! பாவம்! நடிகை, நான் மேலே சொன்ன பழமொழியை எண்ணி, தம் போதாத காலத்தை நொந்துகொண்டு வீடு திரும்பினராம்.

எம்.இ. தங்கள் மைதீன் (குலமாணிக்கம்)

குமாரி கமலா எது வரையில் படித்திருக்கிறார்?

கமலா சிறு வயதிலேயே நடனத்தைக் கற்கவும், சினிமாவில் நடிக்கவும் முற்பட்டு விட்டதால் பள்ளிக்கூடத்திற்குச் சென்று படிக்கும் சந்தர்ப்பம் அவருக்கு ஏற்படவில்லை. ஆதலால் ஒரு உபாத்தியாயரிடம் கல்வி பயின்றிருக்கிறார். ஒரு நான்காவது பாரம் மாணவிக்கு இணையான படிப்பை அவர் பெற்றிருப்பதாகச் சொல்லலாம்.

* * *

என், எஸ். கிருஷ்ணன் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்? அவருக்கு வயது என்ன ஆகிறது?

என். எஸ். கே. நாஞ்சில் நாட்டு வேளாளர் ஜாதியைச் சேர்ந்தவர். அவருக்கு இப்பொழுது சுமார் 40 வயதிருக்கும்.

ஜி. எஸ். முகம் (கொடியாலம்)

எடிட்டிங், செட்டிங், ஸ்டில், லெபரட்டரி, மோல்டிங்—இப்பதங்களை விளக்கவும்.

(1) துண்டு துண்டாக எடுக்கப்படும் காட்சிகளை, (அவசியமில்லாத பாகங்களை வெட்டி விட்டு) நீங்கள் காட்சியில் பார்க்கும் படத்தைப் போல், முன் பின்னாக நெகடிவை வெட்டி ஒட்டுவதற்கு 'எடிட்டிங்' என்று பெயர்.

(2) படங்களில் வரும் வீடு முதலிய காட்சிகளை ஜோடிக்கும் தட்டிகள் 'ஸெட்டிங்ஸ்' எனப்படும்.

(3) பத்திரிகைகளில் நீங்கள் பார்க்கும் சினிமா சம்பந்தமான படங்களின் அசல் போட்டோக்களுக்கு 'ஸ்டில்' என்று பெயர்.

(4) படத் தயாரிப்பு சம்பந்தமான பிலிம் சுருளைகளைக் கழுவி, சுத்தம் செய்து, பிலிம் பிரதிகளைத் தயாரித்துக் கொடுக்கும் ரசாயன சாலைதான் 'லெபரட்டரி.'

(5) காட்சித் தட்டிகள் மீது காணப்படும் பூச்சித்திர வேலை போன்றவைகளை வார்க்கும் முறை 'மோல்டிங்' எனப்படும்.

கோ. ந. சௌடப்பன் (கோயமுத்தூர்)

வைஜயந்தி மாலாவின் விலாஸத்தைப் பத்திரிகைகள் இரண்டு மூன்று வகையாய் தெரிவிக்கின்றனவே. சரியான விலாஸம் எது?

சென்ற ஊசியில் வெளிவந்துள்ளது.

* * *

வைஜயந்திமாலா ஏதேனும் இசைத் தட்டில் பாடியிருக்கிறாரா?

இல்லை யென்று நினைக்கிறேன்.

* * *

நான் ஒரு தமிழ் நக்ஷத்திரத்திற்கு, அவரது கையெழுத்திட்ட போட்டோவை அனுப்பித் தரும்படி' பல கடிதங்கள் எழுதினேன். பதிலில்லை. பிறகு சுவரொட்டி யொன்றில் வெளி வந்திருந்த அவரது படத்தை போட்டோ பிடித்தனுப்பினேன். அதற்கும் பதிலில்லை. நம் தமிழ் நக்ஷத்திரங்களே இப்படித்தானோ?

ஆம். அவர்களுக்குப் புகழ் அடைவதற்கான வழிகளும் தெரியாது. அடைந்த புகழை காப்பாற்றிக் கொள்ளுவதற்கும் அவர்கள் முயற்சிப்பதில்லை. தம் ரசிகர்களுக்கு அவர்கள் போட்டோவோ, கடிதமோ அனுப்புவதே கிடையாது. காரணம், இப்படிச் செய்வதால் ஏற்படக்கூடிய விளம்பரப் பயன் அவர்களுக்குத் தெரியாததுதான்.

"நான் தலை பின்னிவிட்டது எப்படி?" என்று சாந்தகுமாரி ஜானகியிடம் கேட்பது போலிருக்கிறது— விஜயாவின் "மசளகார்" தெலுங்கு சமூகப் படத்தில்

பி. அண்ணாத்துரை (சுந்தரபாண்டியபுரம்)

எம். கே. டி. பாகவதர் இப்பொழுதெல்லாம் அதிகமாக கச்சேரிகளே செய்து கொண்டிருக்கிறாரே? அமரகவி, வித்யாஸாகரர், ராஜயோகி, ஆகிய படங்களில் ஏன் நடிக்கவில்லை?

பாலாஜி பிக்சர்ஸார் "லைலா மஜ்னு"வை முடித்து விட்டதால் சீக்கிரமே "அமர கவி" தயாரிப்பில் முனையக் கூடும். "வித்யாஸாகரர்" பற்றிய தீர்மானம் ஒன்றும் ஏற்படவில்லை. "ராஜயோகி" ஏலத்தில் போயிருக்கிறது. இனிதான் தெரியும் அதன் கதி.

மு. கா. மு. நயினாமுகம்மது (கீழக்கரை)

வாழ்க்கை படத்தில் வைஜயந்திமாலா பாடும் பாட்டுகள் யாவும் சொந்தக் குரலில் பாடப்பட்டவையா? அல்லது இரவல் குரலா? இரவல் குரல் எனின், அது யாருடைய குரல்?

அப்பாட்டுகள் இரவல் குரலில் பாடப்பட்டவையே. குரல் தானம் செய்துள்ளவர் ராஜேஸ்வரி போலிருக்கிறது.

கே. பி. நாராயணன் (கே. என். பாளையம்)

லலிதா-பத்மினி சகோதரியரை எங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் ஒரு விசேஷ வைபவத்தில் நடனம் ஆட அழைத்தால் வருவார்களா? என்ன பணம் கேட்பார்கள்?

வருவார்கள். சென்ற மாத ஊசியில் அவர்களுடைய விலாஸத்தைத் தெரிவித்திருக்கிறேன். தொகை விஷயத்திற்கு அவர்களுக்கே எழுதிக் கேளும்.

பி. சுந்தரராஜ் (வீரிகோடு)

வைஜயந்திமாலா காலேஜில் படித்து வருவதாகக் கேள்விப்படுகிறன். உண்மையா?

இல்லை. 'நீர் நம்பக்கூடிய படி' அவர் அவ்வளவு தத்ரூபமாய் "வாழ்க்கை" படத்தில் நடித்திருக்கிறார்!

எஸ். முகம்மது சுல்தான் (கூத்தியம்பேட்டை)

முன்பெல்லாம் காளி என். ரத்தினமும் வி. டி. ராஜகாந்தமும் ஒன்றாகவே நடித்து வந்தார்களே. இப்பொழுதோ சில படங்களில் சேர்ந்து நடிக்காத காரணம் என்ன?

முன்பெல்லாம் அவர்கள் சேர்ந்தே வசித்து வந்தனர்; இப்பொழுதோ இல்லை. இதுதான் காரணம்.

கே. எஸ். சுந்தரம் (மைலாப்பூர்)

"குண்டூசி"யில் நடன நிகழ்ச்சிகளைப்பற்றி "நந்தி" என்ற புனைபெயருடன் எழுதுபவர் யார்? உங்கள் பத்திரிகையில் நடனக் கலையைப் பற்றி கட்டுரைகள் எழுதியுள்ள அ. ரா. கிருஷ்ணமூர்த்தி என்பவரா? இல்லையென்றால் வேறு யார்?

சில சமயம் நாம் நினைப்பதே உண்மையாகவும் இருந்து விடுவதுண்டு. ஆனால், "நந்தி" தம் உண்மைப் பெயரை தற்போதைக்கு வெளியிட விரும்பவில்லை.

எஸ். குருநாதன் (திருவனந்தபுரம்)

நம் இந்தியப் படவுலகில் சங்கீதம், நடனம், நடிப்பு, அழகு இவை எல்லாம் பொருந்திய நடிகை யார்?

ஒருவருமில்லை.

ஈ. ராஜாமணி (பம்பாய்)

''.........'' பத்திரிகையில், லலிதா பத்மினி சகோதரியர் ஆங்கில உடை அணிந்துள்ள ஒரு சகிக்க முடியாத போட்டோ வெளிவந்திருந்தது. அவர்களது பெற்ருேர்கள் ஏன் சம்மதிக்கிருர்கள் இதற்கு?

உம்மால் சகித்துக் கொள்ள முடியாத இதை அவர்கள் தவருகக் கருதவில்லை என்று தெரியவில்லையா?

* * *

வாழ்க்கைப் படத்தில் எதற்காக ஹிந்தி மெட்டுகளைக் காப்பியடித்திருக்கிருர்கள்?

சுலபமாகப் பிரபலம் அடைவதற்கு.

* * *

சிந்தி பெண்களுக்கு மீசை முளைப்பதின் காரணம் என்ன?

அவர்களுக்கு மீசை முளைப்பது எவ்வளவு பொருத்தமில்லாமலிருக்கிறதோ அதைவிடப் பொருத்தமில்லாமலிருக்கும் நான் இக்கேள்விக்கு இப் பகுதியில் பதில் அளிப்பது!

* * *

நம் நடிகைகளுள் அழகிய சிறந்த நடிகை யார்?

உம் அபிமானத்தின் முன்னணியில் நிற்பவர்!

ஆர். கிருஷ்ணன் (கோயமுத்தூர்)

''பிலிமிந்தியா'' பத்திரிகை செய்வதுபோல தாங்களும், சினிமாவில் சேர விரும்புவோரின் புகைப் படங்களை வெளியிட்டு, ஆதரிக்க முடியுமா? இதுபோல என் போட்டோவை வெளியிட முடியுமா?

இதை வீண் முயற்சி என்றே நான் கருதுகிறேன். நேரில் பட முதலாளிகளைப் பார்க்கும் ''திறமைசாலிகளை''யே பட முதலாளிகள் சட்டை செய்வதில்லையென்ருல், போட்டோ விளம்பரத்தால் என்ன பயன் எற்படக்கூடும், சொல்லும்?

வி. ராஜாராமன் (மண்ணடி)

குமாரி கமலாவை நடனக் கச்சேரிக்கு அழைத்தால் வருவாரா? விவரங்கள் எழுதவும்.

உமக்கேன் அவ்வளவு சந்தேகம்? அவர்தான் நடனக்கச்சேரிகள் செய்து வருகிருரே. ''குமாரி கமலா, அப்பு முதலி தெரு, மைலாப்பூர், சென்னை'' என்ற விலாஸத்திற்கு எழுதி விவரங்களைத் தெரிந்து கொள்ளும்.

* * *

''ஜெகசிற்பியன்'' என்ற பெயருடையவரும் நாகர்கோயில் மஹாதேவனும் ஒரே நபர்தானு?

இல்லை தனித்தனி எழுத்தாளர்கள்.

வி. ஸ்ரீநிவாஸன் (மண்டியா)

வாழ்க்கையில் டி. ஆர். ராமச்சந்திரன் மிருதங்கம் வாசிக்கிருரே? அவருக்கு மிருதங்கம் வாசிக்கத் தெரியுமா?

தெரியுமாம்.

வி. கோவிந்தராஜுலு (திருக்கோவிலூர்)

வாழ்க்கை படத்தில் வைஜயந்திமாலாவுக்கு குரல் இரவல் கொடுத்திருப்பவர் யார்?

(நயினு முகம்மதுக்கு அளித்திருக்கும் பதிலை கவனிக்கவும்)

அகில இந்திய சினிமாப் புரட்சியை உண்டுபண்ணியுள்ள ''சந்திரலேகா'' படம் மீண்டும் தமிழ் நாட்டில் வெளிவந்திருக்கிறது. அதில் மதுரமும் சுந்தரிபாயும்.

டி. ஆர். ராமச்சந்திரன் ஒரு 'ரோலி பிளக்ஸ்' கேமிராவை வாங்கியிருக்கிறார். "வாழ்க்கை" படத்தின் தெலுங்குப் பதிப்பான "ஜீவனம்" ஷூட்டிங் காட்சி அவரது கேமிராவிற்குள் முதன்முதலாக அகப்பட்டுக் கொண்டுவிட்டது. மேலே உள்ளதுதான் அக் காட்சி.

நா. கந்தையா
(யாழ்ப்பாணம்)

யோக மங்களத்திற்கு தற்போது வயது என்ன ஆகிறது? தற்போது எந்தப் படத்தில் நடித்துவருகிறார்?

யோக மங்களம் கடைசியாக நடித்திருக்கும் படம் "சுதர்சன்." வேறு எந்தப் படத்திற்கும் அவர் ஒப்பந்தம் செய்யப்படவில்லை. அவருக்கு வயது 21 ஆகிறது.

பீ. எம். அப்துல் சத்தார்
(பொள்ளாச்சி)

பி. எஸ. சரோஜா சில படங்களில் மார்பைக் குலுக்குவதைப் பார்க்க எனக்கு வெட்கமாய் இருக்கிறது.

அவர் வெட்கப்படாமல் செய்யும் ஒன்றை நீர் பார்ப்பதற்கே வெட்கப்படுவது மிக வெட்கக் கேடான விஷயந்தான்!

வி. ராஜாராமன் (ராய்ப்பூர், மத்யபிரதேஷ்)

நானும தான் வெகுகாலமாய் பார்த்துக்கொண்டே வருகிறேன். ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி கணக்கு வழக்கில்லாமல் உதவி நிதிக் கச்சேரிகள் செய்து வருகிறாரே. இதன் நோக்கமென்ன?

தம் ஆயுட்காலத்தில் ஒரு பாடகி சம்பாதித்துக் கொள்ளக்கூடிய புகழை 'எம். எஸ்.' சம்பாதித்துக் கொண்டு விட்டார். இந்தப் புகழ் தம் காலத்திற்குப் பின்னரும் நெடு நாளைக்கு நீடித்திருக்க வேண்டும் என்பதற்காக அவர் இப்பொழுது பாடுபட்டு வருகிறார்.

* * *

மாதுரி தேவி எந்த ஜாதியைச் சேர்ந்தவர்? என்ன வயதோ? விவாஹமாகி விட்டதா? எனின், யாரை மணந்து கொண்டிருக்கிறார்? சொந்த ஊர் எதுவோ? முதன் முதலில் நடித்த படம் எது? இதுவரை எந்தெந்தப் படங்களில் நடித்திருக்கிறார்?

ஏ. நமசிவாயன்
(கூளவேலம் பட்டிப் புதூர்)

முன்பெல்லாம் "குண்டூசி" அதிக பக்கங்களுடனும், பெரிய அளவிலும் வெளி வந்தது. இப்பொழுதோ அளவையும் பக்கங்களையும் குறைத்துள்ளதன் காரணம் என்ன?

நீங்கள் நினைப்பது முற்றிலும் தவறு. "குண்டூசி" ஆரம்பித்த நாள் முதல் இன்று வரை 68 பக்கங்களுடன், ஒரே அளவிலே தான் வெளிவருகிறது. வேண்டுமானால் முந்தின 'ஊசி'களுடன் ஒத்திட்டுப் பாரும்.

வீ. எஸ். சதாசிவம் (பாண்டிச்சேரி)

சித்திரக்காரர் "தாணு" ஒரு முழு நீளக் கார்ட்டூன் படத்தைத் தயாரிக்கப் போவதாக என் நண்பர் கூறுகிறார். இது உண்மையா?

இதற்கான பணம் யாரிடம் இருக்கிறதென்பது தான் உண்மையில் தெரியவில்லை!

பிரதிபா பிக்சர்ஸின்
"ஸ்ரீ லக்ஷ்மம்மா கதா"
என்ற தெலுங்குப் படத்
தில் தாஸியாக நடித்தி
ருக்கிறார் சூர்யப்ரபா

உண்மையில் காதல் வெற்றி போலி
ருக்கிறதல்லவா! "உண்மையின்
வெற்றி"யில் எஸ். மேனகா

டெஸ்பி பில்ம்ஸின் ''உண்மையின் வெற்றி'' தமிழ்ப் படத்தில் நடிக்கிறார்கள்—சுப்பய்யாவும், வாஸனும்

சென்னையில் மூன்று தியேட்டர்களில் வெளிவந்துள்ள விஜயா ப்ரொடக்ஷன்ஸின் ''சௌகார்'' தெலுங்கு சமூகப் படத்தில் நடிக்கும் என். டி. ராமராவ்

முதன் முதலாக தமிழாக்கப்பட்டுள்ள "நீலக் கடல்" என்ற ஆங்கில டெக்னிகலர் படத்தில் ஜீன் சிமன்ஸும், டொனால்டு ஹௌஸ்டனும் நடிக்கிறார்கள்

இந்த இளமயில் குமாரி கமலா ஜூபிடரின் "விஜய குமாரி"யில் தோகை விரித் தாடுகிறார்.

வடநாட்டில் வெற்றிக்கொடி நாட்டிவிட்டு தமிழ் நாட்டிற்குத் திரும்பி யிருக்கிருள் ''சந்திரலேகா''

அமோஹ பொதுஜன ஆதரவை பெற்று, ".ஆந்திர என். எஸ். கிருஷ்ணனுக" விளங்கி வரும் சிவ ராவை, பிரதிபாவின் "ஸ்ரீ லக்ஷ்மம்மா கதா" என்ற தெலுங்குப் படத்தில் சந்திக்கலாம்.



சென்னையைச் சேர்ந்த மாதுரி தேவி கிருஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர். அவருக்கு இப்பொழுது 23 வயது ஆகி வருகிறது. மூஸா என்பவரை அவர் மணந்து கொண்டிருக்கிறார். அவர் முதன் முதலில் ''பாண்டுரங்கா'' விலும் பிறகு, ''வாயாடி'', ''லக்ஷ்மி விஜயம்'', ''ஆ. த. அபூர்வ சிந்தாமணி'' ''மோஹினி'', ''கன்னியின் காதலி'', ''பொன்முடி'' ஆகிய படங்களிலும் நடித்திருக்கிறார்.

பி. பி. மல்லிகார்ச்சுனன் (அரிசிகேரா)

வைஜயந்திமாலாவுக்கு கார் ஓட்டத் தெரியுமா?

தெரியும் போலத்தான் தோன்றுகிறது!

இ. பாலன் (திண்டுக்கல்)

தவமணி தற்போது சினிமா உலகில் காணப்படாததின் மர்மம் என்ன?

மர்மமுமில்லை, மண்ணுங்கட்டியுமில்லை. அவரிடம் பார்க்கக் கூடியதையெல்லாம் ரஸிகர்கள் முன்பே பார்த்துச் சலித்து விட்டார்கள். இதுதான் காரணம்.

* * *

குண்டூசியிடம் சந்தாதாரர்கள் மட்டும்தான் கேள்வி கேட்கலாமா? அல்லது எல்லோருமே கேட்கலாமா?

யார் வேண்டுமானாலும் கேட்கலாம்.

* * *

எனது நண்பரொருவர் வாழ்க்கை படத்தைப் பார்த்தது முதல், ''ஆ! நந்த கோபாலன்...'' என்று அடிக்கடி பிதற்றுகிறார். அவரைத் திருத்துவது எப்படி?

இந்தப் பிதற்றல் தீரும் வரையில் திரும்பத் திரும்ப அவர் ''வாழ்க்கை''ப் படத்தையே பார்த்துக் கொண்டிருக்கும்படி செய்யும்.

கே. ஏ. ரஹ்மான் (ஆத்தூர்)

நம் தமிழ் நாட்டில் முதன் முதலில் தயாரான தமிழ்ப் படம் எது? அதில் முக்கிய பாகங்களில் யார் நடித்திருக்கிறார்கள்?

தமிழ் நாட்டில் முதன் முதலில் தயாரான தமிழ்ப் படம் ஸ்ரீநிவாஸ ஸினிடோனின் ''ஸ்ரீநிவாஸ கல்யாணம்'' ஆகும். இதில் பி. எஸ். ஸ்ரீநிவாஸ ராவும், ஆர். பி. லக்ஷ்மி தேவியும் பிரதம பாகங்களில் நடித்திருக்கின்றனர்.

எஸ். ஏ. சோமசுந்தரம் பிள்ளை (ஜெயமங்கலம்)

என். எஸ். கிருஷ்ணன் பணம் சேர்த்து வருவதெல்லாம் ஏழைகளுக்காகவா?

அதெல்லாமொன்றுமில்லை. ஆனால், ஏழைகளிடம் அவருக்கு மிகுந்த அநுதாபம் உண்டு என்று தெரிகிறது.

ஜி. சுப்பையா (தூத்துக்குடி)

தற்போது தவமணி தேவி என்ன செய்து கொண்டிருக்கிறார்! அவரது விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

தற்போது தாம் என்ன செய்துகொண்டிருக்கிறார் என்பதை தவமணியாலேயே சொல்ல முடியாது! அவர் சினிமா உலகிலிருந்து விலகும் போது என்னிடம் விலாஸத்தைக் கொடுத்து விட்டுப் போகவில்லையே!

எச். வி. கோவுந்தசாமி (ஹாஸன்)

சினிமாப் படங்களால் இதுவரையில் நமக்கு ஏற்பட்டுள்ள நன்மைகள்

''குமரகுரு'' படத்தில் என். எஸ். கே. யைப் போல் நடித்த என். எஸ். சுப்பையாவுக்கு ''உண்மையின் வெற்றி'' யில் ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

என்ன? இனிமேல் ஏற்படக்கூடிய நன்மைகள் என்ன? எந்த முறையில் அவை நமக்கு நன்மை அளிக்க வேண்டும்?

இக் கேள்விகளுக்கு ஒரு கட்டுரையே எழுதி விடலாம். சினிமா மூலம் மக்களுக்குப் பொழுது போக்கும், அநேகருக்குப் பிழைக்கும் வழியும் ஏற்பட்டிருக்கிறது. தற்போதைய ரீதியிலேயே படங்கள் தயாரிக்கப்பட்டு வருமானல் சினிமாவினல் நன்மைக்குப் பதில் தீமையே ஏற்படும். எதிர் காலத்தில் சினிமாப் படங்கள் மக்களுக்கு அறிவூட்டும் வகையிலும், வாலிபர்களின் நடத்தையைத் தூய்மைப் படுத்தி அவர்களுக்கு தேசப்பற்றேற்படுத்தும் மாதிரியிலும், காம விகாரங்கள் சேர்க்கப் படாத கண்யமான பொழுது போக்கு சாதனமாகவும் இருக்க வேண்டும்.

எஸ். டி. மூர்த்தி (கட்டச்சோலைப்பட்டி)

என் திருமணத்தின்போது டி. ஆர். மஹாலிங்கத்தை கச்சேரி செய்ய அழைத்தால் வருவாரா?

வரக்கூடும். ஆனல், படமுதலாளிகள் வீசும் 'வலை'யிலிருந்தே அவர் நழுவி விடும் போது, உம்முடைய சிறிய கொக்கியில் அவ்வளவு சுலபமாக அவர் மாட்டிக் கொள்ளுவாரா?—என்று தான் நான் ஆச்சரியப் படுகிறேன்.

கே. எஸ். பிள்ளை (பம்பாய்)

பிலிமிந்தியா பத்திரிகையின் ஆசிரியரான பாபுராவ் படேல் தாம் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் பகுதியில் தம் போட்டோவை வெளியிட்டு வருகிறுரே, அதுபோல் "குண்டூசியைக் கேளுங்கள்" பகுதியின் தலைப்பில் உங்கள் போட்டோவை வெளியிடும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மன்னிக்கவும். 'என் எழுத்திற்கு மதிப்பே யொழிய என்முகத்திற்கு அல்ல' என்பதை நான் நன்கறிவேன். மேலும், இது போன்ற 'மட்டரகமான சுய விளம்பரமெ'ல்லாம் எனக்குத் துளியும் பிடிக்காது.

கே. எஸ். இந்திரா (மண்டியா)

விஜய குமாரியில் வரும் மந்திரவாதி கோரநாத் தன் மந்திர சக்தியினல் ஏன் தன் நொண்டிக் காலைச் சரி செய்து கொள்ளக் கூடாது?

பணம் காசையும், பண்டங்களையும் மந்திரத்தின் மூலம் வரவழைத்துக் காட்டும் மந்திரவாதிகள் ஏன் அந்த வித்தையைப் பிறருக்குச் செய்து காட்டிக் காசு சம்பாதிக்க வேண்டும்? மந்திரமெல்லாம் சுய நலத்திற்கு பலிக்காது போலும்.

ஆர். ராமராவ் (மண்டியா)

வாழ்க்கை படத்தில் வரும் அசோகன் எழுதிய "காதல் பரிசு" எங்கே கிடைக்கும்? அதன் விலை என்ன?

உம் காதலியிடம் கேளும்; கிடைக்கும்! விலை மதிப்பில்லாத விஷயம் இது?

பி. பெரியசாமி (அயோத்தியா பட்டணம்)

என். எஸ். கிருஷ்ணன் ஒரு ஸ்டுடியோவைக் கட்டப் போகிருராமே;

தருமபுர மடாதிபதி டில்லிக்கு விஜயம் செய்தபோது ஸௌத் இந்தியன் போர்டிங் ஹவுஸ் நாராயணய்யரின் குமாரி அம்புஜம் அவர் முன் நடனம் ஆடினர். மடாதிபதி குமாரி அம்புஜத்திற்கு பரிசுகளை வழங்கினர்.

பிரபல வி. சாந்தாராம் இப்பொழுது "தகேஸ்" (வாதக்ஷிணை) என்ற படத்தைத் தயாரித்து வருகிறார். அப் படத்தில் அவரது மனைவியான ஜெயஸ்ரீயும், பிரபல நடிகரான பிருத்விராஜும் நடித்துவருகின்றனர்.

உண்மைதானா? அவருடைய நாடகக் கம்பெனி என்னவாயிற்று?

என். எஸ். கே. ஸ்டுடியோவைக் கட்டும் செய்தி ஆதாரமற்றது. நாடகக் கம்பெனி தற்போது செயலற்று இருக்கிறது.

எஸ். யோகாம்பாள் (கீவளூர்)

அபூர்வ சகோதரர்கள் படத்தில் ராதா (விஜயன்) பாடுவது இரவல் குரலிலா? எனின் அது யாருடைய குரல்?

ராதா சொந்தக் குரலிலேயே பாடுகிறார் என்று கேள்வி.

* * *

லாவண்யா தமிழ்ப் படத்தில் கதாநாயகனைப் நடிப்பவர் யார்?

"பவளக். கொடி", "கன்னிகா" ஆகிய படங்களில் நடித்த டி. ஈ. வரதன்.

ஆர். தியாகராஜன் (கோயமுத்தூர்)

நீர் கணக்கில் புலியல்ல; பூனைதான் என்பதைக் காட்டி விட்டீரே! எஸ். ஜி. மணி என்பவரின் கேள்விக்கு நீர் அளித்துள்ள பதில் தவறு என்கிறேன் நான். சில நடிகைகளுக்கு உபகதாநாயகிகளாக நடிக்கும் போது கல்யாணம் நடக்கிறதே. அதை ஏன் மறந்து விட்டீர்?

பார்த்தீரா, நீர் சுண்டெலி மாதிரி விஷமத்திற்கு ஆரம்பித்து விட்டீரே! உபகதாநாயகிகளாக நடிக்கும் போது கிடைக்கும் கணவர்களை "உபகணவர்கள்" என்றல்லவா சொல்ல வேண்டும்!

கே. சுப்பையா பிள்ளை (பம்பாய்)

டி. ஆர். ராஜகுமாரி தேவதாஸி வகுப்பைச் சேர்ந்தவரென்று அறிகிறேன். சரிதானா?

சரிதான்.

மவிகை (எரியோடு)

என் நண்பரது கல்யாணத்தின் போது வைஜயந்தி மாலா நடனம் ஆட வருவாரா? பணம் எவ்வளவு கேட்பார்?

உம் நண்பர் கல்யாணத்தின் போதென்ன, உம் கல்யாணத்தின் போது

கூட ஆட வருவார். பண விஷயத்தை யெல்லாம் அவருக்கே எழுதிக் கேட்டுக் கொள்ளும்.

பா. கோ. தி. (உளுந்தூர்பேட்டை)

விஜய குமாரியில் நடிக்கும் கே. ஆர். ராமசாமி, எம். என். நம்பியார், டி. எஸ். பாலய்யா, சிறுகளத்தூர் சாமா ஆகியோரில் யாருக்கு முதல் ஸ்தானம் அளிக்கலாம்?

நம்பியாருக்கு முதல் ஸ்தானம் அளிக்கலாம் என்பது என் அபிப்பிராயம்.

எஸ். வெங்கடாசலம் (காளஹஸ்தி)

அபூர்வ சகோதரர்கள் தெலுங்குப் படத்தில் சொந்தக் குரலிலேயே தெலுங்கு பேசும் நடிக நடிகைகள் யார் யார்?

ராதா, பானுமதி, நாகேந்திர ராவ், சூர்யப்ரபா ஆகியோர் சொந்தக் குரலில் பேசியிருப்பதாகத் தெரிகிறது.

* * *

சினிமாவில் நன்றாகப் பாடும் டி. ஆர். மஹாலிங்கத்தின் தொண்டை நாடக மேடையில் "மக்கர்" செய்வதன் காரணம் என்ன? அவர் எவ்வளவு சீக்கிரமாக புகழ் பெற்றாரோ அதேபோல் சீக்கிரமாக புகழ் இழந்து வருவதேன்?

சினிமாப் படங்களில் ஒரே பாட்டை நன்றாக வரும் வரையில் திரும்பத் திரும்பப் பாடிப் பிறகு பதிவு செய்யலாம். ஆனால் நாடக மேடையில் அப்படி யல்லவே? மஹாலிங்கம் சீக்கிரமாகப் புகழ் இழந்து வருவதற்குக் காரணம் அவர் திடீரென்று புகழ் பெற்றது தான். எதிர்பாராத வகையில் செல்வம் வந்து குவிந்து விட்டதால், அவருக்குக் கலை மீது அலக்ஷியம் ஏற்பட்டு விட்டது.

பி. எல். கே. சொக்கலிங்கம் (லால்குடி)

எங்கள் ஊரில் ஒரு கலைச் சங்கத்தைத் திறந்து வைக்க வேண்டும், திறப்பு விழாவை நடத்தி வைக்க டி. ஆர். ராஜகுமாரி சம்மதிப்பாரா?

இந்த மாதிரிப் பொறுப்புகளை யெல்லாம் ராஜகுமாரி ஏற்றுக் கொள்ளும் வழக்கமில்லை.

"கண்ணன் வரக் காணேனே" என்று கலங்கியிருக்கிறாப்போல் காண்கிறாள் பாமா. லாவண்யாவின் "பாரிஜாத"த்தில் பாமாவாக நடிக்கிறார் பி. எஸ். சரோஜா.

ஆர். பண்டரிநாதன் (கும்பகோணம்)

சில மாதங்களாக "குண்டூசி"யில் பட விமர்சனங்கள் வெளிவராத தேன்? வாழ்க்கை படத்தைப் பற்றி விமர்சனம் எழுதுவீர்களா?

தற்போது தமிழ்ப்படங்களின்தயாரிப்பு மிகக் குறைந்து போயிருக்கிறது. வெளிவரும் சொற்பப் படங்களோ தாமாகவே மண்ணைக் கவ்வுகின்றன. இந்த நிலைமையில் நாம் எதற்காக "செத்த பாம்பை அடிக்கும் கைங்கரிய"த்தைச் செய்ய வேண்டும் என்று தான் எழுதவில்லை. ஆனால், "வாழ்க்கை" ஒரு நல்ல பொழுது போக்குப் படம் என்பது, இனி நான் விமர்சனம் எழுதித் தெரிய வேண்டிய விஷயம் அல்ல.

சங்கரன் (தேனி)

யூ. ஆர். ஜீவரத்தினம் தற்போது ஏன் படங்களில் நடிப்பதில்லை? அவருக்கு எத்தனை குழந்தைகள்? விலாஸம் தெரிவிக்கவும்.

விவாஹத்திற்குப் பிறகு ஜீவரத்தினம் அதிகமாகப் படங்களில்நடிக்காததால் அவர் குடும்ப வாழ்க்கையில் லயித்து விட்டார் என்றே எண்ண வேண்டியிருக்கிறது. அவருக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது. விலாஸம்:—"ஜீவ நிலயம்", ஊஞ்சலூர், ஈரோடு மார்க்கம்.

கே. சிந்து (திருச்சி)

நான் வைஜயந்திமாலாவைக் காதலிக்கிறன்.

"பகற் கனவு பலிக்காது" என்று பஞ்சாங்கத்தில் போட்டிருப்பதைக் கவனியும்!

போ. அருச்சுன பாண்டியன் (கீழக்கடுக்காய்வலசை)

அபூர்வ சகோதரர்கள் படத்தில் அண்ணனுடைய உணர்ச்சி மட்டும் தம்பியை பாதிக்கிறது. எனவே. அண்ணன் விஜயன் சவுக்கடி பட்டு மயக்கமான பின்பு, தம்பி விக்ரமன் வீராவேசத்துடன் போர் தொடுக்க வருகிறன். அண்ணனுக்கு மயக்கம் ஏற்பட்டபோது தம்பியும் மயக்கமுறுவது தானே சரி?

விக்கிரமன் போருக்குக் கிளம்பிய சமயம் அண்ணனுக்கு மயக்கம் தெளிந்து விட்டதென்றே நாம் கொள்ளவேண்டியிருக்கிறது.

எஸ். என். ராமன் (சேலம்)

பி. எஸ். கோவிந்தன் தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறர்?

இந்தப் 'புளியமா நகர் புலிக்குட்டி' திடீரென்று சினிமா உலகில் பிரவேசித்து இரண்டு மூன்று படங்களில் நடித்துவிட்டு, மீண்டும் மதுரைக்குச் சென்று பதுங்கி யிருந்தது. 'புலி பதுங்குவது பாய்வதற்குத் தான்' என்பதை நிரூபிக்கும் முறையில் தற்போது ஏவி. எம். 'ஓர் இரவி'லும், 'சகோதரி' என்ற மற்றொரு படத்திலும் நடித்து வருகிறது.

கேள்வி நேயர்களுக்கு

இந்த ஊசியில் வெளிவந்துள்ள கேள்விகள் எல்லாம் காந்திஜி நிதிக்கு காணிக்கை அளித்தவர்களின் கேள்விகளாகும். இதுவரை பதில் கிடைக்கப்பெருத வாசகர்கள், தாம் அனுப்பியுள்ள தொகைக்கு வேறு புதுக் கேள்விகளை அனுப்பிவைக்கும்படி கோரப்படுகிறர்கள்.

ஆசிரியர்.

---

*இந்திய செய்திப் படங்கள்

இந்திய செய்திப்படங்கள் என்று காண்பிக்கப் படுவது அநேகமாக வட இந்தியாவில் நடக்கும் நிகழ்ச்சிகளாகவே இருக்கின்றன. தமிழ் நாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகள் ஒன்றும் காண்பிக்கப்படுவதில்லை. இதற்குக் காரணம் என்ன என்பது விளங்கவில்லை. தமிழ் நாட்டில் அப்படி முக்கியமான நிகழ்ச்சிகள் நடப்பதில்லை என்று சொல்லிவிட முடியாது. எத்தனையோ மஹாநாடுகள் நடக்கின்றன. பெரிய தலைவர்களெல்லாம் வருகிறார்கள். அஸ்திவாரக் கல் நாட்டு விழா என்றும், தொழிற்சாலைகள் திறப்பு விழா என்றும் எவ்வளவோ நிகழ்ச்சிகள் நடக்கின்றன. இவைகளை யெல்லாம் ஏன் படம் பிடித்துக் காட்டக்கூடாது? வட இந்தியாவில் நடப்பவைகளை தென் இந்தியாவில் காட்டும் போது, இங்கு நடப்பவைகளை மட்டும் ஏன் வட இந்தியாவில் காட்டக் கூடாது?

தமிழ் நாட்டில் பெரிய நகரங்கள் தவிர மற்ற சிறிய ஊர்களிலும், கிராமங்களிலும் ஹிந்தி பாஷை வியாக்யானங்களுடன் செய்திப் படங்களைக் காட்டுகிறார்கள். தமிழில் காட்டினால் ஜனங்களுக்குப் புரியும். இல்லையெனில் மௌனப் படம் பார்த்த மாதிரித்தான் இருக்கும்.

சமீபத்தில் 'சமூக சங்கீதம்' என்னும் செய்திப் படம் ஒன்றைப் பார்த்தேன். அதில் வட இந்திய சங்கீதமும் வட இந்திய வித்வான்கள் பாடும் பல வகையான சங்கீதமும் காட்டப்பட்டது. தமிழ் நாட்டு சங்கீதம் ஒன்றும் காட்டப்படவில்லை. தமிழ்நாட்டின் கர்நாடக சங்கீதம், சமூக சங்கீதம்' இல்லையா ? இந்த பாரபட்சம் ஏன்? இவைகளை யெல்லாம் செய்திப்பட இலாகாவினர் கவனித்து வேண்டியதைச் செய்வார்களா ?

டி. ஆர். சத்தியமூர்த்தி
மதுரை.

சர்க்காருக்கு எதிர்ப் பிரசாரமா?

நமது சர்க்கார் மக்களுக்கு நல்லறிவூட்டும் படங்களைத் தயாரிக்க வேண்டும் என்று ஆவல் கொண்டிருக்க, மக்களைக் கெடுக்கக்கூடிய சில துண்டுப் படங்களும் வெளிவருகின்றன. லாகிரி வஸ்துக்களைத் தடை செய்வதற்காக சர்க்கார் தற்பொழுது சிறந்த முயற்சி எடுத்து வருகின்றனர். கொட்டகைகளில் பீடி, சிகரெட்டுக்களை உபயோகிக்கக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர். அதற்கு மாறாக ஒரு சில பீடிக் கம்பெனிகளும், தியேட்டர் முதலாளிகளும் வேலை செய்து வருகின்றனர். எங்கள் நகரில் உள்ள ஒரு கொட்டகையில், பீடியைப் பற்றிய விளம்பர துண்டுப் படம் ஒன்றைக் காட்டிக்கொண்டு வருகின்றனர். அது சுமார் 1000 அடிகள் கொண்டது. அதில் ஒரு சிப்பந்தி தான் பீடி குடிப்பதன் மூலம் நன்றாக வேலை செய்ய முடிகிறது என்றும், கம்பெனி மானேஜர் அந்த பீடிகுடிக்க ஆரம்பித்ததும் பாடவும் தொடங்கிவிடுகிறார் என்றும் காட்டப்படுகிறது. இந்த விளம்பரப் படத்தைப் பார்த்த நமது ரஸிகர்கள், பீடியைத் தடையின்றிக் குடிக்கலாம் என நினைத்து பீடியைக் குடிக்க ஆரம்பித்து விடுகின்றனர். இதைக் கண்ட தியேட்டர் சிப்பந்திகள் ரஸிகர்களைக் கண்டிக்க முற்படுகின்றனர்.

''பீடி, சிகரெட், சுருட்டு முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகிக்கக் கூடாது; இது சர்க்கார் உத்தரவு'' என்று முதலில் காண்பிக்கப்பட்ட அதே வெள்ளித் திரையில் இப்பேற்பட்ட விளம்பரப் படங்களைக் காண்பிப்பது பொதுஜன நலத்திற்கு உகந்ததல்ல. இதை சென்ஸார் போர்டார் அனுமதித்திருக்கக் கூடாது. இனிமேலாவது இப்பேற்பட்ட துண்டுப் படங்களைத் தயாரிப்பதற்கு நம் சர்க்கார் அனுமதிக்காது என்றும், மேற்குறித்த படங்கள் திரையிடப்படுவதை உடனே நிறுத்த நடவடிக்கை எடுக்குமென்றும் நம்புகிறேன்.

பி. ஆர். சுந்தர ராவ்
மதுரை.

மானமற்ற செய்கை

அன்று நான் ''..........'' என்ற படத்தைப் பார்க்கப் போயிருந்தேன். அதில்

கதாநாயகி மார்பு நன்ருகத் தெரியும்படி ஒருரவிக்கையுடனும் உடம்பு முழுவதும் தெரியும்படியான மிகமிக மெல்லிய மஸ்லின் துணியாலான ஒரு கருப்புப் பாவாடையுடனும் காட்சி அளித்தார். சாதாரணமாகவே அந்த நடிகையின் அங்கமெல்லாம் தெரிகிறது. அதோடு நாட்டியம் வேறு சேர்ந்து கொண்டால் கேட்பானேன் !

அவர் ஒரு தடவை ஆடி ஒரு சுற்றுச் சுற்றினுல் அவருடைய கீழாடை மூன்று தடவை சுற்றி நான்கு தடவைகள் மார்புக்கு மேலே போய் கீழே விழுகிறது. அவர் உடை உடுத்திக் கொண்டிருந்தார் என்பதை விட "நிர்வாணமாக" ஆடினுர் என்று சொல்வதே மிகவும் பொருத்தமுடையதாகும். வெட்கம்! வெட்கம்!! இரத்த புஷ்டியுள்ள முறுக்கேறிய ஒரு சில வாலிபர்களைத் தவிர, அன்று மனிதத் தன்மை படைத்த அத்தனை பேரும் வெட்கித் தலை குனிந்தனர்!

இந்த நிலைமை மாற்றப்பட வேண்டியது மிகவும் அவசியமும் அவசரமும் ஆகும். உயிரினும் மானமே பெரிதென மதிப்பவர்கள் இந்தியப் பெண்மணிகள். ஆனுல் இன்றைய நிலைமை ..! நடிகைகள் இவ்வாறு மானத்தை விலைக்கு விற்கும் நிலைமையை நீடிக்க விடக்கூடாது.

மக்கள் மனதில் ஒழுக்கம், நீதி இவற்றைப் புகட்டாது, பணம் ஒன்றையே குறியாகக் கொண்டு படம் தயாரிக்கும் ஒரு சிலர் உடனடியாக தண்டிக்கப்பட வேண்டும். தணிக்கை போர்டு உறுப்பினர்கள், உடைகள் விஷயத்தில் மிகவும் கண்டிப்பான முறையில் நடந்துகொள்ளவேண்டும்.

சா. சுப்பிரமணியன்
கலியாண ஓடை.

சொல்லும் செயலும்

"அபாசமான படம், ஆடை அலங்காரம் படுமோசம்" என்று சொல்லும் சில நேயர்கள், அவர்களே பல முறை அதே படத்தையே தவருமல் பார்க்கிருர்கள். இதே போல் நம் நேயர்கள் தவறுதலை உணராமல் இருந்தால் ஆபாசக் காட்சிகளும், பார்க்க சகிக்காத காதல் கட்டங்களும் சினிமா உலகிலிருந்து ஒருபோதும் நீங்காது.

சில நேயர்கள் இதுபோன்ற படங்களுக்கு ஆதாவு கொடுப்பதால்,படத் தயாரிப்பாளர்கள் பெட்டியில் பணம் நிறைந்தால் போதும் என்ற எண்ணத்துடன் காம வெறியைக் கிளப்பும் காட்சிகளுடன் தங்கள் படங்களைத் தெளிவாகத் தயாரித்து வெளியிடுகிருர்கள்.

நேயர்களே ! இனியாவது ஆபாசப் படங்களை பகிஷ்கரித்து, சினிமாப் படங்கள் சீர்திருந்த உதவுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

எம். கோவிந்தசாமி
சிங்கப்பூர்.

தியேட்டரில் தேள் !

எங்களூரில் இருப்பதென்னவோ ஒரே ஒரு தியேட்டர்தான். அதுவும் பல வருஷங்களாக இல்லாமல் இப்பொழுது தான் இயங்க ஆரம்பித்திருக்கிறது.

எங்களூர் தியேட்டரில் படம் பார்க்கப் போனுல், அதைத்தான் பார்க்க முடியாது. மூட்டைப் பூச்சியை நசுக்கும் வேலைக்குத் தான் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

இதுவரை அகில இந்தியாவின் எந்தத் தியேட்டரிலும் நடவாத, ஆச்சரியமும், அதிசயமுமான சம்பவம் ஒன்று எங்கள் ஊர் தியேட்டரில் நடந்திருக்கிறது. படம் பார்க்கப் போன ஒருவரை ஒரு பெரிய தேள், தன் விஷக் கொடுக்கால் பதம் பார்த்துவிட்டதுதான் அந்த அதிசயமும் ஆச்சரியமுமான—ஆனுல், உண்மையான சம்பவமாகும்.

இவற்றை யெல்லாம் தியேட்டர் நிர்வாகிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தும், ஊதிய சங்கைக் கேட்டும் பேசாமல் இருக்கும் செவிடனைப் போல், மௌனமாய் இருப்பதன் அர்த்தம்என்ன வென்றுதான் தெரியவில்லை. இதைத் தியேட்டர் நிர்வாகிகள் கவனித்து ஆவன செய்யுமாறுவேண்டுகிறேன்.

இராமலிங்கம்
திருத்துறைப்பூண்டி.

கிராமத்தானும் பேசும் படமும்

நான் மேலே குறிப்பிட்ட தலைப்பு உங்களுக்கு மலைப்பைத் தரலாம். கிராமத்தார்கள் பேசும் பட உலகுடன் சுமார் இரண்டு மூன்று வருஷகாலமாகத்தான் சிநேக பாவம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிருர்கள். அடேயப்பா! அவர்கள் படங்களில் காணப்படும் குறைபாடுகளை ஒரு சிறந்த விமர்சகரைப் போல் எடுத்துக் கூறுவதைக் கேட்டால் பட்டணவாசியாகிய நமக்கும் அவமானமாகத் தான் இருக்கிறது. "நாம் தான் படித்தவர்கள்; நாம்தான் பட்டணவாசத்

சந்தாப் பரிசு பெற்ற கடிதம்

எழுதியவர் :
டி. ஆர். சத்தியமூர்த்தி,
c/o ஒய். எம். ஐ. ஏ.
தெற்கு மாசி வீதி, மதுரை

தில் மூழ்கினவர்கள், நமக்குத்தான் சினிமா அனுபவம் உண்டு'' என்ற பெருமைகளை முற்றிலும் மறந்து விடவேண்டும். ஏனென்றால், உண்மையில் நம்மைக் காட்டிலும் படத்தை நன்கு ரஸிக்கக் கூடியவர்கள் கிராமத்தார்கள்தான்.

நான் ஒரு தமிழ்ப் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்த போது ஒரு கிராமவாசி என்னைப் பார்த்து, 'ஏனய்யா! கோரஸ் பாட்டை இவ்வளவு சத்தமாகவா எடுக்கிறது? பாட்டினுடைய வார்த்தைகளை கேட்கவில்லையே? தொனி இன்னும் குறைவாக இருக்க வேண்டும். அதுவுமல்லாமல் தமிழ் தெரியாத மலையாளப் பெண்ணையும், ஹிந்துஸ்தானி, கன்னட, தெலுங்குப் பெண்களையும் படத்தில் புகுத்தி இவர்களை யார் படத்தை மோசமாக்கச் சொன்னது? படத்தில் அனுவசியமாக அதிக வெளிச்சம் கொடுப்பதினால் கண் எரிகிறது. படம் சுத்தமாகத் தெரியவில்லை. பாட்டுக்களோ அதிகம்'' என்று கூறினர் ஒரு பெரியவர். இதைக் கேட்கும் யாருக்குத் தான் ஆச்சரியம் ஏற்படாது.

எனவே, ''சாதாரண ஜனங்களுக்கு இது போதும்'' என்ற கொள்கையுடன் இனிப் படம் தயாரிக்கப் பட்டால் தோல்வியே அடையும். கிராமத்தார்களின் தயவினாலேதான் பட முதலாளி போட்ட பணத்தை எடுக்கவேண்டி யிருக்கிறது. ஆகையால் இனி நல்ல படங்களைத் தயாரிக்கும்படி கிராமத்தார்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சு. சேதுராமன்
சின்னமனூர்.

தமிழ் நடிகர்கள் தேவை

தற்பொழுது பத்திரிகைகளில் வரும் பட விளம்பரங்களைப் பார்த்தால், 'தமிழ்ப் படங்களில் நடிக்க தமிழ் நாட்டில் நடிகைகளே இல்லாமல் போய் விட்டார்களோ?' என்றே எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில், நமது படங்கள் ஒரே ஆந்திர நடிகைகள் மயமாய் இருக்கிறது. பிற மாஹாணவாசி ஒருவர் தமிழ்ப் பட விளம்பரங்களில் திரும்பத் திரும்ப பானுமதிகளையும், அஞ்சலி தேவிகளையும் பார்க்க நேரிட்டால் என்ன நினைப்பர்? தமிழ் நாட்டவரின் நடிப்புந் திறமையைப் பற்றி மிகவும் மட்டமாகத்தானே நினைப்பார். இது ஒவ்வொரு தமிழனும் வெட்கப்பட வேண்டிய விஷயமாகும்.

நான் குறுகிய மனப்பான்மையுடன், மொழிப்பற்று காரணமாக, ஆந்திர நடிகர்களைப் பற்றி வெறுப்புக் கொண்டுள்ளேன் என்று நீங்கள் நினைக்கலாம். அது தவறு. தமிழர்களின் கலாரஸனை மிகவும் உயர்ந்தது. எங்கு கலையழகு மிளிர்கிறதோ அதை அனுபவிப்பதில் தமிழன் தான் சிறந்தவன். இவைகளுக்கு நமது படங்களே சிறந்த சான்றாகும்.

இவ்வாறு பிறருடைய மேதையை அனுபவிப்பதற்கும் ஓர் அளவு வேண்டும். அது விஷயத்தில் நமது படமுதலாளிகள் சிறந்த சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் பிற மொழி பேசும் ஒரு நடிகருக்கு நமது தமிழைக் கற்றுக் கொடுக்க எடுத்துக் கொள்ளும் முயற்சியில் ஒரு சிறிதளவை தமிழ் நடிகர்களுக்கு நடிப்புப் பயிற்சி அளிப்பதற்கு எடுத்துக் கொண்டார்களானால் தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான சிறந்த நடிகர்களை உற்பத்தி செய்துவிடலாம்.

தமிழ்ப்பட முதலாளிகளின் போக்கு ஒரே ஆட்டு மந்தையின் போக்காக இருக்கிறது. பிற பாஷை நடிகர்களைத் தங்கள் படங்களில் நடிக்கச் செய்வதில் மாத்திரம் பெரிய பட முதலாளிகளும் சிறிய படமுதலாளிகளும் ஒற்றுமையாய் இருக்கிறார்கள்.

ஒவ்வொரு ஊரிலும் உள்ள தமிழ்ப்பட ரஸிகர்கள்ஒன்றுகூடி, 'நமது படங்களில் தமிழ் நடிகர்களையே நடிக்கச் செய்ய வேண்டும்'என தீர்மானம் நிறைவேற்றி, எல்லா தமிழ்ப்பட முதலாளிகளுக்கும் அனுப்பிவைக்க வேண்டும். வெறும் தீர்மானம் அனுப்புவதுடன் நில்லாமல், அதை நடைமுறையில் கொண்டுவர முயற்சியும் எடுத்துக்கொள்ளவேண்டும். இம் முயற்சியில் தமிழ் சினிமாப் பத்திரிகைகளும் 'குண்டூசி'யைப் பின்பற்றி,தீவிரப் பங்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

டி. ஆர். ராமு
ஊத்தக்குழி.

தடை அவசியமே

நான் பாக்யாபிக்சர்ஸாரின்'மங்கையர்க்கரசி'படத்தைப் பார்த்தேன். அதைப் புராணப் படமென்று தயாரித்து இருக்கிறார்கள். அதில் தேவலோகத்திலுள்ள பெண்கள் யாவரும் சிற்றின்ப ஆசையால் காம வெறி பிடித்து அலைகிறார்கள் என்பது போல் சித்தரிக்கப் பட்டிருப்பது வருந்தத் தக்க விஷயம். இதிலிருந்து 'தேவலோகத்திலுள்ள பெண்கள் அனைவரும் காமவெறி பிடித்தவர்கள், இப்பெண்களுடன் சரசமாடவே பூலோகவாசிகள் பல நோன்புகள் இயற்றி அங்கு போக விரும்புகிறார்கள்' என்று எண்ணும்படி இருக்கிறது படம். இம்மாதிரியாக, புராணப் படங்கள் என்று சொல்லி புராணங்களையே அவமதிக்கும் படங்களை நிச்சயம் தடை செய்தே தீரவேண்டும். இதை சர்க்கார் கவனிக்குமா?

எம். முத்துராமலிங்கம்
ராமநாதபுரம்.

புஸ்தகப் பொழுது

உயிரோவியம்

[ஆசிரியர்: "ஜீவா", (நாரண-துரைக் கண்ணன்) வெளியிட்டோர். ஜீவோதயம் பிரசுரம், சௌராஷ்டிர நகர், சென்னை 24. விலை ரூபாய் இரண்டு.]

உயிரோவியம் முன்பு நாவல் உருவத்தில் வெளிவந்திருக்கிறது. அதையே ஆசிரியர் நாடகமாக ஆக்கியிருக்கிறார். இந்த நாவல் நாடகமாக ஆக்கப்பட்டது நடிப்பதற்காக இருந்தபோதிலும் படிப்பதற்கும் தகுதி வாய்ந்ததே. நாடகத்தில் உள்ள பாடல்களும் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன. உயிரோவியம் நாடகம் டி. கே. எஸ். சகோதரர்களால் சென்னை மாகாணத்தில் பல இடங்களில் நடிக்கப்பட்டு, புகழ் பெற்றிருப்பதால் இப் புத்தகத்திற்கு ரஸிகர்களிடம் நல்ல வரவேற்பு இருக்கும் என்று நிச்சயமாகக் கூறலாம்.

நினைவு

[ஆசிரியர்: நாகர்கோவில் கே. மஹாதேவன். வெளியிட்டோர், 'பேசும்படம்' காரியாலயம், 188. ராயப்பேட்டை ஹைரோட், சென்னை 14. விலை ரூபாய் இரண்டு.]

நாகர்கோவில் மஹாதேவனை சினிமா ரஸிகர்கள் அறிவர். அவருடைய கதைகளையும் படித்திருப்பர். ஹாஸ்யம் நிறம்பிய அவருடைய கதைகள் இப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கின்றன. இப் புத்தகத்தில வெளிவந்துள்ள கதைகளில் சில முன்பே 'குண்டூசி'யில் வெளிவந்திருப்பதால் மேலும் அவைகளைப் பற்றிக் கூற நாம் விரும்பவில்லை. நினைவு ரஸிகர்களின் நினைவிலேயே இல்லாமல் கையிலும் பரிமளிக்க வேண்டும்.

அரும்பும் மலரும்

[ஆசிரியர்: பி. வி. சுப்ரமண்யம், விலை ரூ 1. கிடைக்குமிடம்: பி. வி. சுப்ரமண்யம், 3, பெருமாள் கோவில் தெரு, எழும்பூர், சென்னை 8.]

சிறுகதைத் தொகுதிகளைப் படிப்பவர்களில் பலர் ஒரேயடியாகப் புஸ்தகம் முழுவதையும் படித்துவிடுவதில்லை. ஒன்றிரண்டு கதைகளைப் படித்துவிட்டு, பிறகு அவகாசம் நேரும்போதெல்லாம் மற்ற கதைகளைப் படிப்பது வழக்கம். ஆனால் 'அரும்பும் மலரும்' கதைத் தொகுதியைப் படிக்க முனைகிறவர்கள் விஷயமே வேறாகத்தான் இருக்கும். சுவாரஸ்யமான நாவல் ஒன்றை வாசிக்க ஆரம்பித்தால் படித்து முடித்ததும் தான் புத்தகத்தைக் கீழே வைக்கத் தோன்றும். அது மாதிரித்தான் இந்த சிறுகதைத் தொகுதி விஷயத்திலும் செய்யவேண்டி யிருக்கும்.

இந்தத் தொகுதியிலுள்ள பதிமூன்று கதைகளும் ஒன்றோடு ஒன்று ஏற்றத் தாழ்வின்றி சிறப்பாக இருக்கின்றன. ஒவ்வொரு கதையையும் படிக்கும்போது நம் வாழ்வில் அன்றாடம் நாம் காணும் பல பிரச்னைகளைக் காண்கிறோம்.

புஸ்தகத்தின் முன்னுரையில் ஸ்ரீ ந. பிச்சமூர்த்தி, "ஆசிரியர்வெறும் பொழுது போக்குக்காகவென்று எழுதக்காணோம். நமது வாழ்வுக்கு இக் கதைகள் எச்சரிக்கையாக அமைந்திருக்கின்றன" என்று குறிப்பிட்டிருக்கிறார். புஸ்தகத்தைப் படித்ததும் அது எவ்வளவு தூரம் உண்மை என்பது புலனாகிறது. ஒவ்வொருவரும் அவசியம் படிக்கவேண்டிய புஸ்தகம்தான் இது.

பார்வதி

[ஆசிரியர்: வி. நமசிவாயம்; விலை: 8 அணா: கிடைக்குமிடம்: பாரத் ஸ்டுடியோ: சென்னை—2]

உண்மைப் புகைப் படங்களுடன் வெளியிடப்படும் பத்திரிகைகளின் ஜாப்தாவில் இதுவும் ஒன்று. ஆனால் அந்த ஜாப்தாவைச் சேர்ந்த மற்ற பத்திரிகைகளில் வெளிவருவதுபோன்ற காமக்கதைகள் இதில் கிடையாது என்பது குறிப்பிடத்தக்க அம்சம். விளம்பரத் துறையில் நல்ல அனுபவம் உடைய ஸ்ரீ. வி. நமசிவாயத்தின் முயற்சியில் வெளி வருகிறது. இதுவரை வெளிவந்துள்ள நான்கு இதழ்களும் நன்றாகவே இருக்கின்றன. சிறு கதைகளுடன், சினிமா விமர்சனங்களுடனும், போட்டிப் பந்தயத்துடனும் வெளிவருகிறது இநத மாதப் பத்திரிகை.

நக்ஷத்திர உலகம் (மலர்)

[ஆசிரியர்: சுந்தரம், விலை: ரூ. 1, கிடைகுமிடம்: நக்ஷத்திர உலகம், 64, கச்சேரி ரோடு, சென்னை. 4]

இப் புத்தகத்தில் சில நடிக, நடிகைகள். சில டைரெக்டர்கள் இவர்களைப் பற்றிய குறிப்புகள் அடங்கியுள்ளன. அத்துடன் சினிமாவில் நடிக்க ஆசையுள்ள பலரது படங்களும் அவர்களது விலாஸமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. விலை அதிகம் என்றே கூறவேண்டும்.

கலை வளர்ந்த கதை

[ஆசிரியர்: சக்திதாஸன் சுப்ரமணியன்: விலை: 4 அணு; இடைக்குமிடம்: வெங்கட்ரமண அண்டு கம்பெனி, சென்னை. 5.]

கலை என்றால் என்ன, கலையின் ஆரம்பம்: அது படிப்படியாக வளர்ந்த கதை; அது இன்றைய வாழ்க்கையின் இன்றியமையாத தேவையாகி முடிந்திருக்கும் விஷயம் இவைகளையெல்லாம் புரியும்படி எளிய நடையில் ரஸமாக எழுதியிருக்கிறார் ஆசிரியர். கலைதற்காலம்துர்ப்பிரயோகம் செய்யப்படுகிறது என்றும், அது பாமர மக்கள் வளம்பெறத் தக்கதாக இருத்தல் வேண்டும் என்ற அபிப்பிராயத்துடனும், ஆங்காங்கே கார்ல் மார்க்ஸ் போன்ற பிரபல ஆசிரியர்களின் புஸ்தகங்களிலிருந்தெல்லாம் மேற்கோள்கள் எடுத்துக் காட்டியிருப்பதுகுறிப்பிடத் தக்கது. கலைத் துறையில் சம்பந்தப்பட்ட அனைவரும் படிக்கவேண்டிய ஒரு நல்ல புஸ்தகம் இது.

நட்சத்திர மலர்

[ஆசிரியர்: "பாலாஜி", விலை: 8 அணு; இடைக்குமிடம்: எம். சூரி, குப்பையர் தெரு, சென்னை—1.]

மூன்று நக்ஷத்திரங்களின் இரு வர்ணப் படங்கள் அட்டையை அலங்கரிக்க வெளிவந்திருக்கும் இப்புத்தகத்தில் இருபது நடிக, நடிகைகளின் வாழ்க்கைக் குறிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது. இம்மாதிரிப் புத்தகங்களுக்கெல்லாம் 'பிரின்டிங்' கவர்ச்சிகரமாக இருந்தால் சிறப்பாக இருக்கும். அந்த விஷயத்தில் இப்புத்தகம் அதிருப்தியையே அளிக்கிறது. மற்றபடி குறிப்புகளை சுருக்கமாகவும் ரஸமாகவும் கொடுத்திருக்கிறார் ஆசிரியர்.

அழகாம்பிகை

[ஆசிரியர்: "ஜீவா". (நாரண-துரைக்கண்ணன்). வெளியிட்டோர்: ஜீவோதயம் பிரசுரம், சௌராஷ்டிர நகர், சென்னை 24. விலை ரூபாய் ஒன்னேகால்.]

அழகாம்பிகை 'ஜீவா'வின் சிறுகதைத் தொகுதி. 'ஜீவா' சிறந்த எழுத்தாளர் என்பது எல்லோரும் அறிந்ததே. அத்துடன் அவர் ஒரு முற்போக்கு மனப்பான்மை கொண்டவர் என்பதும் அனைவருக்கும் தெரியும். அவர் மனப்போக்கின்படியே இந்தொகுதியின் கதைகள் அமைந்திருக்கின்றன. ஆனால் இதில் உள்ள சில கதைகளை சிறுகதை யென்றோ, கதையென்றோ சொல்ல முடியாது. 'ஜீவா'வின் மனதில் எழுந்த போராட்டங்களையே அவைகள் சித்தரிக்கின்றன.

மகான் காந்தி

[ஆசிரியர்கள்: மணி, சாம்ராஜ். இடைக்குமிடம்: புதுமுறை வெளியீடு, சென்னை-17]

காந்திஜியின் வாழ்க்கைச் சரிதம் மிக எளிய நடையில் சுருக்கமாக இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. அவரது வாழ்வில் நடந்த ஒரு சில முக்கிய சம்பவங்கள், அவர் நடத்திய போராட்டங்கள் இப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. புத்தகத்தின் கடைசியில் உலகப் பிரமுகர்கள் காந்திஜியைப் புகழ்ந்து கூறியுள்ள ஒரு சில மொழிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. கவர்ச்சிகரமான அட்டைப் படத்துடன் உள்ள ஒரு சில புகைப்படங்களுடனும் கூடியுள்ள இப் புத்தகத்தின் விலை ரூ. 1-0-0

முத்துக்குவியல்

[தொகுத்தவர்கள்: மணி, சாம்ராஜ். இடைக்குமிடம்: புது முறை வெளியீடு, மாம்பலம், சென்னை-17]

பல பெரியோரின் முத்துப் போன்ற கருத்துக்களை புத்தக ரூபம் கொடுத்து வெளிவிட்டுள்ளனர் புதுமுறை வெளியீட்டகத்தார். காந்திஜி, ஸ்ரீ ராமகிருஷ்ணர், விவேகானந்தர், ஹக்ஸ்லி, ஹோமர் போன்றவர்களின் வாக்குகள் இதில் இடம் பெற்றுள்ளன. இப்பொன் மொழிகளைத் திரட்ட ஆசிரியர்கள் மிகவும் சிரமம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தனித் தனியாகப் பற்பல புத்தகங்களில்புதைந்துள்ளஉயரிய கருத்துகளைத் திரட்டுவது என்பது சாமான்யமான காரியமல்ல. ஆகவே இவ்வகையான ஒரு புத்தகத்தை வெளியிட்டு அரும் பணி செய்துள்ள ஆசிரியர்களுக்கு வாசகர்கள் பெரிதும் கடமைப்பட்டுள்ளனர். புத்தகத்தின் விலை பனிரெண்டணு.

சுடாத நெருப்பு

[எழுதியவர்: கு. திரவியம் (ரவி); இடைக்குமிடம்: தமிழ்ப்பொழில் நூல் வெளியீட்டகம், 31, சிம்மக்கல் தெரு, மதுரை]

அவ்வப்போது பல பத்திரிகைகளில் வெளியிட்ட தனது கவிதைகளைத் தொகுத்துப் புத்தக வடிவில் கொண்டுவந்துள்ளார் ஆசிரியர். பற்பல கோணங்களில் காணக்கூடிய காட்சிகளையும், பலவிதச் சிந்தனைகளையும் எழுத்துகளின் வடிவில் வாசகர்கள் காண்கிறார்கள்

இப்புத்தகத்தில்.] இது ஆசிரியர் குறிப்பிட்டுள்ளது போலவே அவரது முதல் முயற்சி. வசனக் கவிதையில் பலர் தங்களது ஆற்றலைக் காட்ட இந்நாட்களில் முயன்று வருவதைக் காண்கிறோம். நண்பர் 'ரவி'யும் வசனக் கவிதை யுலகில் அடி எடுத்து வைத்திருக்கிறார். கவிதைகளின் நயம், போக்கு, கவர்ச்சி முதலியன ஆங்காங்கு இத் தொகுப்பில் காணப்படுகின்றன. கவியின் மனம் ஒரு நிலையில் நின்று ஒரு குறிப்பிட்ட நோக்கத்தைக் கவிதையில் பிரதிபலிக்க வேண்டுமென்னும் கருத்தை ஏனே நம்மால் இத் தொகுதியில் காண முடியவில்லை. வார்த்தைகளை அமைப்பதுடன் தெள்ளிய கருத்துக்களை மனதில் பதிய வைக்கத்தக்க முறையில் இப் புத்தகத்தில் வந்துள்ள கவிதைகளை விரலவிட்டு எண்ணிவிடலாம். சீரிய முறையில் அச்சிட்டு வெளியிட்டுள்ள இப்புத்தகத்தின் விலை ரூ. 1–4–0 தான். ஆசிரியரின் உற்சாகத்தைப் பாராட்டுவதுடன் மேலும் மேலும் வசனக் கவிதைகளை அளிக்கத் தமிழன்பர்கள் அவருக்குத் தக்க ஆதரவை அளிப்பார்களென்று நம்புகிறோம்.

ஆனந்தோதயம்

பி. எம். கண்ணன் அவர்களை ஆசிரியராகக் கொண்ட இந்த மாதப் பத்திரிகைக்கு விலை கிடையாது. பி. அண்டு ஸி. மில் சொந்தக்காரர்களால் தொழிலாளிகளுக்காக நடத்தப்படுகிறது இப் பத்திரிகை. அழகான அட்டைப் படத்துடன் வெளிவரும் இப்பத்திரிகையில் சிறுகதை, சிறுவர் கதை தொடர் நாவல் எல்லாம் இருக்கின்றன.

சஞ்சீவி

[நிர்வாகி ஆசிரியர்: சந்தானம்; விலை 6 அணா; கிடைக்குமிடம்: 4, பிராடீஸ் ரோடு, சென்னை. 4.]

உண்மைக் கதைகளுக்கு நிஜப் புகைப் படங்களுடன் வெளி வரும் மற்றுமொரு மாதப் பத்திரிகை; சினிமாச் செய்திகளும் அடங்கியிருக்கின்றன.

ஊர் நலம்

[ஆசிரியர்: ரா. ஸ்ரீ. ஸ்ரீகண்டன்; விலை: தனிப் பிரதி 1 அணா: கிடைக்குமிடம்: 91, மவுண்ட்ரோடு, சென்னை. 18]

இந்த மாதம் இருமுறைப் பத்திரிகை, இலக்கியம், அரசியல் சம்பந்தமான கட்டுரைகளுடன் சிறு கதைகளையும் தாங்கி வெளி வருகிறது.

ஸி ஐ டி

ஆர். எம். என். கே. சுந்தரத்தை ஆசிரியராகக் கொண்டு திருச்சியிலிருந்து வெளிவரும் வார இதழ். கவிதையாக வெளியிடப்பட்டுள்ள தலையங்கத்தில்

ருந்து பத்திரிகையின் நோக்கம் தேசிய, சமூக சீர்திருத்தமாக இருக்குமென்று தெரிகிறது.

நெசவாளி

[ஆசிரியர்: எம். கே. கோமால்: விலை 1 அணா; கிடைக்குமிடம்: தேவாங்கபேட்டை, கோயமுத்தூர்]

பெயரிலிருந்தே இது நெசவாளிகளின் நலன்களுக்கான பத்திரிகை என்பது தொனிக்கிறது. உள்ளே இருக்கும் விஷயங்கள் அதை நிச்சயப்படுத்துகின்றன. முதல் இதழில் வெளியிடப்பட்டுள்ள 'நக்கீரதாசனி'ன் 'குறை களைவோம்' என்ற கவிதை மிகவும் உருக்கமாக இருக்கிறது.

கிராம சுய ஆட்சி

க. அய்யாறு நாயக்கரை ஆசிரியராகக் கொண்ட, இந்த மாதம் இருமுறைப் பத்திரிகை கிராம முன்னேற்றத்திற்காகப் பாடுபடுமாம். இரண்டணா விலையுள்ள இப்பத்திரிகை அய்யம்பேட்டையிலிருந்து வெளி வருகிறது.

சினிமா துப்பு

சினிமாவுக்கான புது மாதப் பத்திரிகை. இரண்டணா விலையுள்ள இப்பத்திரிகையில் கேள்வி பதில், விமர்சனம், செய்திகள் எல்லாம் அடங்கியுள்ளன. சென்னை, மைலாப்பூரிலிருந்து வெளி வருகிறது.

தமிழ் சினிமா

[ஆசிரியர்: எம். சிவராமன், விலை 4 அணா]

குடியாத்தத்திலிருந்து வெளி வருகிறது சினிமாவுக்கான இந்த மாதப் பத்திரிகை. கேள்வி–பதில், சினிமாச் செய்திகள் முதலியன அடங்கியுள்ளது.

The South Indian Journalist

[ஆசிரியர்: காஸா சுப்பாராவ். விலை 4 அணா. கிடைக்குமிடம்; தென்னிந்தியப் பத்திரிகையாளர் சம்மேளனம், சென்னை—2]

தென்னிந்தியப் பத்திரிகாசிரியர் சம்மேளனத்தின் சார்பில் வெளியிடப்படும் ஆங்கில மாதப் பத்திரிகையாகும் இது. அவர்களது நலன்களுக்காகவே ஆரம்பமாகி இருக்கிறது இப்பத்திரிகை.

அமிர்த சஞ்சீவி

[ஆசிரியர்: இராம நாச்சியப்பன்; விலை: தனிப் பிரதி 4 அணா: கிடைக்குமிடம்: கல்லுக்கட்டி, காரைக்குடி.]

சிறு கதைகளையும், ஆனந்த விகடன் பகுத்தறிவுப் போட்டிக்கான விடை விமர்சனத்தையும் கொண்டு வெளி வருகிறது இந்த வாரப் பத்திரிகை.

சாந்தி

[நிர்வாக ஆசிரியர்: டாக்டர் எம். ஏ. கரீம்; விலை 2 அணா; கிடைக்குமிடம்: 111, பி. பி. ரோட், சென்னை. 5]

கவிதை. பிரயாணக் கட்டுரை, ராசி பலன், சினிமாச் செய்திகள் முதலியன அடங்கிய மாதப் பத்திரிகை.

எங்கள் பாபுஜி

மகாத்மா காந்திஜியின் வாழ்க்கையை எளிய நடையில் எழுதியிருக்கிறார் ஆசிரியர், 'இளைஞன்' தெல்லியூர். செ. நடராஜன். இலங்கை, தெல்லிப்பிழையிலுள்ள இளைஞன் பிரசுராலயத்தின் வெளியீடு இது.

கணவன் மனைவியிடம் காதல் வாழ்வு உண்டா?

சென்னை, லிங்கச் செட்டி தெருவிலுள்ள மோகன் அண்டு கம்பெனியார் வெளியிட்டுள்ளனர் இப்புத்தகத்தை. வாலிபர்கள் ரஸித்துப் படிக்கக்கூடும்.

டில்லி சலோ, தங்கத் தம்பி

இந்த இரண்டு புத்தகங்களும் சிறுவர்களுக்கான கதைப் புத்தகங்கள். எஸ். ராமதாஸ் எழுதிய இப்புத்தகங்கள் ஒவ்வொன்றும் விலை 3 அணா. முரசு பதிப்பகம், 187/128. தாமோதர செட்டி தெரு, குகை, சேலம் என்ற விலாசத்தில் கிடைக்கும்.

போக்கிரி மணி

இதுவும் சிறுவர்களுக்கான கதைப் புத்தகம்தான். இரண்டணா விலையுள்ள இப்புத்தகம், சாந்தி அலுவலகம், 51, இராமநாதபுரம் ரோட், மதுரை என்ற விலாசத்தில் கிடைக்கும்.

கவனிக்க!

மதிப்புரைக்கு புஸ்தகங்கள், பத்திரிகைகள் முதலியவைகளை அனுப்புபவர்கள் இரண்டு பிரதிகளை அனுப்பிவைக்க வேண்டும். மதிப்புரை வெளிவரும் "குண்டூசி" பிரதி சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

—ஆசிரியர்.

134123

வில்லன் பாலய்யா

[16-ம் பக்கத் தொடர்ச்சி]

அவர் அந்த வேஷத்திற்கு பாலய்யாவைப் பழக்கி, நாடகத்தன்று, "இதோ பார்! இது நான் நடிக்க வேண்டிய வேஷம். இந்த நாடகத்தில் மூன்று முறையாவது நீ கரகோஷம் பெற வேண்டும். தெரிந்ததா?" என்று எச்சரித்து அவரை மேடைக்கு அனுப்பி வைத்தார் முத்துகிருஷ்ணன். பாலய்யாவின் நடிப்பைப் பொதுஜனங்கள் பெரிதும் பாராட்டினார்கள். மூன்று கரகோஷத்திற்குப் பதில் அன்றைய நாடகம் முழுவதுமே ஒரே கரகோஷமாக முடிந்தது.

பாலய்யா பால மோஹன சபாவில் சேர்ந்து சுமார் 3 வருஷங்களானதும், அக்கம்பெனியில் பிளவு ஏற்பட்டு, முத்துகிருஷ்ணன் முதலானவர்கள் வெளியேறினர். பாலய்யாவும் சொந்த ஊருக்குச் சென்றார். சில மாதங்களுக்குப் பிறகு அக் கம்பெனியை பி. ராஜாம்பாள் வாங்கிக் கொண்டு, ஸ்ரீ. கந்தசாமி முதலியாரை வரவழைத்து, வேலூரில் நாடகங்களை ஆரம்பித்தார். பாலய்யாவும் இக் கம்பெனியில் போய்ச் சேர்ந்தார்.

புதுக் கம்பெனியில் சேர்ந்த பாலய்யாவின் முரட்டுத்தனம் புது ரூபம் பெற்றது. ஒரு முறை வேலூரில் ராஜாம்பாள் கம்பெனியார் போலீஸ் அதிகாரிகளுக்கென பிரத்தியேகமாய் 'மேனகா' நாடகத்தை நடத்தினார்கள். அதில் பாலய்யா சர்க்கிள் இன்ஸ்பெக்டர் வேஷத்தை ஏற்று நடித்தார். அவருக்கு வேஷம் தத்ரூபமாய் அமைந்திருந்ததே போல், அன்றைய சவுக்கடிக் காட்சி அசல் நிகழ்ச்சியாகவே மாறி விட்டது. பாலய்யா சவுக்கை சொடுக்கியது சாமாவாக நடித்த புதுக்கோட்டை சுந்தரம் ஐயர் மீது பட்டு விட்டதாம். அவர் வலி தாங்காமல் —மேடைமீது நடிப்பதை மறந்து— பாலய்யாவை தாறுமாறாகத் திட்டி விட்டாராம். கோபமுற்ற பாலய்யா, சாமா ஐயரை சவுக்கால் அடிப்பதாக பாவனை செய்வதற்குப் பதில் உண்மையாகவே வெளுத்து வாங்கி விட்டாராம்! அன்று விஜயம் செய்திருந்த போலீஸ் அதிகாரிகள், "அடேயப்பா! எங்களால் கூட இவ்வளவு கெடுபிடியாக நடிக்க முடியாது. நடிப்பு பலே, பேஷ்!" என்று பாலய்யாவை அளவில்லாமல் புகழ்ந்தனராம். அவர்கள், பாவம், அந்த சுந்தரம் ஐயரின் உடம்பில் ஏற்பட்டிருந்த தழும்புகளைப் பார்த்திருந்தால்லவா தெரிந்திருக்கும் — அன்றைய காட்சியில் பாலய்யா நடிக்கவில்லை; உண்மையாகவே நடந்துகொண்டார் என்பது!



"சாயா" படத்தில்

ராஜாம்பாள் கம்பெனி வேலூரை விட்டு சென்னையை அடைந்தது. சென்னையில் பதி பக்தி நாடகத்தை அவர்கள் 150 தடவை நடத்தினார்கள். இந்த நாடகத்தின் மூலம் பாலய்யாவுக்கு மிகுந்த புகழ் ஏற்பட்டது.

ஆனால், துரதிருஷ்டவசமாக அந்தக் கம்பெனிதான் மூடப்பட்டு விட்டது. பாலய்யா முதலான அக்கம்பெனி நடிகர்களை வைத்துக்கொண்டு ஆசிரியர் கந்தசாமி முதலியார் "சாரதா டிரமேட்டிக் பாய்ல் கம்பெனி"யை ஆரம்பித்தார். ஆனால், இக்கம்பெனி ஆறு மாதகாலமே நடந்தது.

சதிலீலாவதி

இந்த சமயத்தில், கோயமுத்தூரில் ஏ. என். மருதாசலம் செட்டியார் சதி லீலாவதி படத்திற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தார். சதி லீலாவதியும் பதி பக்தியும் ஒரே மாதிரியான கதைதான் என்பது நேயர்களுக்குத் தெரிந்தே யிருக்கும். எனவே, 'பதிபக்தி' நாடகத்தில் புகழ் பெற்றிருந்த பாலய்யாவை ஸ்ரீ.செட்டியார் சதி லீலாவதி படத்திற்காக ஒப்பந்தம் செய்துகொண்டார். படம் பூராவுக்கும் பாலய்யாவுக்கு ரூ. 350 தான் சம்பளமாக அளிக்கப்பட்டது. படத் தயாரிப்பு ஆரம்பமானதுமே அவருக்கு தேக அசௌக்கியம் ஏற்பட்டது. தேக அசௌக்கியத்துடனேயே அவர் அப்படத்தில் ஒருவாறாக நடித்து முடித்தார். இது முடிந்ததும், அவர் மூன்று வருஷகாலம் நாடகமும் இல்லாமல், சினிமாவுமில்லாமல் மிகுந்த கஷ்டங்களை அனுபவித்தார். பிறகு பரமேஸ்வர் ஸௌண்ட் பிக்சர்ஸார் அவருக்கு **இரு சகோதரர்கள்** படத்தில் நடிக்கும் சந்தர்ப்பத்தை அளித்தனர். இப்படம் முடிந்ததும் மறுபடியும் அவரை வேலையில்லாத் திண்டாட்டம் பிடித்துக் கொண்டது. ஒன்றரை வருஷத்திற்குப் பின் அவர் சதி அநுசூயா படத்துடன் சேர்க்கப்பட்ட கர்வி பார்ஸ் என்ற துண்டுப் படத்தில் ஒரு சிறிய ஹாஸ்ய பாகத்தை ஏற்று நடித்தார்.

முதல் இரண்டு படங்களில் பாலய்யாவைப் பரீக்ஷித்திருந்த எல்லிஸ் ஆர். டங்கனுக்கு அவரது நடிப்பில் ஒரு நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டிருந்தது. எனவே, அவர் தாம் தயாரித்த **அம்பிகாபதி** படத்தில் வில்லன் வேஷத்தை நடிப்பதற்கு பாலய்யாவை அமர்த்தினார். டங்கன் எடுத்துக்கொண்ட பிரத்தியேக சிரத்தை காரணமாக பாலய்யாவின் நடிப்பு பாராட்டக் கூடியபடி அமைந்தது. "வில்லன் வேஷத்திற்கு பாலய்யா மிக ஏற்றவர்" என்ற எண்ணமும் பரவலாயிற்று.

அம்பிகாபதிக்குப் பிறகு பாலய்யா **பம்பாய் மெயில்** படத்தில் 'ஊதியமின்றியே!) நடித்தார். அதன் பிறகு அவர் மாடர்ன் தியேட்டர்ஸாரின் **உத்தம புத்திர**னில் நடித்தார். இந்தப் படத்தின் மூலமும் அவருக்கு நிறையப் புகழ் ஏற்பட்டது.

வில்லன் வேஷத்தை நடிப்பவர் உண்மையிலேயே வில்லனாக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் பாலய்யாவிடமோ வில்லனின் சில குணங்கள் காணப் பட்டதால், படக்

கதா நாயகர்களைப் போலவே பட முதலாளிகளும் (அவரை ஒப்பந்தம் செய்து கொள்ளப்) பயப்பட்டனர்! தம் வில்லன் குணததைப் படத்துடன் நிறுத்திக் கொள்ளாவிட்டால் தாம் ஒருக்காலும் முன்னுக்கு வரமுடியாது என்பதை பாலய்யா உணரலானார். உத்தம புத்திரனுக்குப் பிறகு அவர் தம் குணத்தைப் பூராவாக மாற்றிக் கொண்டு பட முதலாளிகளுடன் மிக ஒத்துழைக்க ஆரம்பித்தார். அதன் விளைவாக பல படமுதலாளிகள் ஏக காலத்தில் அவரை ஒப்பந்தம் செய்து கொள்ள முற்பட்டனர். தம் அன்றைய முறட்டுத் தனங்களைப் பற்றி பாலய்யா இன்று கூறும் போது, அவற்றை நம்ப முடியாதபடி அவர் சர்வ சாது மனிதராக மாறிப் போயிருக்கிறார். அவரது குணங்கள் மாறுதலடைந்ததற்கு ஏற்றாற்போல் வில்லன் வேஷங்களிலேயே நடித்து வந்த அவர் கதாநாயகனாக மாறியுள்ளதும் பொருத்தமேயல்லவா?

உத்தம புத்திரனுக்குப் பிறகு

'தூக்குத் தூக்கி' நாடகத்தில்



'பதி பக்தி' நாடகத்தில்

பாலய்யா பூலோக ரம்பை, மனோன்மணி, ஆர்யமாலா, சாயா (வெளிவரவில்லை), ஜெகதல ப்ரதாபன், பிருதிவிராஜ் ஆகிய படங்களில் நடித்தார். ஒவ்வொரு படத்தின் மூலமும் அவருக்கு பொதுஜன ஆதரவு அதிகரித்துக் கொண்டே வந்தது.

மனோன்மணியில் நடித்து வந்த போது பாலய்யாவுக்கு மீண்டும் நாடகப் பைத்தியம் ஏற்பட்டது. 'ஸ்ரீ சாயி பாலகான சங்கீத சபா' என்ற நாடகக் கம்பெனியை ஸ்தாபித்தார். இந்த நாடகக் கம்பெனி தென்னாட்டு நகரங்கள் பலவற்றில் நாடகங்களை நடத்தியது. இரண்டு வருஷம் இக் கம்பெனியை நிர்வகித்ததில், பாலய்யாவுக்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டது. கையிலிருந்த காசெல்லாம் கரைந்து, கஷ்டங்களுக்குள்ளானார். வாழ்க்கையே அவருக்குக் கசந்து விட்டது. காஷாயம் அணிந்து, சினிமா நாடக விஷயங்களை அடியோடு மறந்து, ஒரு வருஷ காலம்

பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டிருந்தார். பிறகு அவருக்கு வாழ்க்கையில் மீண்டும் நம்பிக்கை ஏற்படலாயிற்று. காஷபாத்தை நீக்கி விட்டு, மறுபடியும் நடிக்க முற்பட்டார். பர்மா ராணி யும், மீராவும் அவரை வரவேற்றனர். நாதவிஜயத்திற்கும் ஒப்பந்தமானார்.

பாலய்யாவுக்கு மீண்டும் படகிராக்கிகள் அதிகரிக்கத் தொடங்கியது. சாலிவாஹன், சித்ரா, வால்மீகி ஆகிய படங்களில் அவர் நடித்தார். சதா வில்லன் வேஷங்களிலேயே தோன்றி வந்த பாலய்யா முதல் தடவையாக சித்ரா படத்தில் கதாநாயகன் வேஷத்தில் தோன்றினர். அதுமுதல் "பாலய்யா இனி ஏன் கதாநாயகனுவே நடிக்கக்கூடாது?" என்று ரஸிகர்கள் கேட்க ஆரம்பித்து விட்டனர்.

பாலய்யா நாட்டியராணி படத்திற்கு ஒப்பந்தமாகி சிலபகுதிகளை நடித்தார். ஆனல் அவை படத்தில் சேர்க்கப்படவில்லை. ராஜயோகி படத்திலும் அவர் சில பகுதிகளை நடித்திருக்கிறார். பின்னர் பாலய்யா கடகம், சண்பக வல்லி, ராஜகுமாரி, மாரியம்மன் ஆகிய படங்களில் நடித்தார். ராஜகுமாரி மூலம் அவர் ஏராளமான புகழைச் சம்பாதித்துக் கொண்டார். மோஹினியிலும், வேலைக்காரியிலும் அவரது நடிப்பு பிரமாதமான வெற்றியாய் விளங்குகிறது. சமீபத்தில் வெளிவந்துள்ள விஜயகுமாரியிலும் பாலய்யாவைப் பார்க்கலாம்.

இப்பொழுது பாலய்யா அரை டஜன் படங்களுக்கு ஒப்பந்தம் செய்யப் பட்டு நடித்து வருகிறர். ஏவி. எம்.மின் ஓர் இரவு, 'லேன'வின் வனசுந்தரி, ராயல் டாக்கீஸாரின் சுதர்சன், ஜியோ பில்ம்ஸாரின் மதுவிது, ஸ்ரீ கிருஷ்ண புரொடக்ஷன்ஸாரின் தமிழ், மலையாளப் படங்களான சந்திரிகா, என் ஆர். எம். புரொடக்ஷன்ஸாரின் சகோதரி, ஆகிய படங்களில் பாலய்யா தற்போது நடித்து வருகிறர்.

சைவப் பிள்ளை ஜாதியில் பிறந்த பாலய்யா திருநெல்வேலியைச் சேர்ந்தவர். அவரது தகப்பனரான சுப்ரமண்ய பிள்ளை காலமாகி பல வருஷங்களாகின்றன. அவரது தாயார் மட்டும் உயிரோடு இருக்கிறர். பாலய்யாவுடன் கூடப் பிறந்தவர்கள் ஒரு தமையனும், ஒரு தமக்கையும் ஆவர்.

1940ம் வருஷத்தில், கோயமுத்தூரில் உள்ள "கண்ணன் போட்டோ ஸ்டுடியோ"வின் சொந்தக்காரரான ஸ்ரீ. அங்கண்ணனின் புத்திரி பத்மாவதியை அவர் மணந்து கொண்டார். 1941ம் வருஷத்தில் அவரது இரண்டாவது புத்திரியான லீலாவதியையும் பாலய்யாவே மணந்து கொண்டார். மூத்த மனைவி ஆறவது பாரமும், இரண்டாவது மனைவி ஐந்தாவது பாரமும் படித்தவர்கள். மூத்த மனைவிக்கு, சாயி பாபு, துர்கா லக்ஷ்மி, சோணைபன், தேவசேனபதி, அரவிந்தோ—ஆக ஒரு பெண்ணும் நான்கு பிள்ளைகளும் பிறந்துள்ளனர்! இரண்டாவது மனைவிக்கோ அம்புஜா என்ற ஒரே ஒரு பெண் மட்டும் பிறந்துள்ளது.

சுமார் ஐந்தே கால்அடி உயரமும் மாநிறமும், காத்திரமான தோற்றமும், அழகிய முகமும் உடைய பாலய்யாவுக்கு இப்பொழுது 36 வயது ஆகிறது. அவர், 1914ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 23ந் தேதியன்று உத்திர நக்ஷத்திரத்தில் பிறந்தவர்.

பாலய்யாவுக்கு தமிழ், மலையாளம் தவிர ஹிந்தி பாஷையும் தெரியும், நீந்துதல், மோட்டார் ஓட்டுதல், குதிரை சவாரி, கத்திச் சண்டை, மல்யுத்தம் ஆகியவற்றில் பழக்கம் உண்டு. சுமாராகப் பாடவும், நன்கு நடிக்கவும் கூடியவர் பாலய்யா. முதன் முதலில் சதி லீலாவதியிலும் பிறகு சித்ரா, சண்பகவல்லி, மோஹினி ஆகிய படங்களிலும் அவரே பாடியிருக்கிறர். வில்லன் வேஷத்தைவிட கதாநாயகன் வேஷமே பாலய்யாவுக்கு மிகவும் பொருந்துகிறது என்பது என் அபிப்பிராயமாகும்.

இது செய்தி

நூருவது தின விழா

ஏவி. எம். தயாரிப்பான "வாழ்க்கை" சேர்ந்தாற்போல நூறு தினங்கள் நடைபெற்று, நூருவது நாள் விழாவைப் பல நகரங்களில் இம்மாதம் 2-ம் தேதியன்று கொண்டாடியது. சென்னை பாரகன் டாக்கீஸில் இவ்விழா மேயர் டாக்டர் பி. வி. செரியன் தலைமையில் நடைபெற்றது. அவர், தாம் படத்தை வெகுவாக ரஸித்ததாகக் குறிப்பிட்டார். பின்னர், ம. பொ. சிவஞான கிராமணியார் படத்தின் உயர்வையும், அதன் மூலம் ஸ்ரீ. 'மேனு' செய்துள்ள சேவையையும் குறித்துப் பேசினுர், கடைசியில் ஸ்ரீ.ஏவி. மெய்யப்பன், இந்தப் படம் வெற்றிகரமாக முடிவதற்குத் தமக்கு உதவியவர்களுக்கு தம் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டார்.

அதே தினம் விருதுநகர் ராதா டாக்கீஸிலும் இந்த விழா நடைபெற்றது. அன்று தலைமை வகித்த, முனிசிபல் சேர்மன் ஸ்ரீ. எம். எஸ். பி. நாடார், சம்பந்தப்பட்டவர்களுக்கு கொட்டகைக்காரர் அளித்த வெள்ளிக் கோப்பைகளை வழங்கினுர்.

பிரிவுபசாரக் கூட்டம்

ஜூபிடர் பிக்சர்ஸாரது, சென்னை கிளை ஆபீஸின் மானேஜராக இருந்து வந்த ஸ்ரீ. என். ஸ்ரீனிவாஸன் அக்கம்பெனியிலிருந்து விலகி மாடர்ன் தியேட்டர்ஸில் சேர்ந்துள்ளார். ஸ்ரீ. ஸ்ரீனிவாஸன் ஜூபிடரின் ஆசியோடுதான் விலகியிருக்கிருர். இந்த ஸ்தாபனத்திலிருந்து விலகுவது குறித்து ஜூபிடர் பிக்சர்ஸ் சிப்பந்திகள் ஒரு பிரிவுபசார விருந்தை நடத்தினுர்கள். இவ்விருந்து சென்ற மாதம் 31-ம் தேதி, ஜூபிடர் ஆபீஸில் நடைபெற்றது. ஸ்ரீ. சோமசுந்தரம் தலைமை வகித்தார். சிப்பந்திகளில் ஒருவர் அனைவரையும் வரவேற்று, ஸ்ரீனிவாஸனது திறமைகளையும் குணுதிசயங்களையும் பாராட்டி ஒரு பத்திரத்தை வாசித்து, அதை சிங்கார வேலைப்பாடுகள் அமைந்த ஒரு வெள்ளிப் பேழையில் வைத்து அவரிடம் அளித்தார். ஸ்ரீ. சம்பத் அனைவருக்கும் வந்தனம் அளித்தார்.

ஸ்ரீ. ஸ்ரீனிவாஸன் தமக்கு அளித்த உபசாரத்திற்கு பதிலளிக்கையில், தமக்கு ஆதரவளித்து வந்த ஜூபிடருக்கு தமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டார். மேலும் தமது புதிய முயற்சியில் தமக்கு அனைவரது ஆதரவும், ஆசியும் தேவை என்றும் கேட்டுக் கொண்டார். பின்னர் புதிய மானேஜரான ஸ்ரீ. மணி அறிமுகப் படுத்தப்பட்டார். அவர் சுருக்கமாக சில வார்த்தைகளைப் பேசினுர். ஸ்ரீ. ஸ்ரீனிவாஸன் தம்மிடம் ஒப்படைத்துள்ள பொறுப்பை தாம் வெற்றிகரமாக நடத்த அனைவரது ஆதரவும், ஆசியும் தமக்குத் தேவை என்று கேட்டுக் கொண்டார். ஸ்ரீ.மணி, 'ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ் கம்பெனி'யில் பல வருஷ அனுபவம் பெற்றவர். அவர் சினிமாத் துறையில் பல அரிய செயல்களை சாதிக்கவும், ஸ்ரீ. ஸ்ரீனிவாஸன் தமது புதிய முயற்சியில் வெற்றி பெறவும் நமது "குண்டூசி"யின் ஆசிகளைத் தெரிவிக்கிருேம்.

சிறந்த தங்கம், வெள்ளி நகைகளுக்கு ஏற்ற இடம்

ஜெயின் ஜ்வல்லரி கம்பெனி

1 நாகேஸ்வர ராவ் ரோடு
தியாகராயநகர்,
சென்னை-17

ஆர்.

கோகுல்
ஹேர் ஆயில்

டி.எஸ்.ஆர்.&கோ
கும்பகோணம்.

சென்னை ஏஜண்டு : M/s சுராஜ் ஏஜன்ஸிஸ்
158, லாயிட்ஸ ரோடு, ராயபபேடடை.
கோயமுததூர் & பாலக்காடு ஏஜண்டு :
B. பால பட்டாபி, கோயமுத்தூர்.

விதியில் சரோஜா

சக்தி புரொடக்ஷன்ஸார் தங்களது ''விதி''யில் நடிக்க பி. எஸ். சரோஜா, பி கே. சரஸ்வதி, நரசிம்மபாரதி ஆகியவர்களை ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள் என்று கேள்வி.

மனோஹரா

ஜூபிடர் பிக்சர்ஸின் பாகஸ்தரான ஸ்ரீ. சோமுவின் ஒத்துழைப்புடன் சென்னையில் 'மனோஹர் பிக்சர்ஸ்' என்ற புதிய படக் கம்பெனியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவர்களது முதல் படம் 'மனோஹரா'வாக இருக்கும் என்றும், ஜூபிடர் நிர்வாகத்துக்கு வந்துள்ள, (தற்பொழுது பழுது பார்க்கப்பட்டு வரும்) சென்னை பிரகதி ஸ்டுடியோவில் இப்படம் தயாராகும் என்றும் தெரிகிறது.

அதிருஷ்ட தீபம்

சில காலமாக சினிமாத் துறையிலிருந்து ஒதுங்கியிருந்த தமிழ்நாடு டாக்கீஸின் முதலாளி டைரெக்டர் எஸ். சௌந்தரராஜன் மீண்டும் படத் தயாரிப்பில் இறங்கியிருப்பதைக் கேட்க மிக மகிழ்ச்சி அடைகிறோம். அவர் ''அதிருஷ்ட தீபம்'' என்ற படத்தைத் தமிழ், தெலுங்கு ஆகிய இரு பாஷைகளிலும் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். இவ்விரு படங்களிலும் நல்லதொரு பாத்திரத்தில் 'விகடம்' ஆர். கிருஷ்ணமூர்த்தி நடிப்பாரென்று தெரிகிறது.

திருகுபாடு

ராகினி பிலிம்ஸாரின் ''திருகுபாடு'' தெலுங்குப் படத்தின் பத்திரிகைக் காட்சி சென்ற மாதம் 26-ம் தேதி சென்னை 'அசோகா டாக்கீஸி'ல் நடைபெற்றது. பி. புல்லையாவின் டைரெக்ஷனில் தயாராகியுள்ள இந்த சமூகப் படத்தில் நாராயண ராவ், சாந்தகுமாரி, கிருஷ்ணவேணி முதலியவர்கள் நடித்திருக்கின்றனர்.

சகோதரி

சென்னையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள என். ஆர். எம். புரொடக்ஷன்ஸார் ''சகோதரி'' என்ற படத்தைத் தயாரிக்கப் போகிறார்களாம். இப்படத்திற்கான கதை, வசனம், இவைகளை பி, ஏ. குமாரும், பாட்டுகளை கு. சா. கிருஷ்ணமூர்த்தியும் எழுதியிருக்கின்றனர். டி. எஸ். பாலையா, பி. எஸ். கோவிந்தன், கே. மாலதி, பி. கே. சரஸ்வதி முதலியவர்கள் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் தயாரிக்கப்படவிருக்கும் இப்படத்தை ஆர். சுப்பையா நாயுடுவும், ஜி. விஸ்வநாதனும் டைரெக்ட் செய்கிறார்களாம்.

தியேட்டர்களிடையே போட்டி

நிரந்தரமான சினிமாக் கொட்டகைகளுக்கும், டூரிங் சினிமாக்களுக்கும்

போட்டி ஏற்படாமல் தடுக்க, சில விதிகளை செய்ய சென்னை மாஹாண சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர். இது விஷயமாக வேண்டிய தகவல்களை சேகரிக்கும்படி சம்பந்தப்பட்ட இலாக்காக்களுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

உமையாள் நாடகம்

இம்மாதம் 7-ம் தேதி மயிலை தமிழ் நாடக நிலயத்தினர் "உமையாள்" என்ற சரித்திர நாடகத்தை வி. பி. ஹாலில் நடித்தார்கள்.

விஜயாவின் 'சௌகார்'

பத்திரிகைக் காட்சி என்பது எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டுபோல இருந்தது விஜயா புரொடக்ஷன்ஸாரின் "சௌகார்" பத்திரிகைக் காட்சி. இம்மாதம் 4ம் தேதியன்று இந்தக் காட்சி வாஹினி ஸ்டுடியோவிலுள்ள தியேட்டரில் நடைபெற்றது. பிரபல விளம்பர ஸ்தாபனமான 'ஈஸ்டர்ன்ஸ்' நிர்வாகி ஸ்ரீ. வெங்கடாச்சாரி பத்திரிகாசிரியர்களை விஜயா புரொடக்ஷன்ஸ் மானேஜிங் டைரெக்டர் ஸ்ரீ. நாகிரெட்டிக்கு அறிமுகப்படுத்தி வைத்தார், ஸ்ரீ. ரெட்டி எல்லோரையும் அழைத்துப் போய் வாஹினி ஸ்டுடியோவை சுற்றிக் காட்டினார். பிறகு படம் திரையிடப்பட்டது. 'சௌகார்' நல்லதொரு தெலுங்கு சமூகப் படம். இப்பொழுது இப் படம் சென்னையில் காட்டப்பட்டு வருகிறது. காட்சி முடிந்த பிறகு வந்திருந்த ஆசிரியர்களை மோட்டாரில் அவரவர் வீடுகளுக்குக் கொண்டு போய்விட்டது பாராட்டத்தக்க விஷயமாகும்.

ராமசாமியின் நாடக சபா

கே. ஆர். ராமசாமியின். 'கிருஷ்ணன் நாடக சபா' இன்னும் நடந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது அவர்களின் நாடகங்கள் பெங்களூரில் நடைபெற்று வருகின்றனவாம்.

பேபி சாருபாலா

கும்பகோணத்திலுள்ள இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிட்யூட்டின் ஆஸ்பத்திரி கட்டட நிதிக்காக இம்மாதம் 8-ம் தேதி போத்தனூரிலும், 9-ம் தேதி உதகமண்டலத்திலும் பேபி சாருபாலாவின் பரத நாட்டியக் கச்சேரிகள் நடைபெற்றன.

தங்கமணி நடனம்

இம்மாதம் 3ம் தேதியன்று ஈரோடு கண்காட்சியிலும், 14-ம் தேதி சித்தூர் கண்காக்ஷியிலும் குமாரி தங்கமணியின் பரத நாட்டியக் கச்சேரிகள் நடைபெற்றன.

லக்ஷ்மம்மா

சோபனாசலாவில் தயாராகி, ஆந்திர நாட்டில் வெற்றிகரமாக நடைபெற்று

"எட்ராம்"

வீரிய விருத்திக்கும்
இழந்த பலத்தை
திரும்பப் பெறுவ
தற்கும் சிறந்த

ஹோமியோபதி
கூட்டு ஔஷதம்

இதை ஆண், பெண்
யாவரும், எவ் வயதின
ரும் உபயோகிக்கலாம்

50 மாத்திரைகள்
கொண்ட புட்டி
விலை ரூபாய் 4.

இந்தியன் ஹோமியோபதி
இன்ஸ்டிடியூட்,
கும்பகோணம்.

வரும் "லக்ஷ்மம்மா" தெலுங்குப் படம் இப்பொழுது தமிழ் வசனங்களுடன் தயாராகி வருகிறது. ஏ. ஏ. சோமயாஜுலுவின் பொறுப்பில் வேலை துரிதமாய் நடைபெற்று வருகிறது.

விவாஹ ரத்து வழக்கு

பரத நாட்டியம் ஆடி வரும் குமாரி பாரதியை கே. எஸ். தியாகராஜன் என்பவர் 1948-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 4-ம் தேதி சட்ட முறைப்படி மணந்து கொண்டார். இந்த விவாஹத்தை ரத்து செய்ய வேண்டுமென்று ஹைக்கோர்ட்டில் ஒரு மனுவை தாக்கல் செய்தார் தியாகராஜன். 'புருஷ சேர்க்கைக்கு குமாரி பாரதி லாயக்கற்றவர்' என்று காரணம் காட்டியிருந்தார். குமாரி பாரதியும் அதை ஒப்புக்கொண்டார். வழக்கை விசாரித்த நீதிபதி, இந்தத் திருமணம் விரும்பத் தக்கது அல்லவென்று கூறி, விவாஹ ரத்துக்கு உத்தரவிட்டார்.

பத்திரிகைக் காட்சிகள்

மஹாத்மா பிக்சர்ஸின் (தமிழாக்கப் பட்ட) "நாக கன்னிகா"வின் பத்திரிகைக் காட்சி இம்மாதம் 12-ம் தேதி சென்னை சித்ரா டாக்கீஸில் நடை பெற்றது. 14-ம் தேதி கோவிந்தன் கம்பெனியாரின் "மருத நாட்டு இளவரசி" படத்தின் பத்திரிகைக் காட்சி சென்னை ஸாகர் டாக்கீஸில் நடைபெற்றது.

வாழ்த்துகிறோம்

பிரபல புகையிலைக் கம்பெனியான இ. எஸ். மைதீன் அண்டு கம்பெனியின் சொந்தக்காரரான ஜ. இ. ஷேக் மைதீன் ராவுத்தர் தமது கனிஷ்ட புதல்வி சௌ. ரஹ்மத் பீபியை, மேலக்காவேரி ஜனுப் கே. காதர்பாஷா ராவுத்தரின் மகன் அப்துல் ரஜாக்குக்குத் திருமணம் செய்து வைத்தார். மேலக்காவேரியில் சிறந்த முறையில் இந்த விவாகம் நடைபெற்றது. தம்பதிகளுக்கு நமது ஆசிகள்.

நமது சித்தூர் ஏஜன்ட் ஸ்ரீ. என். துரைஸ்வாமி, சௌ. லக்ஷ்மிகாந்தம்மாவை இம் மாதம் 6ம் தேதியன்று தமது வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றார். தம்பதிகளுக்கு நமது ஆசிகள்.

பராசக்தி

ஏவி. எம். படங்களின் சில பிரதேச உரிமைகளை வாங்கி வெற்றிகரமாகப் படங்களைத் திரையிட்டு வரும் நேஷனல் பிக்சர்ஸார், ஏவி. எம். ஸ்டுடியோவின் கூட்டுறவில் "பராசக்தி" என்ற படத்தைத் தயாரிப்பார்களென்று தெரிகிறது. இப்படத்தை கிருஷ்ணனும் — பஞ்சுவும் டைரெக்ட் செய்யக் கூடுமென்று தெரிகிறது.

பொன்விழாக் கொண்டாடினர்

சென்னை திருவல்லிக் கேணி ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி சபாவின் பொன் விழாக் கொண் டாட்டம் இம் மாதம் 7-ம் தேதி நடைபெற் றது. கனம் பிரதம நீதி பதி பி. வி. ராஜமன்னர் விழாவை ஆரம்பித்து வைத்தார். சபாக்காரர் கள் இந்தக் கொண்டா ட்டம் சம்பந்தமாக ஒரு மலரை வெளியிட் டிருக்கின்றனர். சபா வைப் பற்றி சில பிரமு கர்கள் இம் மலரில் எழுதியிருக்கின்ற னர். காலஞ் சென்ற பல பிரபல சங்கீத வித் வான்களின் படங்களை யெல்லாம் மலரில் பிரசுரித்திருப்பது குறிப்பிடத் தக்கது. சென்னை கமர்ஷியல் அச்சகத்தார் சிறந்த முறையில் இம் மலரை அச்சிட்டுத் தந்துள்ளனர்.



திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சபாவின் பொன்விழா நடந்தபோது, பிரதம நீதிபதி ஸ்ரீ. ராஜமன்னர் எம். எஸ். சுப்புலக்ஷ்மிக்கு வெள்ளிப் பேழையைப் பரிசளிக்கிறார்.

அமெச்சூர் நடிகர்கள் கோஷ்டி

தமிழ் வருஷப் பிறப்பை, சென்னை அமெச்சூர் நடிகர்கள் கோஷ்டியார் இம் மாதம் 13-ம் தேதி சௌந்தரிய மஹா லில் கொண்டாடினர்கள். அவர்கள் அன்று ஆனந்த விகடன் 'தேவன்' எழு திய 'மைதிலி' நாடகத்தை நடித்தனர்.

கானல் நீர்

தமிழ் வருஷப் பிறப்பன்று, ஒய். எம். ஐ. ஏ., கலைப் பகுதியினர் கலை விழா ஒன்றைக் கொண்டாடினர்கள். கோகலே ஹாலில் நடைபெற்ற இந்த விழாவுக்கு "கல்கி" ஆசிரியர் ஸ்ரீ. ரா. கிருஷ்ண மூர்த்தி தலைமை வகித்தார். வி. எஸ். விஸ்வநாதன் எழுதிய "கானல் நீர்" என்ற சமூக நாடகம் நடைபெற்றது.

கோபிநாத் நடனம்

ஓரியன்டல் நடனங்களை கதக்களி முறையில் ஆடும்போது, வேகமான ஜதிகள் நிறைந்து, பாவபாஷை விசே ஷங்களுடன் விறுவிறுப்பு நிறைந்த தாய் இருக்கும். மேலும் இதை நல்ல தேர்ச்சியும் பழுத்த அநுபவமும் பெற்றவரின் கோஷ்டி ஆடும்போது அதன் அழகுக்கு கேட்பானேன்! இத்தகைய நடனங்களை இம்மாதம் 16ம் தேதி, யன்று இந்திய நுண் கலைக் கழகத்தின் ஆதரவில், நடன கலாநிதி கோபிநாத் தம் கோஷ்டியுடன் கோக லே மண்டபத்தில் ஆடிக்காட்டினர்.

"வள்ளித் திருமணம்", "பஸ்மா ஸுர மோஹினி" ஆகியவை மற்ற எல்லா நிகழ்ச்சிகளையும்விட மிகவும் சிறந்து விளங்கின. கோபிநாத் அவர் களின் வீரம் பொருந்திய கச்சிதமான ஜதிகளும், மற்றைய ஆங்கிக அசைவு களும், விசேஷ கவர்ச்சி பொருந்திய வைகளாக விளங்கின. "கோபியரின் முறையீடு", "பக்த பிரஹலாதா" முதலிய காட்சிகளில் பங்கெடுத்துக் கொண்ட கோபிநாத்தின் புத்திரி பேபி வாஸந்தியின் நடனம் ஆச்சரி யப்படும் வகையில் அமைந்திருந்தது. இந்த கோஷ்டியில் ஒருவரான ஸ்ரீமதி லக்ஷ்மியின் அபிநய அழகையும், உடல் லாகவத்தையும் குறிப்பிடாம லிருக்க முடியவில்லை. கதக்களி பாவங் களையும், ஜதிகளையும் ஆதாரமாகக் கொண்டு, அஹார்யத்தை மட்டும், காலப் போக்கிற் கேற்றவாறு சிறிது மாற்றி அமைத்திருக்கும் கோபிநாத் தின் "பாணி" இந்தியா முழு வதிலுமே பிரசித்தி பெற்றிருக்கும் போது, அன்றையக் கச்சேரி அமைந் திருந்த விதத்தைப் பற்றி சொல்லு வானேன்!

காந்திஜி ஸ்தூபி நிதி

இந்த மாத வசூலைப் பார்க்கும்போது, "போன மாத வசூலில் மூன்றில் ஒரு பங்கு கூட இல்லை" என்பது தெரியும். இதற்காக நாம் வருத்தப்படவில்லை. இந்த மாதம் வசூலானதைவிட "வாக்களிக்கப்பட்டுள்ளது" அதிகம். எனவே அடுத்த மாத வசூல், போன மாத வசூலைப்போல மூன்று பங்கு அதிகமாய் இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இந்த மாதம் அதிக காணிக்கை அளித்துள்ளவர்கள் எம். எஸ். சுந்தரி பாயும், ரமணி—கோபால கிருஷ்ணுவும் ஆவர். ரமணி–கோபாலகிருஷ்ண தம்பதிகள் இந்தியாவில் பல இடங்களில் நடனம் ஆடி நல்ல புகழ் பெற்றுள்ளனர். இம்மாதம் 13–ந் தேதியன்று கூட ஈரோடு கண்காட்சியில்" அவர்கள் இந்திய நடனங்களை ஆடிக்காட்டினுர்கள்.

சுந்தரி பாய் ஜெமினி படங்கள் மூலம் ரஸிகர்களின் நன்மதிப்பைப் பெற்றிருக்கிருர், இவர்கள் மூவரும் "காந்திஜி நிதி" என்று கேட்டதுமே, தயக்கமில்லாமல் காணிக்கை அளித்தது குறிப்பிடத்தக்க விஷயமாகும்.

மற்றும், சினிமா நடிகைகளான எஸ். மேனகா, கே. வரலக்ஷ்மி, சரோஜினி ஐராவதி, நடன நக்ஷத்திரமான ஸி. எஸ். விஜயா ஆகியோரும் காணிக்கை அளித்துள்ளனர்.

"குண்டூசி" மூலம் இம்மாதம் வசூலிக்கப்பட்டவை

ரமணி—கோபாலகிருஷ்ணு, நடன நக்ஷத்திரங்கள் சென்னை ...	51	0	0
எம். எஸ். சுந்தரிபாய், சினிமா நடிகை, சென்னை	51	0	0
எஸ். மேனகா, சினிமா நடிகை, சென்னை...	11	0	0
குமாரி ஸி. எஸ். விஜயா. நாட்டிய நக்ஷத்திரம், சென்னை ...	11	0	0
ஏ. சுப்பையா, மானேஜர், ரமணீய கலாகேந்திரம். சென்னை ...	11	0	0
ஆர். டி. எஸ். ராஜன், கும்பகோணம் ...	11	0	0
சரோஜினி ஐராவதி, சினிமா நடிகை, சென்னை...	10	0	0
கே. வரலக்ஷ்மி, சினிமா நடிகை, சென்னை...	10	0	0
ஆர். வெங்கட்ராமன்,(ஆர்வி) "கலைமகள்", சென்னை ...	5	0	0
ஆர். முத்துசாமி, பினுங்கு ...	5	0	0
ஜே. சக்ரவர்த்தி, வேதாரண்யம் ...	5	[illegible]	[illegible]
ஈ. ராஜாமணி, பம்பாய் ...	5	0	0
ஜி. கார்த்திகேயன் சென்னை...	3	0	0
கந்தநாதன், "பாரததேவி" ஆபீஸ், சென்னை ...	2	2	2
ஆர். பிச்சைமுத்து ராஜா, "குண்டூசி" ஏஜண்ட், ஜியாபுரம் ...	2	0	0
எஸ். வெங்கடாசலம், காளஹஸ்தி ...	2	0	0
ஆர். ஐம்புநாதன், பூந்தோட்டம் ...	2	0	0
எச். கோவிந்தசாமி, ஹாஸன்	1	12	0
பொன்னுசாமி, "குண்டூசி" ஏஜண்ட், வேதாரண்யம்	1	10	0
எஸ். ராஜகோபால ஐயர், "குண்டூசி" ஏஜண்ட், மாயவரம் ...	1	2	9
குன்ருபுரம் எஸ். ராஜன், குன்னத்தூர் ...	1	0	0
கே. ஸ்ரீநிவாஸன், "குண்டூசி" ஏஜண்ட் சேலம் ...	1	0	0
ஸி. ஜி. ராமகிருஷ்ணன், மாலூர், கோலார் ...	1	0	0
கே. வி. வெங்கட்ராமன், பி.ஏ. காஞ்சிபுரம் ...	1	0	0
பி. ஸ்ரீனிவாஸ பிள்ளை, "குண்டூசி" ஏஜண்ட், சீர்காழி ...	1	0	0
ஸி. ஏ. சையத் அப்பாஸ், "குண்டூசி" ஏஜண்ட், கம்பம் ...	1	0	0
வி. நடராஜன், அனேகல் ...	0	10	0
ஆர். எஸ். சுப்ரமண்யம். விழுப்புரம் ...	0	8	0
டி. ஆர். ராஜகோபாலன், சென்னை ...	0	8	0
டி. என். தர்மலிங்கம். "குண்டூசி" ஏஜண்ட், திருப்பத்தூர் (N. A.) ...	0	8	0
வி. கே. முத்தையா, பம்பாய்–17 ...	0	4	0
எஸ். குருநாதன், திருவனந்தபுரம் ...	0	4	0
ஸி. கே. நடராஜன், கோயம்பத்தூர் ...	0	4	0
ஜி. தீனதயாளன், திருப்பூர் ...	0	4	0
வி. ராஜாராமன், மதருஸ் ...	0	4	0
"குண்டூசி"யிடம் கேள்வி கேட்டவர்களின் காணிக்கை ...	13	12	0
ஆக ரூ.	224	12	11

உங்கள் மனைவிக்கு



**டேராடூன் மலைகளில் வசிக்கும்
ஒரு முனிவரின் வரப்பிரசாதம்.**

இந்த "சன்னியாசி ஔஷத"த்தை ஒருமுறை சாப்பிட்ட உடனேயே லூக்கரோஹியா என்ற வெள்ளை நீர்க் கசிவு நின்றுவிடும். மாதவிடாயை ஒழுங்குபடுத்தும். முதுகு வலியைப் போக்கி முகத்திற்கு செந்நிறத்தை மீண்டும் அளிக்கும். புஜங்களுக்கு வலிவையும், கண்களுக்கு பிரகாசத்தையும் உண்டுபண்ணும். சோம்பலும் சோர்வும் ஒழியும். மேல் மூச்சு வாங்குவது நிற்கும். அவளது தேகம் இரும்பு போலாகிவிடும். மலடைப் போக்கிவைக்கும். இந்த மருந்தை வெறுமனே புகழ வேண்டியதில்லை. ஒருமுறை உபயோகித்தால் அதன் சக்தி தானே நன்கு விளங்கும்.

"சன்னியாசி ஔஷதம்" அநுபவமுள்ள வைத்தியர்களின் மேற்பார்வையில் தயாரிக்கப்படுகிறது. கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கும் என் சகோதரிகளின் நன்மைக்காக நான் இம்மருந்தை அசல் விலைக்கு விநியோகித்து வருகிறேன். ஒரு வியாதியஸ்தருக்கு பதினைந்து நாள் மருந்தின் அசல் விலை ரூ. 2—14—0. தபாற் செலவு பிரத்தியேகம். கடவுள் எனக்கு வேண்டிய செல்வத்தை அளித்திருப்பதால் இந்த மருந்தை விற்று நான் லாபம் அடைய விரும்பவில்லை. எனக்கு இந்த ஒரு மருந்தைப் பற்றித்தான் தெரியும். இதர வியாதிகளுக்கு என்னிடம் மருந்து கேட்க வேண்டாம். இந்த மருந்து சரியாக இல்லை என்று தெரிந்தால், நான் பூரா பணத்தையும் வாபஸ் செய்ய உத்திரவாதமளிக்கிறேன். "லூக்கோரோஹியா"வினால் ஏமாற்றம் அடைந்துள்ள வியாதியஸ்தர் அனைவரையும் இந்த "சன்னியாசி ஔஷத"த்தை ஒருமுறை பரீக்ஷிக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.

Prof. Dev Dutt,
Vir Bhan Street,
(G. M.) Jullundur City.

பிரம்மலோகம்

சௌதாமினி

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியின் 'சௌதாமினி' தெலுங்கு, தமிழ்ப் படங்களின் ஷூட்டிங் ஜெமினியில் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. வில்லன், மகாராஜா, ராணி, கதா நாயகன் இவர்களைக் கைது செய்யும் கட்டம் படமாக்கப்பட்டது. இக்காட்சியில் கண்ணும்பா, ராதா, நாகேஸ்வா ராவ் மூவரும், மற்றும் வில்லனாக கே. நடராஜனும், அவனுடைய காதலியாக ரஜனியும் நடித்தார்கள். ஸ்ரீ கே. நாகபூஷணம் தான் படத்தை டைரெக்ட் செய்து வருகிறார்.

மங்களா

ஜெமினி 'மங்களா' (ஹிந்தி மங்கம்மா சபதம்) வேலை ஆரம்பமாகி விட்டது. பானுமதி, ரஞ்சன் பிரதம பாகங்களில் நடிக்கப் போகும் இப் படத்திற்கான சில பாடல்கள் ஒலிப்பதிவாகி யுள்ளன. எஸ். எஸ். வாஸன் டைரெக்ஷனில் வெளிவரப் போகும் இப்படத்தில் நடிக்க வட நாட்டு நடிகர் டேவிட் ஒப்பந்தம் செய்யப் பட்டிருப்பதாகவும் தெரிகிறது. தீபாவளி வெளியீடாக இருக்குமாம் இப் படம்.

ஔவையார்

கே. பி. சுந்தராம்பாள் பிரதம பாகத்தில் நடிக்கும் ஜெமினியின் 'ஔவையார்' அநேகமாகப் பூர்த்தியாகி விட்டதாம். அந்தப் புடத்தில் சேர்ப்பதற்கென குறவஞ்சி நடனம் ஒன்றிற்கான ஒத்திகைகள் தண்டாயுதபாணி பிள்ளையின் மேற் பார்வையில் நடைபெற்று வருகிறது. மற்றும் கொத்தமங்கலம் சுப்பு, சுந்தரிபாய், எஸ். ஆர். லக்ஷ்மி ஆகியோர் இப் படத்தில் நடிக்கின்றனர்.

ஏழை படும் பாடு

பக்ஷிராஜாவின் 'ஏழை படும் பாடு' படப் பிடிப்பு முடிவடைந்து வருகிறதாம். குமாரி ராஜம், நாகய்யா, பாலையா, சீதாராமன் சம்பந்தப் பட்ட காக்ஷி ஒன்று சமீபத்தில் படமாக்கப்பட்டது. டைரெக்டர் ராம்னுத் இப் படத்தில் சில அருமையான காட்சிகளை எடுத்து சேர்த்திருக்கிறாராம்.

இதய கீதம்

ஸிட்டாடலின் 'இதய கீதம்' முக்காலே மூன்று வீசும் படம் முடிவடைந்து விட்டதாம். டி. ஆர். மஹாலிங்கம், தோன்றும் சில காட்சிகள் தற்பொழுது ஸதர்ன் ஸ்டுடியோவில் தயாராகி வருகிறது. இப் படத்தை ஒரு சிறந்த படமாகக் கொண்டு வர டைரெக்டர் ஜோஸப் தளியத் அரும்பாடு பட்டு வருகிறார். மற்றும் இப் படத்தில் டி. ஆர். ராஜகுமாரி, கே. சாரங்கபாணி, டி. பி. ராஜ லக்ஷ்மி ஆகியோர் நடிக்கின்றனர். இப் படம் மே மாதம் 3-வது வாரத்தில் .திரையிடப் படக்கூடு மென்று தெரிகிறது.

சந்திரிகா

வாஹினி ஸ்டுடியோவில், தமிழ் மலையாளம் இரு பாஷைகளில் தயாராகி வரும் 'சந்திரிகா' படப் பிடிப்பு இம் மாத இறுதிக்குள் முடிவடைந்து மே மாதம் திரையிடப் படலாம் என்று தெரிகிறது. கிருஷ்ணு ப்ரொடக்ஷன்ஸாரின் இப் படத்தை வி. எஸ். ராகவன் டைரெக்ட் செய்து வருகிறார். டி. எஸ். பாலையா, வி. என். ஜானகி பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர்.

லாவண்யா

ஈஸ்டர்ன் ஆர்ட் ப்ரொடக்ஷன்ஸாரின், வாஹினி ஸ்டுடியோவில் தயாராகி வரும் "லாவண்யா"வும் சீக்கிரமே திரையிடத் தயாராகி விடுமாம். எஸ். கே. சாரியின் உதவியுடன் ஜி. ஆர். லக்ஷ்மணன் இப்படத்தை டைரெக்ட் செய்து வருகிறார். எஸ். கே. சாரி சினிமாத் துறையில் பழைய பெருச்சாளி. மௌனப் படக் காலத்திலிருந்து சினிமாத் துறையின் ஒவ்வொரு இலாகாவிலும் அனுபவம் உள்ளவர். ரேணுகா பில்ம்ஸில் உதவி டைரக்டராக இருந்தவர். இவருடைய உதவி "லாவண்யா"வின் வெற்றிக்கு உதவுமென நிச்சயமாக நம்பலாம். டி. இ. வரதன், சூர்யப் பிரபா, குமாரி கமலா பிரதம பாகங்களில் நடிக்கின்றனர்.

வன சுந்தரி

கிருஷ்ணு பிக்சர்ஸ் "வன சுந்தரி" நியூடோனில் படமாகி வருகிறது. லலிதா-பத்மினி சகோதரியர், டி. ஏ. ஜெய லக்ஷ்மி இவர்கள் சம்பந்தப் பட்ட நடனக் காக்ஷி ஒன்று சமீபத்தில் படமாக்கப்பட்டது ராஜகுமாரி, சின்னப்பா, வரலக்ஷ்மி கிருஷ்ணன்—மதுரம் முக்கிய நடிகர்கள்.

ராஜா விக்ரமா

கெம்ப்ராஜ் ப்ரொடக்ஷன்ஸின் "ராஜா விக்ரமா" மே மாத வெளியீடாக இருக்கலாம். டைரெக்டர் கெம்ப்ராஜ் படத்திற்கு நகாசு வேலைகள் செய்து வருகிறார். ராஜம்மா, ஜெயம்மா, கெம்ப்ராஜ் பிரதம பாகங்களில் நடித்துள்ளனர்.

காம சாஸ்திரம்

★

உலகத்தில் மிக்க அத்தியாவசியமான ஆண்-பெண் சேர்க்கையைப் பற்றிய 84 ஆசனங்களை உடைய, ரகசிய குறிப்புகளுடன் கூடிய மிகவும் உயர்ந்த புத்தகம். 84 ஆசனங்களின் 200 வகை நிஜ போட்டோ படங்கள்; தனித்தும், சேர்ந்தும் பல்வகை முறையில் போகம் துய்ப்பதும். இப்புத்தகம் நீங்கள் இதுவரை அறிந்திராத பல ரகசியங்களை எல்லாம் வெளிப்படுத்துகிறது. கல்யாணம் ஆகாதவர்கள் இப்புத்தகத்திற்கு எழுதற்க. 1 புத்தகம் விலை ரூ. 2-12-0. ரகசியபோட்டோ பலவகை தோற்றத்தில் கிடைக்கும். 25 கார்டுகள் தனித்திருப்பது ரூ. 2-12-0. 50 கார்டுகள் சேர்ந்திருப்பது விலை ரூ. 5-0-0. ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்'

M/S FRENCH PHOTO SUPPLY COMPANY (G. M)

JULLUNDUR CITY.

ஒரு வரம் கோருக!

இனி நீங்கள் சிறிதும் ஏமாற்றமடைய வேண்டியதில்லை. பெரு முயற்சியால்
தயாரிக்கப்பட்ட "வசிகரன் கைக்குட்டை "மூலம் நீங்கள் விரும்பிய பெண்

கிடைக்கக்கூடும். சிரிப்பு தவழும் குழந்தைகள் உங்
கள் மடியில் கொஞ்சலாம். கடின சித்தம் படைத்தவர்
கள்கூட உங்கள் காலடியில் விழுவர். உங்களுடைய
சக்திவாய்ந்த ஆதிக்கத்திற்கு கட்டுப்பட்டு நிற்பர்.
வேலை கிடைப்பது இனி கனவாக இருக்காது. மலடி
யாக இருக்கும் மனைவிக்குக்கூட குழந்தைகள் பிறக்
கும். இறந்தவர்களின் ஆத்மாவுடன் தொடர்பு ஏற்
படும். உங்களுடைய மூதாதையர்களின் புதையல்
கள் எங்கிருக்கின்றனவென்பது உங்களுக்கு கனவில்
அறிவிக்கப்படும். கோர்ட் தாவாக்களில் வெற்றி, லாட்
டரியிலும், பேரம், ஹேஷ்யங்களிலும் வெற்றிமேல்
வெற்றி. பரீட்சையில் சுலபமாக தேர்ச்சி பெறுவீர்கள்.
தொழிலில் லாபம் கிட்டும். உங்களுடைய துரதிஷ்டங்
கள் நீங்கிவிடும். அதிர்ஷ்டம் உங்களுக்கு பாதசேவை செய்யும். சுருங்கக்கூறு
மிடத்து உங்களுடைய விருப்பங்கள் அனைத்தும் பூர்த்தியாகிவிடும். உத்திரவாதம்:
உங்கள் மனம் விரும்பியதை நீங்கள் அடையாவிடில் கைக்குட்டையை 6 மாதங்
களுக்குள் திருப்பிக் கொடுத்துவிடலாம். வசிகரன் கைக்குட்டை நெ. 1, ரூ.
1-15-0. விசேஷ சக்தி வாய்ந்த கைக்குட்டை ரூ. 3-15-0. 24-மணி நேரத்திற்
குள் இதன் மகிமையைக் காணலாம். நமது "வசிகரன்" கைக்குட்டையால் இங்
கலியுகத்தில் இந்த ஸ்வாமி உண்மையை ஸ்தாபிக்கிறார். இதன் உதவியால்
கணக்கற்றவர்கள் தங்களுடைய ஆசைகளைப் பூர்த்தி செய்து கொண்டுள்ளனர்.
இந்த அரிய தருணத்தை தயவுசெய்து இழக்காதீர்கள்.

Prop : **BENGAL MESMERISM HOUSE (G. M.)** Hoshiarpur, Pb.

அழகும் ஆசையும்

[22-ம் பக்கத் தொடர்ச்சி]

கணத்தில் தோன்றி மறைந்தன. ஒருவாறு தள்ளாடிக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்து விட்டான். பிளந்துவிடும் போலிருந்த தலையை இரண்டு கைகளாலும் அழுத்தமாக பிடித்துக்கொண்டான். 'வசு!' என்று கூப்பிட்டான். அக்குரலில் ஒரு பயங்கரம் ஒலித்தது!

அடுத்த கணம் வசுந்தரா புன்னகை வெடிக்க—தன்னுடைய ஆசை பூர்த்தி பெற்றதால் ஏற்பட்ட மன உற்சாகத்தால் பூரித்தவளாய்—பொங்கித் ததும்பும் அழகுக்கு பூர்ண கலை சேர்ந்தாற்போல, மெல்லிய குரலில் ஏதோ பாட்டை முணுமுணுத்தவாறு, சந்துருவின் எதிரே வந்தாள். சந்துருவின் நிலையைக் கண்டதும் அவள் திகைத்து விட்டாள்.

"ஏன்! உடம்புக்கு என்ன? தலைவலியா?......" என்றவாறு சந்துருவை நெருங்கினாள் வசு. சந்துரு சீறினான்: "சீ! என்னைத் தொடாதே" என்று.

"ஆ!...தொடக் கூடாதா?...ஏன்... என்ன நடந்தது?..."

"இன்னும் என்ன நடக்க வேண்டும்? எல்லாம் தான் திரைமறைவில் தெருக்கூத்துப்போல நடத்திவிட்டாயே. மனிதனுக்கு மானம்தான் பெரிது. அது போன பிறகு வாழ்வது கேவலம் தான்! வசு நீ இப்படியெல்லாம் நடந்துகொள்வாய் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை. அழகு இருக்கிறதென்றால் அதற்காக ஆபாசத்தை பூசிக்கொள்ள முடியுமா?...கணவன் நானிருக்ககள்ளச் சந்தையில் வியாபாரம் செய்வதுபோல படத்தில் நடிக்க படாடோப விளம்பரமா?......சேச்சே...என்ன துணிச்சல் உனக்கு!..." என்று மூச்சு விடாது பேசினான் சந்துரு. பதில் பேசாது மௌனமாக இருக்கத்தான் எண்ணினாள் வசுந்தரா. ஆனால், அவள் மனம் கேட்கவில்லை.

"உங்கள் மானம் போக நான் என்ன தவறு செய்தேன்?" என்று கேட்டுவிட்டாள். சந்துருவுக்கு கோபம் சீறிக் கொண்டு வந்து விட்டது.

"சண்டாளி! செய்ததெல்லாம் தவறில்லையா...கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் நானிருக்கும் பொழுது, மறைமுகமாக சென்று படக் கம்பெனியில் ஒப்பந்தம் பேசினாயே; அது தவறில்லை? அள்ளிப்பருகும் அழகு இருக்கிறதென்ற மமதையால் கட்டிய கணவனைக் கேட்காமல் பத்திரிகையில் படம் பொட்டு விளம்பரம் வந்ததே அது தவறில்லை? பெண் என்றால் பேதை என்பார்கள். பெண்ணுலகம் மாசற்ற மாணிக்கங்கள் என்பார்கள். கணவனுக்கு அடங்கி ஒடுங்கி வாழ்க்கைத் தத்துவத்தை அறிந்தவள்தான் உண்மையில் பெண்...!"

"பெண்...பெண்! பெண் ஆணுக்கு அடிமையா?...தன் சுய இச்சையாக நடந்து கொள்ளுவதற்கு உரிமையேயில்லை?..." என்றாள் வசு தைரியமாக.

"வசு! வாய் கொழுத்துப் பேசாதே... அழகு இருக்கிறதென்ற மமதையால் அகிலத்தையே ஆளலாம் என்று நினைக்கிறாய்—தவறு! அடிமை என்கிறாய்—உரிமை வேண்டும் என்கிறாய்...நான் சொல்கிறேன்: "உனக்கு மூதலில் பதி பக்தி வேண்டும்...இப்பவும் சொல்கிறேன்—என்னுடன் சுக வாழ்க்கை நடத்த இஷ்டமா?...அல்லது நடிகையென வாழ இஷ்டமா? சொல்!......"

வசுந்தரா சற்று யோசித்தாள். அவள் கண்முன் இருவிதக் காட்சிகள் தோன்றின. ஒரு பக்கம் தன் கணவன் சந்துரு என்றும் போல ஒரே நிலையான வாழ்க்கை, மற்றொருபுறம் நாளுக்கு நாள்—நிமிஷத்துக்கு நிமிஷம் முன்னேறுகின்ற புகழ், பணம், ஆடம்பரம், இன்னும் இத்யாதி—தெரிந்தது. வசுவின் உள்ளக் குழப்பம் அவளை நிமிஷத்துக்கு நிமிஷம் மாறுகின்ற நிலைக்கே போவென்று முடிவாகக் கூறிவிட்டது.

வசுவின் முடிவைக் கேட்டதும் சந்துரு திகைத்தானேயன்றி சோபிக்கவில்லை. அவன் வசுவின் மனதை மாற்ற எண்ணினான்—

"வசு! எண்ணிப்பார்...நான் சொல்வதை. கட்டிய கணவனை உதாசீனம் செய்து, படவுலகமே கதியென்று எண்ணி—நடிகையென போர்வை போர்த்திக் கொண்டு, உன் மன நிலைப்படி போகத் துணிந்து விட்டாய்! வசு!... அழகுக்கு ஏற்படும் இன்னல்கள் எவ்வளவு என்பதை தெரிந்துக்கொள்ளாய், போ! உன் இஷ்டப்படியேபோ...ஆனால் ஒன்று—அழகைபலிகொடுக்காதே!...கற்பைக் காசுக்காக விற்காதே!...மாசற்ற உன் ஹிருதயந்தை களங்கமாக்காதே... விளக்கு இருக்கிற இடத்தில் விட்டில்கள் பல வரும். ஆனால் உன் சாமர்த்தியம்!

தேன் தனித்திருக்கிறதே என்று பலர் நக்கிப் பார்க்க துணிவார்கள். துணிந்து நின்று தடைசெய். உன் யௌவனத்தை பாழ்படுத்த பணக்கார வாலிப உலகமும்—கிழட்டு மாப்பிள்ளைகள் கூட—துணிவார்கள்—உஷார்! இன்று நீ எப்படி களங்கமின்றி போகின்றாயோ—அப்படியே திரும்பி வந்தால் எப்பொழுதும் ஏற்றுக்கொள்கிறேன் உன்னை...! இல்லையென்றால்...'பெண்ணுலகை மாய்க்க வந்த பேய்—விபசாரி!' என்று உலகம் தூற்றும்...போ...'' என்று முடிவாக கூறிவிட்டான் சந்துரு.

வசந்தரா துணிந்து விட்டாள். அவள் துணிந்ததற்கு அவளது அழகு தான் காரணமாக இருந்து ஒவ்வொரு நிமிஷமும் தூண்டிவிட்டது, வெளியேறு...வெளியேறு! என்று.

ஒரு மாதம் உருண்டோடிய வேகத்திலேயே சந்துருவின் உள்ளத்தை உருக்குலையச் செய்து விட்டது. எதிர்பாராத கலக்கம், வாழ்க்கைக் கசப்பு, மனக் குழைவு, எல்லாமே அவனை படுத்த படுக்கையாக்கி விட்டன. சதா வசுவை எண்ணி முணுமுணுப்பான் சந்துரு. மேலும் ஒரு வாரம் தொடர்ந்துவிட்டது. தன் உடல் நிலை நாளுக்குநாள் மோசமான நிலையை அடைந்தது. வசுவுக்கு சொல்லி அனுப்பலாமா என்று எண்ணுவான்—அடுத்த கணமே வைராக்கியம் வந்து விடும்!

அன்றிரவு, எதிர்பாராத விதமாக நடந்தது அந்நிகழ்ச்சி. சந்துரு தூங்காமல் படுக்கையில் புரண்டு படுத்தான். வீட்டுக்கு வெளியே கார் வந்து நின்ற சப்தம் கேட்டது, அடுத்த கணம் தலை விரிகோலமாக வசுந்தரா கண்ணீர் சிந்த வீட்டுக்குள் நுழைந்து—சந்துருவின் காலடியில் வீழ்ந்து, ஓவென்று கதறினாள். சக்தியற்று, படுக்கையில் கிடந்த சந்துரு வசு வந்துவிட்டதைக்கண்டதும் ஆவலாக எழுந்து உட்கார்ந்தான். 'வசு வந்து விட்டாயா!' என்று ஆர்வமாக வசுவை அணைந்துக் கொண்டான் சந்துரு. அவனது ஜுரவேகமும், மனோ வேகமும் மாயமாக மறைந்து விட்டது அப்பொழுது. வசுவின் நிலையைக் கண்டதும் சந்துரு ''ஏன் வசு! என்ன நடந்தது?''—ஏனிந்த பதட்டம்? ஏதாவது பயங்கரக் கனவு கண்டாயோ? அல்லது உண்மையிலேயே உனக்கு என் மீது அன்பு வந்துவிட்டதா?'' என்று கேட்டான்.

வசுந்தரா கண்களில் கண்ணீர் சிந்த—

ரூ. 1000 வெகுமதி தருவோம்

அற்புத சக்திவாய்ந்த

மாந்திரீக மோதிரம்

மந்திரம், மானஸீக வசிகர சக்தி இவற்றின் துணையில் இந்த மோதிரம் தயாரிக்கப்படுகிறது. இது அற்புதங்களை செய்ய வல்லது. தீர்க்க முடியாத சாதிக்க இயலாத காரியங்களை எல்லாம், இம்மோதிரத்தை அணிந்தவர்கள் சாதிப்பார்கள். நோய், ஆபத்துகள் இவற்றிலிருந்து இது உங்களைக் காக்கும். கெட்ட நக்ஷத்திரங்கள் உங்களை ஒன்றும் செய்யமுடியாது. இதை அணிபவர்கள் (ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும்) வசீகரிக்க முடியும். எவ்வளவு கல் நெஞ்சமாக இருப்பினும், (அவனோ, அவளோ) பெருமையோடு இருப்பினும் வரவேற்பார்கள்—காணாத போது கலங்குவார்கள். காதல், வழக்கு, சேவை இத்துறைகளிலே நீங்கள் வெற்றி கண்டு பெரும் பணம் திரட்டுவீர்கள். சுருக்கமாகச் சொன்னால் இந்த மோதிரம் உங்களுக்கு ஒரு பாதுகாப்பாளன் மாதிரி. இதை ஒரு முறை பரீட்சித்து அதன் பலனை அன்றிரவே காணுங்கள், விலை ரூ. 1/15-; விசேஷ மோதிரம் ரூ. 3/-; அதி விசேஷ சக்தி வாய்ந்தது. ரூ. 3/15. தபால் செலவு தனி. பலிக்காவிட்டால் பணம் வாபஸ் செய்யப்படும்.

(Principal, Shining Mesmerisem House (G. M.) Kartarpur (E. P.)

ஆழ்ந்த இதயத்திலிருந்து மேலெழுந்த துக்கத்தை அடக்கிக் கொண்டு—சொன்னாள்.

"நான் பாவி! கணவனுடைய கட்டளையை மீறினேன்...தெரியாமல்.. படுபாதகக் குழியில் விழ இருந்தேன்...அந்த சண்டாளன் என்னை தனியாக அழைத்து பெண்டாளத் துணிந்தான்! ..ஆ...! நான் கணவனுக்கு துரோகியா, இல்லை! இனி வேண்டாம் இந்த வாழ்வு...நடிகை வாழ்வு!......நாதா! ..என்னை மன்னியுங்கள்...என் தவறுகளை மன்னியுங்கள்!..."

வசுவின் ஆழ்ந்த பெருமூச்சு உஷ்ணமாக வெளிப்பட்டது.

சந்துரு—நடுங்குகின்ற வசுவை ஆர்வமாக அணைத்துக் கொண்டான். அந்த அணைப்பே அவளை மன்னித்து விட்டது.

134123

வைஜயந்திமாலா கார்டியன் வழக்கு

பிரபல நடிகை வசுந்தரா தேவி, தம்முடைய மகள் வையந்திமாலாவுக்கு தாமே தகுந்த கார்டியனாக வேண்டும் என்று தொடர்ந்த வழக்கை இம்மாதம் நீதிபதி கிருஷ்ணசாமி நாயுடு விசாரணைக்கு எடுத்துக் கொண்டார். வழக்கு மூன்று தினங்கள் நடைபெற்றது. நீதிபதி 14-ம் தேதியன்று இவ்வழக்கில் தீர்ப்புக் கூறினார்.

இவ்வழக்கில் வசுந்தரா தேவி, அவரது கணவர் எம். டி. ராமன், புத்திரி வைஜயந்திமாலா ஆகியோரர் விசாரிக்கப்பட்டனர்.

நீதிபதி தீர்ப்பில் பின்வருவாறு கூறினார்: "எம்: டி. ராமனுக்கு நிர்வாகத் திறமையில்லாமையால் எம். சுப்ரமணியம் என்ற வக்கீலை வைஜயந்தி மேஜராகும்வரை அவள் சொத்துக்களை நிர்வகிக்க மானேஜராக நியமிக்கிறேன். அதுவரை, வைஜயந்திமாலா இதுவரை சம்பாதித்துள்ள சொத்துக்களுக்கு ராமன் கார்டியனாக இருப்பார். நடுவில் வைஜயந்திக்குக் கல்யாணம் செய்வதாக இருந்தால் கோர்ட்டாரின் அனுமதி பெறவேண்டும். வசுந்தரா நாட்டியத் துறையிலும், சினிமாத் துறையிலும் நல்ல அனுபவம் உள்ளவர். ஆகவே ராமன் கோஷ்டியார், ஒப்பந்தங்கள் செய்து கொள்வதில் அவருடைய யோசனையைக் கேட்டுக் கொள்வது நலம். வைஜயந்திமாலாவை எந்த சமயத்திலும் எந்த இடத்திலும் வசுந்தரா போய்ப் பார்க்க ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். வைஜயந்திமாலாவின் குடும்பச் செலவுக்கு மாதா மாதம் ரூ. 750 கொடுக்கப்பட வேண்டும்,"

Printed by P. ARUNACHALAM at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras-1. Edited and Published by P. R. S. GOPAL (Gundoosi), at 25, Godown Street, Madras-1. Telephone: 4316.

GUNDOOSI April 1950 Regd. No. M. 4924

THE ORGANIZING HAND

THAT *Fulfils* YOUR NEEDS IN PRINTING

முயற்சி வீணாவதைத்
தடுக்கலாம்

அழகாக அச்சடிப்பது ஒரு தனிக் கலை. அதற்கு நீண்ட நாள் அநுபவம் அவசியம். நானாவித அச்சு வேலைகளிலும், சிறந்த பிளாக்குகள் தயாரிப்பதிலும் எங்களுக்குள்ள பரந்த அநுபவத்தை உபயோகித்துக்கொண்டு, உங்கள் முயற்சி வீணாவதைத் தடுக்கலாம்.

EFFICIENT MANAGEMENT

EXCELLENT PRINTING

PHONE 4037

COMMERCIAL PRINTING & PUBLISHING HOUSE..
(PRINTERS & BLOCKMAKERS)
46, ARMENIAN ST... MADRAS

murli